# අන්තරායකර ඖෂධ පාලක ජාතික මණ්ඩලය
# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை
# National Dangerous Drugs Control Board




## වාර්ෂික වාර්තාව
## ஆண்டறிக்கை
## Annual Report

# 2019

# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

## ஆண்டறிக்கை - 2019

# பொருளடக்கம்


பக்கம்

1. அறிமுகம் ........................................ 01

2. தொலைநோக்கும் பணித்திட்டமும் ........................................ 02

3. சபையின் தத்துவங்கள் ........................................ 03

4. சபையின் கூட்டிணைத் தகவல்கள் ........................................ 04

5. நிறுவனக் கட்டமைப்பு 2019 ........................................ 06

6. இலங்கையின் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தின் தற்காலப் போக்குகள் 08

7. கூட்டிணை ஆளுகை ........................................ 11

8. செயற்பாடு பற்றிய மீளாய்வு ........................................ 14

9. வருமானக் கூற்று ........................................ 102

10. ஐந்தொகை ........................................ 103

11. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் ........................................ 105

12. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ........................................ 110

13. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான தவிசாளரின் அவதானிப்புகள் ........................................ 120

**பின்னிணைப்புகள்:** I. சபையின் நிறைவேற்றுப் பதவியினர் ........................................ 134

II. கணக்கீட்டுக் குறிப்புகள் ........................................ 136

# 01. அறிமுகம்



தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையானது (NDDCB) 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். இச்சபை, 1984 ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதியிலிருந்து இயங்கி வருகிறது. பாதுகாப்பு அமைச்சின் நோக்கெல்லையின்கீழ் இச்சபை செயற்பட்டது

அபாயகரமான ஔடத துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான தேசிய கொள்கையை மீளாய்வுசெய்து சட்டவிரோதமான போதையூட்டும் ஔடதங்களின் பாவனையைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் திணைக்களங்களுக்கும் ஒத்தாசை வழங்கி போதையூட்டும் ஔடத தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், சிகிச்சையளிப்பு முறைகளையும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளையும் மேம்படுத்துதல், கள ஆராய்ச்சிகளையும் கற்கை ஆய்வுகளையும் மேற்கொள்ளல், தரவுத்தளங்களைப் பேணிவருதல் முதலான கருமங்களை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சிரமேற்கொண்டு வருகிறது. அத்துடன், அரசாங்கத்தினால் ஏற்பிசைவளிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் (UN) மற்றும் சார்க் (SAARC) அமைப்பின் கீழ் அமுலிலுள்ள சர்வதேச சமவாயங்களின் கடப்பாட்டை நிறைவேற்றுதல், சம்பந்தப்பட்ட நிறுவனங்களை மேற்பார்வைசெய்தல், அவற்றுக்கு உதவுதல் ஆகிய கருமங்களையும் சபை சிரமேற்கொண்டு வருகிறது.

குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழில்நுட்ப ரீதியான உதவிகளை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை வழங்கி வருகிறது. அரசாங்கத்துடனும் சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடனும் (INCB) இச்சபை ஒத்துழைத்துச் செயலாற்றுவதுடன், போதையை உண்டுபண்ணும் ஔடதங்கள் பற்றிய ஆணைக்குழுவையும் (CND) பிரதிநிதித்துவம் செய்கிறது.

## 02. தொலைநோக்கும் பணித்திட்டமும்

### தொலைநோக்கு

போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த பாதக தாக்கங்களை முகாமைசெய்வதில் தெற்காசியாவின் முன்னோடியாக இலங்கையை நிலைபெறச்செய்தல

### பணித்திட்டம்

போதையூட்டும் ஔடதங்களினால் ஏற்படக்கூடிய எல்லாப் பிரச்சினைகளையும் ஒழிக்குமுகமாக எல்லா சமூகப் படிநிலைகளுடனும் பொது மக்களுடனும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் இணைந்து முனைப்புடன் செயலாற்றக்கூடிய ஒரு சூழலை உருவாக்குதல்.

போதையூட்டும் ஔடதங்களின் பாவனையையும் வியாபாரத்தையும் ஊக்கமிழக்கச்செய்யும் ஒரு சமூக சூழலை உருவாக்குதல்.

போதையற்ற ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கு தேசிய அரசியல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புதல்.

தேசிய கொள்கையை அமுல்படுத்துவதில் தலைமைத்துவம் வழங்கும் தேவை ஏற்படும்போது தேசிய கொள்கையை நுண்ணாய்வுக்கு உட்படுத்துவதற்கும் மதிப்பீடுசெய்வதற்கும் பயன்கூர்மிக்க விதத்தில் அதனைச் செயற்படுத்துவதற்கும் தேவையான தகவல்களையும் ஒரு தரவுத்தளத்தையும் உருவாக்குதல்.

தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் தொடர்பில் சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுதல்.

## 03. சபையின் தத்துவங்கள்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்கள்

அ. அபாயகரமான ஔடதங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும் தொடர்பிலான ஒரு தேசிய கொள்கையை வகுத்தமைத்தலும், அதனை மீளாய்வு செய்தலும், அத்தகைய கொள்கைகள் தொடர்பில் அமைச்சருக்கு மதியுரை வழங்குதலும், பரிந்துரைகளைச் செய்தலும்.

ஆ. சபையின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக நியாயமாகத் தேவைப்படக் கூடியவாறான தகவல்களையும் விபரங்களையும் தனிநபர்களிடமிருந்தும் ஒழுங்கமைப்புகளிலிருந்தும் அரச திணைக்களங்களிலிருந்தும் அரச கூட்டுத்தாபனங்களிலிருந்தும் கோருதல்.

இ. சபையின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக தேவைப்படுத்தப்படும் நன்கொடைகளையும் மானியங்களையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளல்.

ஈ அபாயகரமான ஔடத துஷ்பிரயோகத்தைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

உ. போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதலும், சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் அபாயகரமான ஔடதங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் தேசிய கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும்.

ஊ. அபாயகரமான ஔடத துஷ்பிரயோகத்தின் பரம்பல், ஏதுவாகும் காரணிகள் மற்றும் அதனோடு இணைந்த சட்ட, மருத்துவ, விஞ்ஞான, சமூக, கலாசார மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பிலான ஆராய்ச்சிக் கற்கைகளைப் பொறுப்பேற்று நடாத்துதலும் கண்காணித்தலும்.

எ. போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச முகவராண்மைகளுடன் தொடர்புகளைப் பேணுதல்.

ஏ. அசையும் அல்லது அசையா ஆதனங்களைக் கையகப்படுத்துதல், வைத்திருத்தல், வாடகை அல்லது குத்தகை பெறல் அல்லது ஈடுவைத்தல், அடகுப்பொருளாக்குதல், விற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்ப்புச்செய்தல்.

## 04. சபையின் கூட்டிணைத் தகவல்கள்

**நிறுவனத்தின் பெயர்** : தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

**சட்ட வடிவம்** : 1986 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க மற்றும் 1990 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட சபை.

**சபையின் அமைப்பு**

சபையின் தற்போதைய அமைப்பு பின்வருமாறு:

அ. அமைச்சரினால் நியமிக்கப்படும் தவிசாளர் ஒருவரும் ஏனைய மூன்று உறுப்பினர்களும்.

ஆ. கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

இ. பொலிஸ் மாஅதிபர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

ஈ. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

உ. சுங்கப் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

ஊ. அரசாங்கப் பகுப்பாய்வாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

எ. ஆயுர்வேத ஆணையாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர் அத்துடன்

* திறைசேரியின் பிரதிநிதி ஒருவர்.

## சபை உறுப்பினர்கள் - 2019

01. **பேராசிரியர் சமன் அபேசிங்க**
தவிசாளர்
தேசிய அபாயகர ஔடதங்கள்
கட்டுப்பாட்டுச் சபை
(2018 ஏப்ரல் தொடக்கம்)

02. **வண. குப்பியாவத்தே போதானந்த தேரர்**
பணிப்பாளர்
“மித்துரு மித்துரோ செவன”
பெல்மதுல்ல

03. **திரு. டப்ளியு.பிரேமதாச**
14, தியலும பீச் ஹோட்டல்
கொஸ்லந்த

04. **திரு.பீ.ஜி.சுமனபால**
பணிப்பாளர்
சமூகப் பாதுகாப்பு அலகு
இலங்கை சுங்கம்
இல.40,பிரதான வீதி, கொழும்பு 11

05. **வைத்தியர் கமல் ஜயசிங்க**
பிரதான நிறைவேற்று அலுவலர்
தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை
இல.120, நொரிஸ் கெனல் வீதி
கொழும்பு 10

06. **திரு. கே.டி.சி.எஸ்.குமாரதுங்க**
ஆயுர்வேத ஆணையாளர்
ஆயுர்வேத திணைக்களம்
மகரகம

07. **திரு. எச்.யூ.பிரேமதிலக**
மேலதிக செயலாளர்
கல்வி அமைச்சு
இசுருபாய, பத்தரமுல்ல

08. **திரு. எம்.ஆர்.லத்தீப்**
சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்
கட்டளையிடும் அதிகாரி
விசேட அதிரடிப்படை
-பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07

09. **திரு. ஏ.வெலிஅங்க**
அரசாங்க பகுப்பாய்வாளர்
அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்
இல.31, இசுரு மாவத்தை
பெலவத்த, பத்தரமுல்ல

10. **திரு. ஏ.சாரங்கன் (அவதானிப்பு)**
பணிப்பாளர்
அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்
நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு
கொழும்பு 01

### பணியாள்தொகுதி

சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 248 பணியாள்தொகுதியினர் அடங்குகின்றனர்.

### முகவரி / தகவல்களுக்கு:

| | |
|---|---|
| இல | : 383, கோட்டே வீதி, இராஜகிரிய |
| தொலைபேசி | : 0112868794 - 6 |
| தொலைநகல் | : 0112868791/2, 0112869805 |
| மின்னஞ்சல் | : mail@nddcb.gov.lk |
| இணையத்தளம் | : www.nddcb.gov.lk |
| முகநூல்: | : facebooknddcb.gov.lk |

### கணக்காய்வு:

கணக்காய்வாளர் தலைமையதிபதி, கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்

### உத்தியோகபூர்வ வங்கி:

இலங்கை வங்கி

## 05. நிறுவனக் கட்டமைப்பு 2019

*National Dangerous Drugs Control Board - Organizational Structure*



| Grade | Code | Post |
|---|---|---|
| **Chairman** | | தவிசாளர் 01 |
| **HM 2-1** | DG | பணிப்பாளர் நாயகம் 01 |
| **HM 1-1** | D (A) | பணிப்பாளர் - நிருவாகம் 01 |
| | D (F) | பணிப்பாளர் - நிதி 01 |
| | D (TR) | பணிப்பாளர் - சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு மற்றும் வெளிநிலைச் சேவைகள் 01 |
| | D (R) | பணிப்பாளர் (ஆராய்ச்சி) - 01 |
| | D (PET) | பணிப்பாளர் - தடுப்பு, கல்வி மற்றும் பயிற்சி – 01 |
| | | பணிப்பாளர் (பணியமர்வுசெய்யப்பட்ட மற்றும் தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்கள்) – அமைச்சரினால் நியமிக்கப்படுவார் 01 |
| **MM 1-1** | BS/LO | சபை செயலாளர்/சட்ட உத்தியோகத்தர் 01 |
| | IA | உள்ளகக் கணக்காய்வாளர் 01 |
| | DD/AD (A) | உதவிப் பணிப்பாளர் - நிருவாகம் 01 |
| | DD/AD (F) | உதவிப் பணிப்பாளர் - நிதி 01 |
| | DD/AD (T&R) | உதவிப் பணிப்பாளர் - சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு 01 |
| | DD/AD(O) | உதவிப் பணிப்பாளர் (வெளிநிலைச் சேவைகள்) 01 |
| | DD/AD (DPTC) | உதவிப் பணிப்பாளர் - பணியமர்வுசெய்யப்பட்ட மற்றும் தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்கள் 01 |
| | DD/AD (R) | உதவிப் பணிப்பாளர் - ஆராய்ச்சி 01 |
| | DD/AD (SR) | உதவிப் பணிப்பாளர் - விஞ்ஞான ஆராய்ச்சி 01 |
| | DD/AD (PE&T) | உதவிப் பணிப்பாளர் - தடுப்பு, கல்வி மற்றும் பயிற்சி 01 |
| | DD/AD(Precursor) | உதவிப் பணிப்பாளர் - முன்னோடி இரசாயனங்கள் 01 |
| **JM 1-1** | AO | நிருவாக உத்தியோகத்தர் 01 |
| | M – T&M | முகாமையாளர் - போக்குவரத்து மற்றும் பராமரிப்பு 01 |
| | HRM | முகாமையாளர் - மனித வளம் 01 |
| | M – IT | முகாமையாளர் - தகவல் தொழில்நுட்பம் 01 |
| | FO | நிதி உத்தியோகத்தர் 01 |
| | M | முகாமையாளர் - (நிலையங்கள்) 06 |
| | C | ஆலோசனை உத்தியோகத்தர் - (நிலையங்கள்) 16 |
| | IO | புலனாய்வு உத்தியோகத்தர் (சிகிச்சையளிப்பு) 03 |
| | OR | வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர் 04 |
| | RO | ஆராய்ச்சி உத்தியோகத்தர் 07 |
| | SO | விஞ்ஞான உத்தியோகத்தர் 14 |
| | DE&IO | போதையூட்டும் ஔடத கல்வி மற்றும் தகவல் 07 |
| | LB | நூலகர் 01 |
| | ALO | உதவி சட்ட உத்தியோகத்தர் 01 |
| **MA 5-2** | **AC** | உதவி ஆலோசகர் 26 |
| | **AOO** | உதவி வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர் 19 |
| | **ARO** | உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் 08 |
| | **CA/P** | முறைமைப் பகுப்பாய்வாளர் மற்றும் செய்நிரல் ஆக்குநர் 02 |
| | **ASO** | உதவி விஞ்ஞான உத்தியோகத்தர் 04 |
| | **ADE&IO** | உதவி போதையூட்டும் ஔடதக் கல்வி மற்றும் தகவல் உத்தியோகத்தர் 09 |
| **MA 2-1** (தொழில்நுட்பம்) | BK | கணக்குப் பதியுநர் 01 |
| | N | தாதி உத்தியோகத்தர் 05 |
| | CA | உளவள ஆலோசனை உதவியாளர் (நிலையங்கள்) 91 |
| | ORA | வெளிநிலைச் சேவை உதவியாளர் 08 |
| | RA | ஆராய்ச்சி உதவியாளர் 04 |
| | ITA | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் 02 |
| | LT | ஆய்வுகூட தொழில்நுட்பவியலர் 02 |
| | DE&IA | போதையூட்டும் ஔடத கல்வித் தகவல் உதவியாளர் 09 |
| **MA 1-1** (தொழில்நுட்பம் சாரா) | **MA** | முகாமைத்துவ உதவியாளர் 34 |
| **PL – III** | DR | சாரதி 15 |
| **PL – II** | LA | நூலக உதவியாளர் 01 |
| **PL – I** | OA | அலுவலகப் பணி உதவியாளர் 16 |

**2019.12.31 அன்றுள்ளவாறான பணியாட்குழு - 248**

# 06. இலங்கையின் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தின் தற்காலப் போக்குகள்

## 1. இலங்கையில் போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பல்

- பரவலாகப் பயன்படுத்தப்படும் சட்டவிரோத போதையூட்டும் ஔடதமான கஞ்சாவை 14 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் 1.9% சதவீதத்தினர் பயன்படுத்துகின்றனர். 301,898 பேர் கஞ்சாவைப் பயன்படுத்துவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- இலங்கையில் 14 வயதுக்குக் கூடிய சனத்தொகையில் 92,540 பேர் அல்லது 0.6% சதவீதத்தினர் ஹெரொயினைப் பயன்படுத்துகின்றனர்.

- ஆண்களின் சனத்தொகை இடையே (14 வயதுக்கு மேற்பட்ட) ஹெரொயின் பாவனை 1.2% சதவீதமாகக் காணப்படுவதுடன், பெண்களின் சனத்தொகை இடையே 0.017% ஆகும்.

- 14 வயதுக்குக் கூடிய சனத்தொகையில் 1.5% சதவீதத்தினர் மருத்துவ நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் ஏதேனுமொரு மருந்து வகையை துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

- போதையூட்டும் ஔடதங்களைப் பயன்படுத்தும் நபர்கள் மத்தியில் பல்வகை போதையூட்டும் ஔடதங்களின் பாவனை காணப்படுவது பொதுவான ஒரு போக்காக உள்ளது.

- இலங்கையில் நாளாந்தம் 70,862 பேர் ஹெரொயின் பயன்படுத்துவதுடன், 178,643 பேர் நாளாந்தம் கஞ்சாவைப் பயன்படுத்துகின்றனர்.

- 14 வயதுக்குக் கூடிய சனத்தொகையில் 39.4% சதவீதத்தினரும் 31.1% சதவீதத்தினர் அற்கஹோலையும் புகைப்பானையும் (சிகரட்) பயன்படுத்துபவர்களாவர்.

- போதையூட்டும் ஔடத பாவனையில் உயர் பரம்பல், மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் காணப்படுகிறது.

## 2. போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகளின் போக்குகள்

2019 ஆம் ஆண்டில் இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த தவறுகளுக்காக 89,321 பேர் கைதுசெய்யப்பட்டனர். 2018 ஆம் ஆண்டுடன் அதனை ஒப்பிடும்போது 9.5% சதவீத குறைவொன்றாகும். போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த தவறுகளுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையில் ஹெரொயின் சார்ந்த தவறுகளுக்காக 48.8% சதவீதத்தினரும், கஞ்சா சார்ந்த தவறுகளுக்காக 51% சதவீதத்தினரும் அடங்குவர். போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த தவறுகளுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையில் பெரும்பாலும் மேல் மாகாணத்திலிருந்தும் (55.4%) வடமேல் மாகாணத்திலிருந்தும் (10.8%) மத்திய மாகாணத்திலிருந்தும் (7%) பதிவாகியுள்ளது. கைதுசெய்யப்பட்ட மொத்த நபர்களின் எண்ணிக்கை கொழும்பு மாவட்டத்தில் 34.4 சதவீதமும், கம்பஹா மாவட்டத்தில் 16.5% சதவீதமும், குருணாகல் மாவட்டத்தில் 7.5% சதவீதமும் என்ற அடிப்படையில் பதிவாகியுள்ளது. 2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த தவறுகளுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையின் போக்கு 15-64 வயதுக்கு இடைப்பட்ட சனத்தொகையில் ஓரிலட்சம் பேருக்கு 612 பேராவர்.

### 2.1 கஞ்சா

2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகளின் அதிகமானவை (45,923) கஞ்சா சார்ந்த தவறுகளுக்காக கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், கஞ்சா சுற்றிவளைப்புகளில் கணிசமானவை கொழும்பு மாவட்டத்திலிருந்து (28.6%) அறிக்கையிடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் நாடுபூராவும் 7,071 கி.கி. கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. மேல் மாகாணத்திலிருந்து கஞ்சா சார்ந்த தவறுகளுக்காக கைதுசெய்யப்பட்டவர்களின் சதவீதம் 46.19 ஆகுமென்பதுடன், தென் மாகாணத்தில் 10% சதவீதமும், மத்திய மாகாணத்தில் 8% சதவீதமும், வடமேல் மாகாணத்தில் 10.6% சதவீதமும் ஆகும். 2019 ஆம் ஆண்டில் கஞ்சா சார்ந்த கைதுகளின் போக்கு 15-64 வயதுக்கு இடைப்பட்ட சனத்தொகையில் ஓரிலட்சம் பேருக்கு 315 பேராகும்.

கஞ்சாவில் அடங்கியிருக்கும் நச்சுத்தன்மையை நீக்கிவிட்டு ஆயுர்வேத ஔடதங்களைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. ஆயுர்வேத வைத்தியர்களும் ஆயுர்வேத ஔடத கூட்டுத்தாபனமும் இதன் பிரதான சட்டரீதியான வாடிக்கையாளர்களாவர். 2019 ஆம் ஆண்டில் ஆயுர்வேத ஔடதங்களைத் தயாரிப்பதற்கு 222 கி.கி. கஞ்சா பயன்படுத்தப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் மட்டும் ஆயுர்வேத ஔடத கூட்டுத்தாபனம் மதன மோதகம், காமேஷ்வரீ மோதகம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு 212.8 கி.கி. கஞ்சாவைப் பயன்படுத்தியுள்ளது.

### 2.2 ஹஷீஸ்

கஞ்சா சார்ந்த ஓர் உற்பத்தியான ஹஷீஸ் பாவனை இலங்கையில் படிப்படியாக அதிகரித்து வருகிறது. 2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய புள்ளிவிவரத் தரவுகளுக்கு அமைய ஹஷீஸுடன் சம்பந்தப்பட்ட 127 சம்பவங்கள் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் 121 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### 2.3 ஹெரொயின்

ஹெரொயின் சம்பந்தமாக கைதான நபர்களில் கணிசமானவர்கள் ஹெரொயின் பயன்படுத்தியவர்கள் என்பதுடன், சொந்தப் பாவனைக்காக தம்வசம் வைத்திருந்த குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்டிருந்தனர். 2019 ஆம் ஆண்டில் 1,740 கிலோ கிராம் ஹெரொயின் சட்டத்தின் பிடியில் சிக்கியதுடன் 40,970 பேர் கைதாகினர். ஹெரொயின் சம்பந்தப்பட்ட கைதுகள் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2019 ஆம் ஆண்டில் 0.06% சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் ஹெரொயின் சம்பந்தப்பட்ட கைதுகளின் போக்கு நாட்டின் 15-64 வயதிடைப்பட்ட சனத்தொகையில் ஓரிலட்சம் பேருக்கு 281 பேர் ஆகவுள்ளது.

## 3. சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் சேவைகள்

இலங்கையில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான வதிவிட மற்றும் புனர்வாழ்வளிப்புச் சேவைகளை வழங்கி வருகின்றன. 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான கட்டாய சிகிச்சையளிப்பு வசதிகள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்குரிய சிகிச்சைகளை அளிப்பதற்கான 04 வதிவிட சிகிச்சையளிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. கொழும்பு (தலங்கம), கண்டி, காலி, ஊராபொல (நிட்டம்புவ) ஆகிய இடங்களில் அவை அமைந்துள்ளன. இதற்கு மேலதிகமாக, வெளிநிலைச் சேவை நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

மேற்படி சிகிச்சையளிப்பு நிலையங்களில் உளவியல் சிகிச்சை முறை கையாளப்படுகிறது. தனிநபரையும் குடும்பத்தையும் மையப்படுத்திய ஆலோசனைச் சேவை, நச்சுத் தடைநீக்க சிகிச்சைகள், உடலியற் செயற்பாடுகள், உள நலம், வீட்டு மற்றும் வெளிநிலைச் செயற்பாடுகள்,

உளச் சிகிச்சைகள், கல்விசார் நடவடிக்கைகள், வாழ்க்கைத் தொழிற்பயிற்சிகள், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன இச்சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் அடங்கும்.

2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட 3,613 சேவைபெறுநர்கள் சிகிச்சையளிப்புச் சேவைகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். அச்சேவைபெறுநர்களில் 1,161 பேர் (32.1%) தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையிலிருந்தும் 681 பேர் (18.8%) சிறைச்சாலை சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமும், 681 பேர் (18.8%) சிறைச்சாலை சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமும், 735 பேர் (20.3%) அரச சார்பற்ற அமைப்புகள் மூலமும், 1,036 பேர் (28.7%) புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் கீழ் இயங்கும் கந்தகாடு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்தின் மூலமும் சிகிச்சைகளையும் புனர்வாழ்வளிப்புச் சேவைகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அச்சேவைபெறுநர்களில் பெரும்பாலானவர்கள் (25.4%) கொழும்பு மாவட்டத்திலிருந்து சென்றவர்களாவர். சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டவர்களில் 40% சதவீதமானவர்கள் 30 வயதுடையவர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்களாவர். 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டில் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 18% சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

### 4. சிறையிடப்படல்

2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் காரணமாக சிறையிடப்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கை 29,164 ஆகும். அவர்களுள், நச்சுத்தன்மை வாய்ந்த போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த தவறுகளுக்காக 15,123 பேர் சிறையிடப்பட்டுள்ளனர். அது, மொத்த சிறையிடப்பட்டவர்களின் சதவீதத்தில் 51.9% ஆகும். 2019 ஆம் ஆண்டில் கஞ்சா சார்ந்த தவறுகளுக்காக 2,131 (14.1%) பேரும், ஹெரொயின் தொடர்பான தவறுகளுக்காக 11,997 (79.3%) பேரும் சிறையிடப்பட்டுள்ளனர். 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த தவறுகளுக்காக சிறையிடப்பட்டவர்களின் சதவீதம் 17% ஆல் அதிகரித்துள்ளது.

## 07. கூட்டிணை ஆளுகை

**சபை**

தவிசாளர் உட்பட நியமிக்கப்பட்ட 04 உறுப்பினர்களையும் பதவிவழியால் நியமிக்கப்பட்ட 06 உறுப்பினர்களையும் சபை கொண்டமைந்துள்ளது. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 6 (3) இற்கமைய சபை குறைந்தபட்சம் மாதமொரு முறையாவது கூடும்.

**உப குழுக்கள்**

போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான சட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் அடங்கிய சட்ட வினைப்படுத்துகை உப குழு இலங்கையில் போதையூட்டும் ஔடத உபத்திரவங்களை ஒழித்துக்கட்டுவதற்கும், போதையூட்டும் ஔடதங்களின் வழங்கலையும் துஷ்பிரயோகத்தையும் இயன்றளவு குறைப்பதற்கும், சட்டத்தை வினைப்படுத்துவதற்கும், பலப்படுத்துவதற்கும் அவசியமான முக்கிய தீர்மானங்களை மேற்கொண்டு மிகவும் வினைத்திறனான ஒரு குழுவாகச் செயற்படுகிறது.

காலத்திற்குக் காலம் போதையூட்டும் ஔடத வழங்கல்களும் துஷ்பிரயோகமும் சம்பந்தமாக உலகில் உருவாகும் போக்குகளுக்கு முகங்கொடுப்பதற்கு ஏற்ற வகையில் இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான சட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக செயல்வலுவிலுள்ள சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மீளாய்வு செய்தல், திருத்துதல், புதிய சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் ஆக்குதல் என்பவற்றுக்கு அவசியமான நடவடிக்கைகளை சபையின் சட்டவாக்க உப குழு மேற்கொள்கிறது.

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுக்கமைய, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை நிறுவுவது கட்டாயத் தேவைப்பாடாகும். ஆகையால், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கணக்காய்வு நிறுவனத்திற்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்பட்டிருப்பது அவசியமாகும்.

அதற்கமைய, 41(2) ஆம் பிரிவின் பிரகாரம், பகிரங்க தொழில்முயற்சிகளுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைப் பலப்படுத்துவதற்காக பகிரங்க தொழில்முயற்சிகளுக்கான நல்லாட்சி வழிகாட்டுநெறிகளின் பந்தி 7.4.1 இன் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஆகையால், திறைசேரியின் பிரதிநிதியொருவர் உள்ளிட்ட குறைந்தபட்சம் நிறைவேற்றுநர் அல்லாத சபை அங்கத்தவர்கள் மூவரைக் கொண்டதாக இருப்பதுடன், திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலரொருவர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுத் தவிசாளராகச் செயற்படுவார்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலரொருவரும் விடயத்திற்குரிய அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரும் அவதானிப்பாளர்களாகக் கலந்துகொள்வார்கள் என்பதுடன், சபையின் உள்ளகக் கணக்காய்வாளரினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் கூட்டப்படும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிதி மற்றும் சொத்து முகாமைத்துவத்தை முன்னேற்றுவதற்கும் கணக்காய்வு நிறுவனத்தின் அனைத்துக் கூறுகளையும் முற்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான சிபார்சுகளை

வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கு உத்தேச பொதுப் பணிகளை சிபார்சுசெய்தல்**

1. உள்ளகக் கணக்காய்வு அலகின் நோக்கெல்லையைத் தீர்மானித்தல்.
2. வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை முன்னரே மீளாய்வுசெய்து அனுமதித்தல்.
3. உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மீதமைந்த நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வுசெய்தலும் மதிப்பீடுசெய்தலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முரண்பாடுகள் சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுத்தலும்.
4. கணக்காய்வு ஐயவினாக்களையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளையும் தொடர்ந்தும் மீளாய்வுசெய்தலும் விலகல்கள் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு அவசிய நடவடிக்கை எடுத்தலும்.
5. வரவுசெலவு மீளாய்வு அறிக்கைகள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களை மீளாய்வுசெய்தலும் கிரயப் பயனுறுதி, செயலாற்றுகை, இலக்குகளை அடைந்துகொள்ளலை மதிப்பீடுசெய்தலும்.
6. வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், வருடாந்த பெறுகைத் திட்டம் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகளை மீளாய்வுசெய்தல்.
7. நிதிக்கூற்றுக்கள், ஏனைய மாதாந்த, காலாண்டு, அரையாண்டு, ஆண்டு அறிக்கைகள் முதலான காலஅடிப்படையிலான சமர்ப்பிப்புகளைக் கண்காணித்தல்.
8. திறைசேரிச் சுற்றறிக்கைகளும் வேறு ஒழுங்குவிதிகளும் குறித்து அறிவுறுத்துதல், நியதிச்சட்ட மற்றும் வேறு சட்டதிட்டங்களைப் பின்பற்றும் தேவையைச் சுட்டிக்காட்டுதல்.
9. அனைத்து மனித மற்றும் ஏனைய வளங்களின் நிருவாகம் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மீளாய்வுசெய்தலும், தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அறிக்கைகளைச் சமர்ப்பித்தலும்.
10. பணியாளர் ஒழுக்கம் சார்ந்த விடயங்களை மீளாய்வுசெய்தல், வீண்விரயத்தையும் ஊழலையும் தவிர்த்தல், நிறுவனத்தின் கிரயப் பயனுறுதியை அடைந்துகொள்வதற்கு மீது இட்டுச் செல்லல்.
11. பகிரங்க தொழில்முயற்சிகள் குழுவின் (COPE) வழங்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல்.
12. குழுச் சிபார்சுகளின் அடிப்படையிலான செயற்பாடுகள் எதிர்பார்த்தவாறு அடையப்பெற்றுள்ளதா என்பதைக் கண்காணித்தல்.
13. பயன்கூர் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றை ஏற்படுத்துவதற்கும் தற்போதைய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளைப் பலப்படுத்துவதற்கான முக்கிய கருவியாகப் பயன்படுத்துதலும்.

## 2019 ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயலாற்றுகை

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, நிறுவனத்தின் வினைத்திறனும் விளைத்திறனும் அதிகரிக்கக்கூடிய விதத்தில் உள்ளக முகாமைத்துவத்தை மதிப்பீடு செய்ததுடன், கிரயத்தைக் குறைத்தல் மற்றும் தேவையற்ற விரயத்தைக் குறைப்பதற்காக தவறுகளைச் சீர்செய்வதற்குத் தேவைப்படும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. இதன் அடிப்படையில், முகாமைத்துவத்திற்கு அதன் செயற்பாட்டை முன்னேற்றுவதற்கு குழு உதவியுள்ளது. இது தவிர, 2019 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்குரிய சிபார்சுகள் குறித்து பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குழு அவதானிப்பாளர்கள், சபையின் தவிசாளர், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள், பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சிரேஷ்ட பணிக்குழாமினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கும் அதன் பணிகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கும் வழங்கிய ஒத்துழைப்பை பெரிதும் போற்றுகின்றோம்.

**C.W.K. தர்மசேன**

தலைவர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

## 08. செயற்பாடு பற்றிய மீளாய்வு

### 8.1 தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

பண்புத்தரமிக்க கல்வி மற்றும் பயிற்சியின் ஊடாக போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் குறைந்த, தணிக்கப்பட்ட அதேபோல், பாதுகாப்பான ஒரு சூழலை உருவாக்கிக்கொள்ளும் நோக்கில் மனிதர்களை நாம் வலுவூட்டுகின்றோம்.

இலங்கையின் நியதிச்சட்டத்திற்கும் சர்வதேச சமவாயங்களுக்கும் அமைவாக போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தின் பரம்பலைக் குறைப்பதற்கும் போதையூட்டும் ஔடதங்கள்மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கும் போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு உரித்தாக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்கும் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு முனைப்புடன் தன் பங்களிப்பை ஆற்றுகிறது.

நாட்டில் நிலவும் போதையூட்டும் ஔடதப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு தடுப்பு, சமூக ஒருங்கிணைப்பு, பேண்தகு அபிவிருத்தி ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தி, போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வியைக் குறைப்பதற்கு ஒப்பீட்டளவான, பரந்த அணுகுமுறைகளுடன்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகிறது.

சான்றுகள் மீதமைந்த விஞ்ஞான ரீதியானதும் பண்புத்தரமுள்ளதுமான தடுப்புக் கல்வியை வழங்குவதற்காக தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனும் கல்விமான்களுடனும் இணைந்து தொடர்ச்சியாக எமது பிரிவு செயலாற்றி வருகிறது.

போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தைக் குறைப்பதற்காக பாடசாலை மாணவ மாணவிகள், இளைஞர் யுவதிகள், பல்கலைக்கழக மாணவ மாணவிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், தனியார்துறை நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஆக்கபூர்வமான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான காலத்தின் தேவையை தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு அடையாளம் கண்டுள்ளது. அத்தேவைப்பாட்டை நிறைவுசெய்து சமூகத்தில் போதையூட்டும் ஔடத தடுப்புக் கல்வியையும் விழிப்புணர்வையும் அதிகரிப்பதற்கு சிறப்பான முறையில் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு தொழில்சார் பணியாள்தொகுதியினால் உளவியல்சார் கற்றல் கோட்பாடுகளின் மீதமைந்த பாடவிதானமொன்றை அடிப்படையாகக்கொண்டு எல்லா நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

#### பாடசாலை மாணாக்கருக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

2019 ஆம் ஆண்டில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் பாடசாலை மாணாக்கர்கள் உள்ளிட்ட ஏனைய ஆபத்தான நடத்தைகளின்பால் தூண்டப்படும் சமூக உளவியல் காரணிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமூகத்தில் போதையூட்டும் ஔடதங்களின் பாவனையைக் குறைப்பதற்கான ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்கள் நாடுபூராவும் அமுல்படுத்தப்பட்டன. சவால்மிக்க சந்தர்ப்பங்களை நேர்ப்படியான விதத்தில் கட்டுப்படுத்தக்கூடிய விதத்திலான வாழ்க்கைத் திறன்களை வளர்த்து, மாணாக்கர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே குறித்த நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கமாகும்.

2019 ஆம் ஆண்டில் பாடசாலை மாணாக்கர்களுக்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தரவுகள் பின்வருமாறு:-

ஆண்டின் ஆரம்பத்தில் 500 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது. அதன்மூலம் 130,000 பாடசாலை மாணவ மாணவிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டது. தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியளவில்

390 நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் மூலம் 79,863 பாடசாலை மாணவ மாணவிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடிந்தது. ஆண்டில் நடாத்த இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையையும், ஆண்டின் இறுதிப்பகுதியில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டு நோக்கும்போது 78% வெற்றிநிலையை அவதானிக்க முடிகிறது. விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது அது, 61.43% வெற்றிநிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

இப்பின்னடைவிற்கான காரணத்தை நுணுகி ஆராயும்போது, 2019 ஏப்ரல் மாதம் 21 ஆந் திகதி இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலையடுத்து பாடசாலைகள் பல மாதங்களாக மூடப்பட்ட நிலையில் இருந்ததையும், பாடசாலைகளில் வெளியார் எவரும் உள்நுழைவதைத் தடுத்து கல்வி அமைச்சினால் சுற்றறிக்கையை வெளியிடப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டலாம்.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 500 | 200 | 40 | 70 | 90 | 100 | 20 | 40 | 40 | 100 | 46 | 07 | 47 | 100 | 60 | 36 | 04 |
| செயலாற்றுகை | 390 | 164 | 85 | 40 | 39 | 73 | 12 | 09 | 52 | 73 | 41 | 04 | 28 | 80 | 52 | 26 | 02 |
| செயலாற்றுகை சதவீதமாக | 78 | 82 | 212.5 | 57.14மூ | 43.33 | 73 | 60 | 22.5 | 130 | 73 | 89.13 | 57.14 | 59.57 | 80 | 86.66 | 72.22 | 50 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 130 000 | 40 000 | 5000 | 16 000 | 18 000 | 30 000 | 5000 | 12 500 | 12 500 | 30 000 | 14 000 | 2000 | 14 000 | 30 000 | 14 000 | 15 000 | 1000 |
| செயலாற்றுகை | 79 863 | 36 780 | 23 491 | 6620 | 6669 | 16 970 | 1916 | 1370 | 13 684 | 12 901 | 7441 | 561 | 4826 | 13 285 | 8495 | 4667 | 123 |
| செயலாற்றுகை சதவீதமாக | 61.43 | 91.95 | 469.82 | 41.37 | 37.05 | 56.56 | 38.32 | 11.41 | 109.47 | 43 | 53.15 | 28.05 | 34.47 | 44.28 | 60.67 | 31.11 | 12.3 |

**கடந்த ஐந்தாண்டுகளில் போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பாடசாலை மாணாக்கரின் பங்கேற்பு**




**சர்வதேச பாடசாலைப் பிள்ளைகளுக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

இலங்கையில் இயங்கி வருகின்ற தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கையில் தற்காலத்தில் துரித வளர்ச்சியொன்று ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலையைப் புரிந்துகொண்ட தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு, சர்வதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளை இலக்காகக்கொண்ட ஒரு புதிய போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கியுள்ளது.

2019 ஆம் ஆண்டில் சர்வதேச பாடசாலைகளில் 09 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதன்மூலம் 1,443 மாணாக்கர்கள் மத்தியில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 10 | 03 | 01 | 01 | 01 | 04 | 10 | 02 | 02 | 02 | 01 | 01 | 00 | 01 | 00 | 01 | 00 |
| செயலாற்றுகை | 09 | 03 | 02 | 01 | 00 | 02 | 00 | 00 | 02 | 02 | 01 | 01 | 00 | 02 | 00 | 01 | 01 |
| செயலாற்றுகை சதவீதமாக | 90 | 100 | 200 | 100 | 00 | 50 | 00 | 00 | 100 | 200 | 100 | 100 | 00 | 200 | 00 | 100 | - |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 2000 | 700 | 300 | 200 | 200 | 1000 | 300 | 600 | 100 | 200 | 100 | 100 | 00 | 100 | 00 | 100 | 00 |
| செயலாற்றுகை | 1443 | 620 | 590 | 30 | 00 | 290 | 00 | 00 | 290 | 430 | 370 | 60 | 00 | 103 | 00 | 45 | 58 |
| செயலாற்றுகை சதவீதமாக | 72.15 | 88.57 | 196.66 | 15 | 00 | 29 | 00 | 00 | 290 | 215 | 370 | 60 | 00 | 103 | 00 | 45 | - |

**அறநெறிப் பாடசாலை மாணாக்கருக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

போதையூட்டும் ஔடத பாவனையற்ற, ஒழுக்க பண்பாடுடைய இளம் சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் அறநெறிப் பாடசாலைகளை இலக்கிட்ட ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக பன்சாலை, தேவாலயம் முதலான பல்வேறு மதத்தலங்களில் அறநெறிப் பாடசாலை மாணாக்கர்கள் மத்தியிலும் ஆசிரியர் குழாம் மத்தியிலும் போதையூட்டும் ஔடத பாவனையின் கெடு விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை போதையூட்டும் ஔடத தடுப்பு சம்பந்தமாக பயிற்றுவித்து, போதையூட்டும் ஔடத தடுப்பு சம்பந்தமான கோட்பாட்டு ரீதியானதும் பிரயோக ரீதியானதுமான அவர்களின் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் 2019 ஆம் ஆண்டில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு நடவடிக்கை எடுத்தது.

2019 ஆம் ஆண்டில் 30 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த இலக்கிடப்பட்டது. இதன்மூலம் 6,000 மாணாக்கர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த எதிர்பார்க்கப்பட்டது. ஆண்டின் இறுதிப்பகுதி அளவில் 45 நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் 7,691 பேர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. குறித்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 150% முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டியதுடன், நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொண்ட மாணாக்கரின் எண்ணிக்கையின் வளர்ச்சி 128.18% முன்னேற்றமொன்றைப் பதிவுசெய்துள்ளது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 30 | 10 | 05 | 03 | 02 | 10 | 03 | 04 | 03 | 05 | 03 | 01 | 01 | 05 | 01 | 02 | 02 |
| செயலாற்றுகை | 45 | 18 | 04 | 06 | 08 | 06 | 03 | 00 | 03 | 11 | 03 | 04 | 04 | 10 | 03 | 05 | 02 |
| செயலாற்றுகை சதவீதமாக | 150 | 180 | 80 | 200 | 400 | 60 | 100 | 00 | 300 | 220 | 100 | 400 | 400 | 200 | 300 | 250 | 100 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 6000 | 1500 | 500 | 800 | 200 | 1500 | 500 | 500 | 500 | 1500 | 1000 | 300 | 200 | 1500 | 300 | 600 | 600 |
| செயலாற்றுகை | 7691 | 3147 | 758 | 1161 | 1228 | 1093 | 861 | 00 | 232 | 2328 | 522 | 549 | 1257 | 1566 | 443 | 997 | 126 |
| செயலாற்றுகை சதவீதமாக | 128.18 | 209.8 | 151.6 | 145.12 | 614 | 72.86 | 172.2 | 00 | 46.4 | 155.2 | 52.2 | 183 | 628.5 | 104.4 | 147.66 | 166.16 | 21 |

### பல்கலைக்கழக மாணாக்கர்களுக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

பல்கலைக்கழக மாணாக்கர்கள் மத்தியில் போதையூட்டும் ஔடதங்களுக்கு எதிரான நேர்ப்படியான சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் தனிமனித அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு திறன்களை மெருகூட்டுவதற்கான ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டது. இத்தொடர் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக போதையூட்டும் ஔடத தடுப்புக்கு அவசியமான திறன்களையும் உள்ளார்ந்த ஆற்றல்களையும் விருத்திசெய்து பல்கலைக்கழக மாணாக்கர்களை போதையூட்டும் ஔடத தடுப்பில் பலப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதன் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், றுஹுணு பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் 10 நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் 3,000 பல்கலைக்கழக மாணாக்கர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த எதிர்பார்க்கப்பட்டதுடன், ஆண்டிறுதியில் 20 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதன் மூலம் 3,209 மாணாக்கர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தடுப்புச் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. அது நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையின் இலக்கை எய்தும்போது 200% வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 10 | 3 | 1 | 1 | 1 | 3 | 1 | 1 | 1 | 1 | 00 | 00 | 01 | 04 | 02 | 01 | 01 |
| செயலாற்றுகை | 20 | 06 | 01 | 03 | 02 | 05 | 01 | 00 | 04 | 03 | 02 | 00 | 01 | 06 | 00 | 03 | 03 |
| செயலாற்றுகை சதவீதமாக | 200 | 200 | 100 | 300 | 200 | 166.66 | 100 | 00 | 400 | 300 | - | 00 | 100 | 150 | 00 | 300 | 300 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 3000 | 800 | 200 | 400 | 200 | 800 | 300 | 300 | 200 | 400 | 00 | 00 | 400 | 1000 | 300 | 600 | 100 |
| செயலாற்றுகை | 3209 | 949 | 200 | 600 | 149 | 594 | 80 | 00 | 514 | 815 | 690 | 00 | 125 | 851 | 00 | 381 | 470 |
| செயலாற்றுகை சதவீதமாக | 106.96 | 118.62 | 100 | 150 | 74.5 | 74.25 | 26.66 | 00 | 257 | 203.75 | - | 00 | 31.25 | 85.1 | 00 | 63.5 | 470 |

### தொழிற்பயிற்சி நிலையங்களிலும் ஏனைய மூன்றாம்நிலைக் கல்வி நிறுவகங்களிலும் நடத்தப்பட்ட தடுப்புக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கையின் இளைஞர், யுவதிகளுக்கு நாடுபூராவுமுள்ள நிலையங்களில் அடிப்படைப் பாடநெறிகள் தொடக்கம் பட்டம் பெறும் மட்டம் வரை பல்வேறு கல்விசார் மற்றும் தொழில்சார் பாடநெறிகள் தொழிற்பயிற்சி அதிகாரசபையால் நடாத்தப்படுகிறது. இம்மாணாக்கர்கள் போதையூட்டும் ஔடத பாவனையின்பால் ஈர்க்கப்படுவதற்கான ஆபத்தான குழுவொன்றாக அடையாளம் காணப்பட்டிருப்பதன் காரணமாக தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு இம்மாணாக்கர்களுக்கு ஒரு விசேட தொடர் நிகழ்ச்சித்திட்டத்தை வடிவமைத்துள்ளது. இதன் மூலம் மாணாக்கர்களின் போதையூட்டும் ஔடத தடுப்புக் கல்வியையும் திறன்களையும் விருத்திசெய்து போதைப் பாவனையற்ற வெற்றிகரமான ஒரு வாழ்க்கைக்கு வழிகாட்டப்படுகிறது.

2019 ஆம் ஆண்டில் தொழிற்பயிற்சி நிலையங்களில் 135 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 13,373 மாணாக்கர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு நடவடிக்கை எடுத்ததன் மூலம் 90% வளர்ச்சியொன்றை இவ்வாண்டில் பதிவுசெய்துள்ளது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 150 | 60 | 30 | 15 | 15 | 40 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 | 00 | 20 | 05 | 15 | 10 |
| செயலாற்றுகை | 135 | 63 | 37 | 19 | 07 | 17 | 02 | 02 | 13 | 44 | 23 | 13 | 07 | 12 | 03 | 05 | 09 |
| செயலாற்றுகை சதவீதமாக | 90 | 105 | 123.33 | 126.66 | 46.66 | 42.45 | 20 | 13.33 | 86.66 | 215 | 230 | 130 | – | 60 | 60 | 33.33மூ | 90 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 22 000 | 12 000 | 5000 | 3500 | 3500 | 7000 | 1000 | 3000 | 3000 | 4000 | 2000 | 2000 | 00 | 4000 | 1000 | 2000 | 1000 |
| செயலாற்றுகை | 13 373 | 7229 | 3928 | 2222 | 1079 | 2371 | 128 | 343 | 1900 | 3031 | 1754 | 667 | 610 | 333 | 842 | 258 | 509 |
| செயலாற்றுகை சதவீதமாக | 60.78 | 60.24 | 78.56 | 63.48 | 30.82 | 33.87 | 12.8 | 11.43 | 63.33 | 75.77 | 87.7 | 33.35 | – | 8.32 | 84.2 | 12.9 | 50.9 |

**பெற்றோர்களுக்கான முன் சிறுவர் பராய அபிவிருத்தி பற்றிய போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

சிறு பிள்ளைகளின் போதையூட்டும் ஔடதங்கள் மீதான சார்புப் போக்கைக் குறைப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பெற்றோரை அறிவுறுத்துவது போதையூட்டும் ஔடத தடுப்பில் மிகவும் பயன்கூர் அணுகுமுறையாகும். அது, பிள்ளைகள் மற்றும் வளரிளம் பராயத்தைச் சார்ந்தவர்கள் மீது மிகவும் தாக்கம் செலுத்தும் ஒரு பாதுகாப்புக் காரணியாகும். பலவீனமான பெற்றோர் பாதுகாவல், குடும்பப் பிரச்சினைகள், புறக்கணிப்புகள், துஷ்பிரயோகங்கள் முன்சிறுவர் பராயத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகள் முதலிய குடும்பத்தினுள் எழக்கூடிய எதிர்மறையான நிலைமைகளின் பேரில் ஆபத்துக்குப் பிந்திய வளர்ச்சித் கட்டங்களாக வளரக்கூடிய வாய்ப்பும் உள்ளது. இப்போக்கை அடையாளங்கண்ட தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2019 ஆம் ஆண்டில் 121 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதன் மூலம் 14,652 பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டில் பெற்றோர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை 60.5% ஆக அடையாளம் காணக்கூடியதாக உள்ளது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 200 | 80 | 25 | 25 | 30 | 50 | 20 | 15 | 15 | 40 | 15 | 10 | 15 | 30 | 10 | 10 | 10 |
| செயலாற்றுகை | 121 | 44 | 25 | 11 | 08 | 15 | 04 | 03 | 08 | 27 | 11 | 08 | 11 | 32 | 21 | 11 | 03 |
| செயலாற்றுகை சதவீதமாக | 60.5 | 55 | 100 | 44 | 26.66 | 30 | 20 | 20 | 53.33 | 67.5 | 73.33 | 80 | 73.33 | 106.66 | 210 | 110 | 30 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 22 000 | 8000 | 4000 | 2000 | 2000 | 6000 | 2000 | 2000 | 2000 | 5000 | 2000 | 1000 | 2000 | 4000 | 1000 | 1500 | 1500 |
| செயலாற்றுகை | 14 652 | 8426 | 3933 | 1759 | 2698 | 1551 | 608 | 335 | 608 | 2053 | 872 | 630 | 685 | 2575 | 1628 | 947 | 89 |
| செயலாற்றுகை சதவீதமாக | 66.66 | 105.32 | 98.32 | 87.95 | 134.9 | 25.85 | 30.8 | 16.75 | 30.4 | 41.06 | 43.6 | 63 | 34.25 | 64.37 | 182.8 | 63.13 | 5.93 |

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கையில் அரசதுறை மிகவும் தாக்கமுள்ள ஒரு வகிபாகத்தை வகிக்கின்றது. நாட்டின் எல்லா இடங்களையும் அணுகக்கூடிய நிருவாக மாதிரியொன்று அரச துறையைச் சார்ந்துள்ளது. இந்த நிருவாக முறையை போதையூட்டும் ஔடத தடுப்புப் பணிக்கு ஈடுபடுத்திக்கொள்ளும் நோக்குடன் நாடுபூராகவுமுள்ள கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஏனைய வெளிக்கள உத்தியோகத்தர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் 150 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டது. இதன் மூலம் 12,000 அரசாங்க உத்தியோகத்தர்களை உள்வாங்க எதிர்பார்க்கப்பட்டது. ஆண்டின் இறுதிப் பகுதியளவில் 147 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 11,260 அரசாங்க உத்தியோகத்தர்களை உள்வாங்க தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு நடவடிக்கை எடுத்தது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 150 | 30 | 05 | 12 | 13 | 40 | 10 | 15 | 15 | 40 | 15 | 15 | 10 | 40 | 10 | 15 | 15 |
| செயலாற்றுகை | 147 | 24 | 05 | 14 | 05 | 54 | 15 | 21 | 18 | 35 | 21 | 10 | 04 | 34 | 15 | 10 | 09 |
| செயலாற்றுகை சதவீதமாக | 98 | 80 | 100 | 116.66 | 38.46 | 135 | 150 | 140 | 120 | 87.5 | 140 | 66.66 | 40 | 85 | 150 | 66.66 | 60 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 12 000 | 2000 | 500 | 700 | 800 | 3000 | 1000 | 1000 | 1000 | 4000 | 1500 | 1000 | 1500 | 4000 | 1000 | 1500 | 1500 |
| செயலாற்றுகை | 11 260 | 1981 | 504 | 1067 | 410 | 4802 | 2083 | 1499 | 1220 | 2599 | 2011 | 460 | 128 | 1878 | 907 | 412 | 559 |
| செயலாற்றுகை சதவீதமாக | 93.83 | 99.05 | 100.8 | 152.42 | 51.25 | 160.06 | 208.3 | 149.9 | 122 | 64.97 | 134.06 | 46 | 8.53 | 46.95 | 90.7 | 27.46 | 37.26 |

### சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

போதையூட்டும் ஔடத தடுப்பில் வெற்றிகரமான பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கெனில், போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வியைக் குறைப்பதற்கும், போதையூட்டும் ஔடதங்களின் வழங்கலைக் குறைப்பதற்குமான உபாயமுறைகளை ஒருசேர அமுல்படுத்த வேண்டும் என்பது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் வெற்றிகரமாக சேவையாற்றுவதற்கு புதிய உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய போதையூட்டும் ஔடத வகைகளும் அவற்றின் போக்குகளும் குறித்த அறிவை சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு வழங்குவது ஓர் இன்றியமையாக் காரணியாகும். இத்தேவையை நிறைவேற்றும் நோக்குடன் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு 2019 ஆம் ஆண்டில் இலங்கை பொலிஸ், முப்படை, இலங்கைச் சுங்கம் ஆகியவற்றின் சட்ட வினைப்படுத்துகை உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கு செய்தது.

2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களில் 55 நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்து 11,000 உத்தியோகத்தர்களை உள்வாங்க எதிர்பார்க்கப்பட்டதுடன், ஆண்டின் இறுதிப் பகுதியளவில் 57 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி 8,672 உத்தியோகத்தர்களை உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் வருடாந்த முன்னேற்றம் 78.83% சதவீதமாகக் காணப்படுகிறது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 55 | 20 | 08 | 06 | 06 | 15 | 05 | 05 | 05 | 10 | 05 | 03 | 02 | 10 | 04 | 03 | 03 |
| செயலாற்றுகை | 57 | 15 | 05 | 08 | 02 | 17 | 02 | 04 | 11 | 18 | 06 | 09 | 03 | 07 | 02 | 02 | 03 |
| செயலாற்றுகை சதவீதமாக | 103.63 | 75 | 62.5 | 133.33 | 33.33 | 113.33 | 40 | 80 | 220 | 180 | 120 | 300 | 150 | 70 | 40 | 66.66 | 100 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 11 000 | 5000 | 1500 | 1750 | 1750 | 3000 | 1000 | 1000 | 1000 | 1500 | 700 | 500 | 300 | 1500 | 600 | 500 | 400 |
| செயலாற்றுகை | 8672 | 2099 | 920 | 995 | 184 | 1886 | 300 | 316 | 1425 | 3085 | 670 | 2415 | 155 | 1447 | 546 | 360 | 541 |
| செயலாற்றுகை சதவீதமாக | 78.83 | 41.98 | 61.33 | 56.85 | 10.51 | 62.86 | 33.33 | 31.6 | 142.5 | 205.66 | 95.71 | 483 | 51.66 | 96.46 | 91 | 72 | 135.25 |

## சமுதாயத்தினருக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வியைக் குறைக்கும் நோக்குடன் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு 2017 ஆம் ஆண்டில் சமுதாயத்தினருக்கான போதையூட்டும் ஔடத தடுப்புக்கான ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குசெய்தது. போதையூட்டும் ஔடத பிரச்சினையை முகாமை செய்வதற்கான ஓர் அணுகுமுறையாக போதையூட்டும் ஔடத தடுப்பு பற்றி சமுதாயத்தினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலம் வெற்றிகரமான பெறுபேறுகள் அடையப் பெறும் என்பது ஆய்வாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

போதையூட்டும் ஔடதங்களின்பால் சமுதாயத்தினரை ஈடுபாடுகொள்ளச்செய்யும் சூழற்காரணிகளும் உளவியல் காரணிகளும் குறித்து ஆராய்ந்து, தன்னையும் தனக்கு நெருக்கமானவர்களையும் போதையூட்டும் ஔடத பாவனையிலிருந்து விடுபடச்செய்வதற்காக சமுதாயத்தை வலுப்படுத்துவதே சமுதாயத்தினருக்காக நடத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கமாகும்.

2019 ஆம் ஆண்டில் சமுதாயத்தினருக்கான 548 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி 53,052 பேரை உள்வாங்க தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 182.66% முன்னேற்றமொன்றைச் சுட்டிக் காட்டுகின்றது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 300 | 75 | 30 | 20 | 25 | 75 | 15 | 30 | 30 | 75 | 25 | 25 | 25 | 75 | 15 | 30 | 30 |
| செயலாற்றுகை | 548 | 102 | 28 | 30 | 44 | 129 | 22 | 44 | 63 | 160 | 38 | 56 | 66 | 157 | 62 | 41 | 55 |
| செயலாற்றுகை சதவீதமாக | 182.66 | 136 | 93.33 | 150 | 176 | 172 | 146.66 | 146.66 | 210 | 213.33 | 152 | 224 | 264 | 209.33 | 413.33 | 136.66 | 183.33 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 42 000 | 12 000 | 4000 | 4000 | 4000 | 10 000 | 2000 | 4000 | 4000 | 10000 | 3000 | 3000 | 4000 | 10 000 | 2000 | 4000 | 4000 |
| செயலாற்றுகை | 53 052 | 10 375 | 1545 | 3350 | 5480 | 10 612 | 1666 | 3697 | 5249 | 15 594 | 4501 | 5009 | 6084 | 16 471 | 8939 | 3901 | 3631 |
| செயலாற்றுகை சதவீதமாக | 126.31 | 86.45 | 38.62 | 83.75 | 137 | 106.12 | 83.3 | 92.42 | 131.22 | 155.94 | 150.03 | 188.96 | 152.1 | 164.71 | 446.95 | 97.25 | 90.77 |

### சுகாதாரத்துறைக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

ஒரு நாட்டில் போதையூட்டும் ஔடதங்களின் தடுப்பில் சுகாதாரத்துறை பாரிய ஒரு பங்களிப்பை ஆற்றுகிறது. முதனிலை, இரண்டாம்நிலை, மூன்றாம்நிலை என்ற அடிப்படையில் தடுப்புக்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கான சுகாதாரத்துறையின் தலையீடு மிக முக்கியமானதாகும். போதையூட்டும் ஔடத தடுப்புப் பணிக்கு வெற்றிகரமான பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் போதையூட்டும் ஔடத தடுப்பு சம்பந்தமாக வைத்தியர்கள், மனோ வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு முழுவதும் அமுல்படுத்தப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்ய எதிர்பார்த்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 20 ஆக இருக்கும்போது ஆண்டிறுதியில் 26 நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அதன்மூலம் 1,780 உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்பட்டனர். 2019 ஆம் ஆண்டில் சுகாதாரத்துறைக்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 130% வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 20 | 05 | 02 | 02 | 01 | 05 | 01 | 02 | 02 | 05 | 01 | 01 | 03 | 05 | 01 | 02 | 02 |
| செயலாற்றுகை | 26 | 08 | 01 | 05 | 02 | 04 | 02 | 02 | 00 | 03 | 01 | 00 | 02 | 11 | 06 | 01 | 04 |
| செயலாற்றுகை சதவீதமாக | 130 | 160 | 50 | 250 | 200 | 80 | 200 | 100 | 00 | 60 | 100 | 00 | 66.66 | 220 | 600 | 50 | 200 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 2000 | 500 | 150 | 200 | 150 | 500 | 100 | 200 | 200 | 500 | 100 | 100 | 300 | 500 | 100 | 200 | 200 |
| செயலாற்றுகை | 1780 | 701 | 190 | 378 | 133 | 194 | 99 | 195 | 00 | 265 | 80 | 00 | 185 | 620 | 375 | 60 | 185 |
| செயலாற்றுகை சதவீதமாக | 89 | 140.2 | 126.66 | 151.2 | 88.66 | 38.8 | 99 | 97.5 | 00 | 53 | 80 | 00 | 61.66 | 124 | 375 | 30 | 92.5 |

### பெருந்தோட்டத்துறைக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

பெருந்தோட்டத்துறை சார்ந்ததாக நிலவும் போதையூட்டும் ஔடத பாவனை காரணமாக அச்சூழலில் சுகாதார, சமூக, பொருளாதார ரீதியான பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கியிருப்பதாக இன்றைய பல ஆய்வுகள் கூறுகின்றன. இதனை நன்குணர்ந்த தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு, பெருந்தோட்டத்துறையை இலக்காகக்கொண்ட ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டத்தை 2019 ஆம் ஆண்டில் முன்னெடுத்தது.

பெருந்தோட்டத்துறைக்கு நடத்த எதிர்பார்க்கப்பட்ட 20 நிகழ்ச்சித்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 2,000 பேரை உள்வாங்க எதிர்பார்க்கப்பட்டது. ஆண்டிறுதிப் பகுதியில் 24 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி பெருந்தோட்டங்கள் சார்ந்த 1,448 ஊழியர்களை உள்வாங்க தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு உரிய நடவடிக்கை எடுத்தது. நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையில் 120% முன்னேற்றமொன்றும், கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையில் 72% முன்னேற்றமொன்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 20 | 05 | 02 | 02 | 01 | 05 | 01 | 02 | 02 | 05 | 30 | 02 | 00 | 05 | 01 | 02 | 02 |
| செயலாற்றுகை | 24 | 08 | - | 01 | 07 | 07 | 01 | 01 | 05 | 04 | 03 | 01 | 00 | 05 | 02 | 01 | 02 |
| செயலாற்றுகை சதவீதமாக | 120 | 160 | 00 | 50 | 700 | 140 | 100 | 50 | 250 | 80 | 100 | 50 | 00 | 100 | 200 | 50 | 100 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 2000 | 500 | 200 | 150 | 150 | 500 | 100 | 200 | 200 | 500 | 300 | 200 | 00 | 500 | 100 | 200 | 200 |
| செயலாற்றுகை | 1448 | 454 | - | 63 | 391 | 467 | 35 | 25 | 407 | 223 | 183 | 40 | 00 | 304 | 137 | 60 | 107 |
| செயலாற்றுகை சதவீதமாக | 72.4 | 90.8 | 00 | 42 | 260.66 | 93.4 | 35 | 12.5 | 203.5 | 44.6 | 61 | 20 | 00 | 60.8 | 137 | 30 | 53.5 |

### ஆசிரியர்களை பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

போதையூட்டும் ஔடத தடுப்பில் வெற்றிகரமான பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கெனில், பாடசாலைச் சிறார்களின் தனிப்பட்ட மற்றும் சமூக திறன்களை வளர்ப்பதன் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பாடசாலை ஆசிரியர்கள், இந்நோக்கத்தை அடைவதற்கு மிகவும் வெற்றிகரமாக பங்களிப்பை வழங்கக் கூடியவர்களாவர்.

இத்தேவைப்பாட்டை இனங்கண்ட தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் நாட்டின் பாடசாலை ஆசிரியர்களின் போதையூட்டும் ஔடத தடுப்பு பற்றிய கல்வி மற்றும் பிரயோக ரீதியாக திறன்களை வளர்த்து அவர்களை போதையூட்டும் ஔடத தடுப்பில் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பாளர்களாக பயிற்றுவிக்கும் 07 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி 772 ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதன்கீழ் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையில் 23.33% முன்னேற்றமொன்றும், பங்குபற்றியோரின் எண்ணிக்கையில் 77.2% முன்னேற்றமொன்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 30 | 10 | 05 | 03 | 02 | 10 | 03 | 04 | 03 | 05 | 03 | 01 | 01 | 05 | 01 | 02 | 02 |
| செயலாற்றுகை | 07 | 02 | 01 | 00 | 01 | 03 | 00 | 02 | 01 | 00 | 00 | 00 | 00 | 02 | 00 | 02 | 00 |
| செயலாற்றுகை சதவீதமாக | 23.33 | 20 | 05 | 00 | 50 | 30 | 00 | 50 | 33.33 | 00 | 00 | 00 | 00 | 40 | 00 | 100 | 00 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 1000 | 250 | 100 | 100 | 50 | 250 | 100 | 100 | 50 | 250 | 100 | 100 | 50 | 250 | 100 | 100 | 50 |
| செயலாற்றுகை | 772 | 197 | 47 | 00 | 150 | 210 | 00 | 165 | 45 | 00 | 00 | 00 | 00 | 365 | 00 | 365 | 00 |
| செயலாற்றுகை சதவீதமாக | 77.2 | 78.8 | 47 | 00 | 300 | 84 | 00 | 165 | 90 | 00 | 00 | 00 | 00 | 146 | 00 | 365 | 00 |

### இளம் தலைவர்களைப் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

போதையூட்டும் ஔடத தடுப்பை மேற்கொள்வதற்கு மிகவும் வெற்றிகரமான பெறுபேறுகளைக் கொண்டுவரக்கூடிய தரப்பினர்களாக இளைஞர், யுவதிகள் உள்ளனர் என்பதற்கு உலகம் பூராவும் கருத்திட்டங்கள் சாட்சி பகர்கின்றன. இளைஞர், யுவதிகள் என்ற வகையில் சமவயதுக் குழுக்களை மிகவும் அணுகக்கூடிய ஆற்றல் அவர்களிடம் அதிகளவில் உள்ளது. இந்நிலையைப் புரிந்துகொண்டு போதையூட்டும் ஔடத தடுப்பில் இளம் தலைவர்களைப் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது. இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட இளம் தலைவர்கள் நாடுபூராவும் போதையூட்டும் ஔடத தடுப்புச் செயற்பாடுகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 30 | 10 | 05 | 03 | 02 | 10 | 03 | 04 | 03 | 05 | 03 | 01 | 01 | 05 | 01 | 02 | 02 |
| செயலாற்றுகை | 20 | 04 | 01 | 00 | 03 | 07 | 01 | 04 | 02 | 03 | 03 | 01 | 01 | 05 | 02 | 03 | 01 |
| செயலாற்றுகை சதவீதமாக | 66.66 | 40 | 20 | 00 | 150 | 70 | 33.33 | 100 | 66.66 | 60 | 100 | 100 | 100 | 100 | 200 | 150 | 50 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 1000 | 250 | 100 | 100 | 50 | 250 | 100 | 100 | 50 | 250 | 100 | 100 | 50 | 250 | 100 | 100 | 50 |
| செயலாற்றுகை | 995 | 251 | 60 | 00 | 191 | 322 | 64 | 168 | 90 | 122 | 108 | 42 | 38 | 304 | 150 | 126 | 28 |
| செயலாற்றுகை சதவீதமாக | 99.5 | 100.4 | 60 | 00 | 382 | 128.8 | 64 | 168 | 180 | 48.8 | 108 | 42 | 76 | 121.6 | 150 | 126 | 56 |

2019 ஆம் ஆண்டில் இளம் தலைவர்களைப் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிப்பதற்கான 20 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் 995 இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாண்டின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கிற்கு ஒப்பீடாக 99.5% வளர்ச்சியொன்று சுட்டிக்காட்டப்படுகிறது.

### பாரிய வேலைத்தலங்களுக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

பாரிய வேலைத்தலங்களில் பணிபுரியும் ஊழியர்கள் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பதன்பால் ஈர்க்கப்படுவதற்கான கூடுதல் ஆபத்துநிலை காணப்படுகிறது. இவ்வேலைத்தலங்களில் நிலவும் அதிக வேலைப்பளு காரணமாக இந்த ஊழியர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுடனும் தமக்கு நெருக்கமானவர்களுடனும் நேர்ப்படியான உறவுகளைக் கட்டியெழுப்பிக்கொள்ளும்போதும், அதற்கு அவசியமான காலத்தை முகாமை செய்துகொள்ளும்போதும் பெரும்பாலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதே இதற்குரிய காரணமாக அமைகிறது. இவ்வாறான விடயங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் அதிக மனத்தாக்கலைவு (tension), போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பதன்பால் மனிதர்களை தூண்டிவிடக் காரணமாக அமையலாம்.

இத்தகைய சிக்கலான நிலைமையில் பயனுறுதிவாய்ந்த விதத்தில் தலையீடுசெய்வதற்கு தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் கடந்த ஆண்டில் பாரிய வேலைத்தலங்களை உள்வாங்கக்கூடிய போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பல அமுல்படுத்தப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் பாரிய வேலைத்தல சூழல்களில் போதையூட்டும் ஔடத தடுப்பு பற்றிய 95 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த தடுப்புக் கல்விப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 20,173 ஊழியர்கள் உள்வாங்கப்பட்டனர். ஆண்டின்

இலக்கிட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒப்பீடாக ஆண்டிறுதியில் 237.5% முன்னேற்றமொன்று சுட்டிக்காட்டப்படுவதுடன், உள்வாங்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை நோக்கும்போது அது, 2017.3% வெற்றிநிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 40 | 10 | 04 | 03 | 03 | 10 | 04 | 03 | 03 | 10 | 04 | 03 | 03 | 10 | 04 | 03 | 03 |
| செயலாற்றுகை | 95 | 13 | 04 | 03 | 06 | 10 | 05 | 02 | 03 | 32 | 04 | 17 | 11 | 40 | 25 | 06 | 09 |
| செயலாற்றுகை சதவீதமாக | 237.5 | 130 | 100 | 100 | 200 | 100 | 125 | 66.66 | 300 | 320 | 100 | 566.66 | 366.66 | 400 | 625 | 200 | 300 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 1000 | 250 | 100 | 100 | 50 | 250 | 100 | 100 | 50 | 250 | 100 | 100 | 50 | 250 | 100 | 100 | 50 |
| செயலாற்றுகை | 20 173 | 3378 | 521 | 2370 | 485 | 3420 | 2215 | 100 | 1105 | 7794 | 3955 | 1670 | 2169 | 5581 | 3907 | 1155 | 519 |
| செயலாற்றுகை சதவீதமாக | 2017.3 | 1351.2 | 521 | 2370 | 970 | 1368 | 2215 | 100 | 2210 | 3117.6 | 3955 | 1670 | 4338 | 2232.4 | 3907 | 1155 | 1038 |

### பொது மக்களுக்கான கண்காட்சிகள்

ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையான பொது மக்களை அணுகக்கூடிய ஒரே முறையெனில், பொது மக்களுக்கான கண்காட்சிகளாகும். பொதுமக்களுக்கான கண்காட்சிகளின் ஊடாக குறைந்த செலவுடனும், குறைந்த காலப்பகுதியிலும் போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்தியை பெருந்திரளான மக்கள் மத்தியில் பயனுறுதிவாய்ந்த விதத்தில் எடுத்துச்செல்லலாம்.

இதன்போது பிரதானமாக சுவரொட்டிகள், பதாகைகள் முதலியனவும் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்படும் துண்டுப் பிரசுரங்கள் ஊடாக போதையூட்டும் ஔடத பாவனையின் ஊறு பற்றி பொதுமக்கள் மத்தியில் கருத்து எடுத்துச் செல்லப்படுகிறது.

அவ்வாறே 2019 ஆம் ஆண்டில் பொதுமக்களுக்கான கண்காட்சிகளை ஒழுங்குசெய்வதன் ஊடாக பெருந்திரளான மக்களுக்கு போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்தியை எடுத்துச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| பௌதிக இலக்கு | ஆண்டுக்குரிய இலக்கு | முதல் காலாண்டு | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | இரண்டாம் காலாண்டு | ஏப்ரல் | மே | ஜூன் | மூன்றாம் காலாண்டு | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | நான்காம் காலாண்டு | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 20 | 05 | 02 | 02 | 01 | 05 | 01 | 02 | 02 | 05 | 02 | 02 | 01 | 5 | 01 | 02 | 02 |
| செயலாற்றுகை | 17 | 06 | 01 | 00 | 05 | 02 | 02 | 00 | 00 | 04 | 01 | 00 | 03 | 05 | 01 | 01 | 03 |
| செயலாற்றுகை சதவீதமாக | 85 | 120 | 50 | 00 | 500 | 40 | 200 | 00 | 00 | 80 | 50 | 00 | 300 | 100 | 100 | 50 | 150 |
| மாணாக்கர்களின் எண்ணிக்கை | 20 000 | 5000 | 1500 | 1500 | 2000 | 5000 | 1000 | 3000 | 1000 | 5000 | 2000 | 2000 | 1000 | 5000 | 1000 | 2000 | 2000 |
| செயலாற்றுகை | 38 552 | 21 827 | 527 | 00 | 21 300 | 5105 | 5105 | 00 | 00 | 4350 | 1500 | 00 | 2850 | 7270 | 70 | 500 | 6700 |
| செயலாற்றுகை சதவீதமாக | 192.76 | 10.54 | 35.13 | 00 | 00 | 102.1 | 510.5 | 00 | 00 | 87 | 75 | 00 | 285 | 145.4 | 7 | 25 | 335 |

2019 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது 17 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதன்மூலம் 85% முன்னேற்றத்துடன் எதிர்பார்த்த இலக்கு அடையப் பெற்றுள்ளதுடன், 38,552 நபர்களை உள்வாங்கி 192.76% இனால் தனிநபர் இலக்கு அடையப் பெற்றுள்ளது.

### சர்வதேச போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்திற்கும் கள்ளக் கடத்தலுக்கும் எதிரான தினம் - 2019

2019 ஏப்ரல் மாதம் 21 ஆந் திகதி இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பெருந்திரளான பொதுமக்கள் ஒன்றுகூடும் வைபவங்களை ஒழுங்குசெய்வதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்தது. சம்பிரதாயபூர்வமாக ஆண்டுதோறும் நடைபெறும் வைபவங்களுக்கும் இத்தடைவிதிப்பு காரணமாக தடங்கல் ஏற்பட்டது. எனினும், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச போதையூட்டும் ஔடதங்களை ஒழித்துக் கட்டுவதற்கான தினத்தைக் கொண்டாடுவதற்கான பொதுவான செயற்பாடுகளுடன் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு கரம்கோர்த்துச் செயலாற்றியது.

### தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் தொழில் அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட தொடர் நிகழ்ச்சித்திட்டம்

போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக முறைகேடும் உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களின் துஷ்பிரயோகமும் முழு உலகிலும் ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ள ஒரு சூழ்நிலையில் அதன்மூலம் தனிநபர் சுகாதாரத்தின் மீதும், சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகள் மீதும் பாரிய நேர்மறையான தாக்கம் ஏற்படுத்தப்படுகிறது. போதையூட்டும் ஔடத பாவனை சார்ந்த முறைகேடுகளினாலும் இன்னல்களினாலும் பாதிக்கப்பட்ட நபர்கள் சிலவேளைகளில் சிகிச்சைகளின் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கு போதியளவு சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வது அரிதாகவே காணப்படுகிறது. தொடர்ந்தும் சிகிச்சைத் தேவைப்பாடுகளினால் வாடும் சில நபர்களுக்கு பண்புத்தர சிகிச்சைகளை அணுக முடியாத நிலையுள்ளது. சிகிச்சைகளை அணுகுதல் போன்றே, பண்புத்தரமான சிகிச்சைகளின் இயல்திறன் விரிவடைவதும் காலத்தின் தேவையாகும். இதற்குரிய மிகவும் பயனுறுதிவாய்ந்த தீர்வு யாதெனில், சாட்சிகள் மீதமைந்த சிகிச்சை முறைமைகளுக்கு சிகிச்சையளிக்கும் ஆளணியினரை இயைபடையச்செய்து பண்புத்தர சிகிச்சை பணியாள்தொகுதியொன்றாக அபிவிருத்தியடைய அவர்களைப் பயிற்றுவிப்பதாகும்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் அடிப்படை உசாவுகைத் திறன்கள், சம்பவ முகாமைத் திறன்கள், நெருக்கடிகளைத் தீர்த்தலுக்கான தலையீடுகள் என்பன தமது பணியாள்தொகுதியினருக்காக ஏற்பாடுசெய்து அமுல்படுத்தப்பட்டது. இந்த பணியாள்தொகுதியை அபிவிருத்திசெய்வதற்காக ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் சர்வதேச வெறியப்பொருள் மற்றும் சட்ட வினைப்படுத்தலுக்கான பணியகத்தின் நிதி அனுசரணையின் கீழ் கொழும்புத் திட்டப் பணியகத்திற்கு வழங்கப்பட்ட சர்வதேச சிகிச்சையளிப்பு இயல்திறனை அதிகரிக்கும் 3 பாடத்திட்டங்கள் அதாவது, தொழில்சார் ஆலோசகர்களுக்கான அடிப்படை உசாவுகைத் திறன்கள் (பாடத்திட்ட இல. 04), தொழில்சார் போதையூட்டும் ஔடத ஆலோசகர்களுக்கான சம்பவ முகாமைத்துவம் (பாடத்திட்ட இல. 06) மற்றும் தொழில்சார் போதையூட்டும் ஔடத ஆலோசகர்களுக்கான நெருக்கடி முகாமைத்துவமும் தற்கொலை செய்துகொள்வதைத் தடுத்தலும் (பாடத்திட்ட இல. 07) என்ற மூன்று பாடத்திட்டங்களும் முற்றுமுழுதும் பயன்படுத்தப்பட்டது. இந்தப் பாடத்திட்ட அபிவிருத்தி பற்றி தொழில்வாண்மையினரைப் பயிற்றுவிப்பதன் நோக்கம் யாதெனில், அடிப்படை ஆலோசனைத் திறன்களும், சம்பவ முகாமைத்துவத் திறன்களும் பற்றிய பிரயோக ரீதியான மற்றும் கோட்பாட்டு ரீதியான அறிவை பயிற்சி பெறுபவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதாகும்.

## 8.2 ஆராய்ச்சிப் பிரிவு - 2019

அபாயகரமான ஔடத துஷ்பிரயோகத்தின் பரம்பல், அதற்கு ஏதுவாக அமையும் காரணிகள், அபாயகரமான ஔடதங்களைப் பாவிப்பதன் மூலம் ஏற்படக்கூடிய சட்ட, மருத்துவ, சமூக, கலாசார மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சினைகள் குறித்த ஆய்வுகளை நடாத்துதல், அது சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதைப் பொறுப்பேற்றல் என்பன ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கொள்கைவகுப்போருக்கும் சேவை வழங்குநர்களுக்கும் சேவைபெறுநர்களுக்கும் வசதியளிப்பவர்களுக்கும் அவசியமான போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த அறிக்கைகளைத் தயாரிப்பதும் சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குவதும் முக்கிய கருமங்களாகும்.

போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்கள் தொடர்பில் அவசியமான தலையீட்டை மேலும் அதிகரிப்பதற்கு சான்றுகள் மீதமைந்த விடயங்களையும் தகவல்களையும் ஊக்கப்படுத்துவது ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய நோக்கமாகும். 2019 ஆம் ஆண்டில் அதற்கு பிரதானமான 06 உபாயமுறைகளின் கீழ் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. வெளியீடுகளையும் தகவல்களையும் பரிமாறிக்கொள்ளல்.
2. போக்குகளின் பகுப்பாய்வு அறிக்கை.
3. தரவுத்தள முகாமைத்துவம்.
4. பயிற்சிச் செயலமர்வுகளையும் தொழில்நுட்ப அறிவையும் வழங்குதல்.
5. ஆராய்ச்சிக் கற்கைகளும் அளவைகளும்.
6. சர்வதேச ஒத்துழைப்பு.

சபையின் நோக்கங்களை எய்துவதற்கும் தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கும் ஆராய்ச்சிப் பிரிவினால் பயனுறுதி வாய்ந்த ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

### 01) வெளியீடுகளையும் தகவல்களையும் பரிமாறிக்கொள்ளல்.

### A. போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய தகவல் கைந்நூல் - 2019




போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய தகவல்கள் அடங்கிய ஐந்து ஆண்டுகளுக்குரிய தகவல்களைத் தொகுத்து ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. பிரதானமாக, அனைத்து போதையூட்டும் ஔடதங்களும் சம்பந்தமாக பெற்றுக்கொண்ட தகவல்கள் இக்கைந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத் தகவல் கைந்நூலில் பின்வரும் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

I. போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமாக கைதுகள்.

II. போதையூட்டும் ஔடதங்களுக்கான விலைகளும் தூய்தான தன்மையும்.

III. கஞ்சா பாவனை. (ஆயுர்வேத ஔடதங்களுக்காக)

IV. சிறையிடப்படல்.

V. சிகிச்சைகளுக்கு அனுமதிக்கப்படல்.

VI. போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்கள் பற்றிய தகவல்கள்.

VII. எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் நோய் சம்பந்தமான தகவல்கள்.

VIII. முன் இரசாயனத் தகவல்கள்.

IX. அற்கஹோல் மற்றும் புகையிலை சார்ந்த தகவல்கள்.

X. போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான குற்றச்செயல்கள்.

இலங்கை பொலிஸ், பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் பணியகம், மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் போன்ற சட்ட வினைப்படுத்துகைக்கான பிரிவுகளிலிருந்தும், சுகாதார அமைச்சு, ஆயுர்வேத திணைக்களம் முதலான பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் அதற்கவசியமான தகவல்கள் திரட்டப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய தகவல் கைந்நூலின் 1,500 பிரதிகளும் 500 இறுவட்டுக்களும் அச்சிடப்பட்டன.

**போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகளின் பொழிப்பு**

2018 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக மொத்தம் 98,752 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர்களில் 42% சதவீதமானோர் ஹெரொயின் சார்ந்த குற்றங்களுக்கும், 55% சதவீதமானோர் கஞ்சா சார்ந்த குற்றங்களுக்கும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்டதற்காக கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் மாகாணத்திலிருந்து கைதாகியுள்ளனர். அது, 61% சதவீதமாகும். தென் மாகாணத்திலிருந்து 17% சதவீதமும், மத்திய மாகாணத்திலிருந்து 08% சதவீதமும் என்றவாறு கைதாகியுள்ளனர். 2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்டிருந்தமைக்காக கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்தே கைதாகியுள்ளனர். அது, 40% சதவீதமாகும். அதேபோல், கம்பஹா மாவட்டத்திலிருந்து 17%, குருணாகல் மாவட்டத்திலிருந்து 07% என்றவாறு கைதாகியுள்ளனர். ஹெரொயின் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 40,998 ஆக இருப்பதுடன், கஞ்சா சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 54,686 ஆகும்.







மூலம்: போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய தகவல் கைந்நூல் - 2019

**B. பெண்களின் போதையூட்டும் ஔடத பாவனைப் போக்கையும் பாவனைக் கோலங்களையும் அடையாளம் காணல்**




பெண்கள் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் தற்காலப் போக்குகளையும் பாவனைக் கோலங்களையும் அடையாளம் காண்பதற்கான ஓர் அளவை மேற்கொள்ளப்பட்டது. பெண்கள் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமையாவதன் மீது பாதிப்புச் செலுத்தும் காரணிகளை அடையாளம் காணல், போதையூட்டும் ஔடத பாவனையையும் பால்நிலை மாற்றங்களையும் அடையாளம் காணல், பால்நிலைசார் காரணிகளுக்கு ஏற்ற விதத்திலான சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை முன்மொழிதல் ஆகியன குறித்த அளவையின் முக்கிய நோக்கங்களாகும். சிகிச்சையளிப்பு நிலையங்கள், சிறைச்சாலைகள், சீர்திருத்த நிலையங்கள் மற்றும் சமுதாயத்தின் ஊடாக பனியுருண்டை மாதிரி (Snow Ball Method) நுட்பமுறையைப் பயன்படுத்தி போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் 151 பேர் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்வறிக்கையைத் தயாரிக்கும் பணி பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், அதன் அச்சீட்டுப் பணி தற்போது இடம்பெற்று வருகிறது.

**C. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் காலாண்டுச் செய்திமடல் "NEWS LETTER"**




தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தகவல்களையும் சேவைகளையும் ஏனைய நிறுவனங்களுடன் பரிமாறிக்கொள்ளும் நோக்குடன் ஒரு காலாண்டுச் செய்திமடல் வெளியிடப்பட்டது. சபையின் ஊழியர்களின் கருத்துரைகளையும் ஆக்கங்களயும் கலையாம்சங்களையும் அதேபோல், போதையூட்டும் ஔடதங்களின் கட்டுப்பாடு, தடுப்பு, சிகிச்சையளிப்பு, புனர்வாழ்வளிப்பு மற்றும் ஆராய்ச்சி பற்றிய தகவல்களையும் இச்செய்திமடல் சுமந்து வருகிறது. 2019 ஆம் ஆண்டில் 22, 23, 24 ஆம் இதழ்கள் வெளியிடப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மத்தியில் அவை பகிர்ந்தளிக்கப்பட்டன.

**D. இலங்கையில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய ஆக்கங்களின் தொகுப்பு – V**

ஆராய்ச்சிப் பிரிவினால் கடந்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அளவைத் தகவல்கள் சிலவற்றை ஒன்றுகோர்த்து "இலங்கையில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய ஆக்கங்களின் தொகுப்பு V" எனும் நூல் உருவாக்கப்பட்டு வருகிறது. பின்வரும் ஆய்வறிக்கைகள் இந்நூலில் உள்ளக்கப்பட்டுள்ளன:

1. பாடசாலை மாணாக்கர்களின் போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய ஆய்வு.

2. கொழும்பு மற்றும் உப நகர்ப்புறங்களை அண்டிய இரவு களியாட்ட விடுதிகளும் கடலோர களியாட்டங்களும் சார்ந்த போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய ஆய்வு.

3. இலங்கையில் அபின் பாவனையும் விநியோகமும் சம்பந்தமான தற்காலப் போக்குகளை அடையாளம் காணும் ஆய்வு.

4. போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பலும் நவீன போக்குகளும் பற்றிய நாடளாவிய அளவை.

5. உளமருட்சியை உண்டுபண்ணும் போதையூட்டும் ஒளடத பாவனையின் பரம்பலும் நவீன போக்குகளும் பற்றிய துரித அளவை.

6. வேலைத்தல ஊழியர்களின் போதையூட்டும் ஒளடத பாவனை பற்றிய அளவை.

**E. தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல்**

அனைத்துப் பிரிவுகளின் தகவல்களையும் உள்ளடக்கி ஆராய்ச்சிப் பிரிவினால் செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டது. சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளிலும் அவ்வறிக்கை தயாரிக்கப்பட்டதுடன், பொது தொழில்முயற்சிகள் பற்றிய குழுவுக்கும் (COPE) சமர்ப்பிக்கப்பட்டது.




02) போக்குகளின் பகுப்பாய்வு அறிக்கைகள்

**போதையூட்டும் ஒளடதங்கள் சார்ந்த புள்ளிவிவரங்கள் அடங்கிய மாதாந்த அறிக்கை - 2019**

சட்டவினைப்படுத்துகை நிறுவனங்கள் மூலம் போதையூட்டும் ஒளடதங்கள் சார்ந்த கைதுகள் சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளையும் போதையூட்டும் ஒளடதங்களும் சார்ந்த சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளும் நபர்களின் தகவல்களையும் உபயோகித்து இன்றைய போதையூட்டும் ஒளடத பாவனையின் கோலங்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. போதையூட்டும் ஒளடத துஷ்பிரயோகத் தரவுக் கண்காணிப்பு முறைமை (DAMS) மூலம் கைதுசெய்யப்படுவோரின் தகவல்களும் சிகிச்சைபெறுவோரின் தகவல்களும் மாதாந்த மற்றும் வருடாந்த அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படும். இவ்வறிக்கைகள், அரச மற்றும் அரச சார்பற்ற பிரிவுகளுக்கும் நிறுவனத்தின் உள்ளக பிரிவுகளுக்கும் அனுப்பிவைக்கப்படுவதுடன், கொள்கைத் திட்டமிடலுக்காக அவை உபயோகப்படுத்தப்படும். 2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஒளடதங்கள் சார்ந்த 11 மாதாந்த தகவல் அறிக்கைகளும் ஓர் அரையாண்டு அறிக்கையும் (ஜனவரி ஜூலை) வெளியிடப்பட்டது.










**சர்வதேச/ தேசிய ஆய்வு அமர்வுகளுக்கு ஆய்வுத் தாள்களைச் சமர்ப்பித்தல்**

ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் துணையுடன் பல்வேறு தொனிப்பொருள்களின் கீழ் தயாரிக்கப்பட்ட ஆய்வுத் தாள்கள் பின்வரும் ஆராய்ச்சி அமர்வுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டன.

1. போதையூட்டும் ஔடதங்களை ஊசி மூலம் உடலுக்குட் செலுத்திக்கொள்வதன் மீது பாதிப்புச் செலுத்தும் பொருளாதார, நடத்தைசார், சமூக இலட்சணங்கள் - பேராதனைப் பல்கலைக்கழகம்.

2. கொழும்பை அண்டிய இரவு நேர களியாட்ட விடுதிகளில் போதையூட்டும் ஔடத பாவனையாளர்களின் நடத்தைசார் கோலங்கள் - றுஹுணு பல்கலைக்கழகம்.

3. ஹெரோயின் பாவனைக்கு அடிமைப்பட்ட பெண்களின் போதையூட்டும் ஔடத பாவனையின் கோலங்களும் இன்றைய போக்குகளும் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் (சுவரொட்டி)

4. இரவு சமூக விடுதிகளில் போதையூட்டும் ஔடத பாவனை பற்றி காணப்படும் உப கலாசாரம் - மொழி ரீதியான குறுக்குவெட்டுமுக காரணிகளாக - கொழும்புப் பல்கலைக்கழகம்

5. இலங்கையில் போதையூட்டும் ஔடத பாவனையின் போக்கின் குறுக்கு ஆய்வொன்றாக - NCAS கொழும்பு.

6. இரவு சமூக விடுதி வாழ்க்கையும் பொழுதுபோக்கு போதையூட்டும் ஔடத பாவனையும் - கொழும்பு இரவு நேர சமூக விடுதிகளை அண்டியதாக - களனிப் பல்கலைக்கழகம்.






03.) தரவுத்தொகுதி முகாமைத்துவம்

**போதையூட்டும் ஔடத தரவுக் கண்காணிப்பு முறைமை (DAMS)**




போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய தரவுக் கண்காணிப்பு முறைமையானது கணினிமயப்படுத்திய ஒரு தகவல் பகுப்பாய்வு முறைமையாகும். இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றங்களுக்காக கைதாவோரினதும் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படுவோரினதும் தகவல்கள் இதில் உட்படுத்தப்படும். எல்லா சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களிலிருந்தும் (பொலிஸ் நிலையங்கள்) சிகிச்சையளிப்பு நிலையங்களிலிருந்தும் தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்களிலிருந்தும் சிறைச்சாலைகளிலிருந்தும் இத்தகைய தகவல்கள் மாதாந்தம் திரட்டப்படும். சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்பவர்கள் பற்றிய தகவல்கள் ஒவ்வொரு காலாண்டுக்கும் ஒரு முறை பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய

புள்ளிவிவர அறிக்கைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. சிகிச்சையளிப்பு நிலையப் படிவங்களும் பொலிஸ் நிலையப் படிவங்களும் சம்பந்தப்பட்ட சிகிச்சையளிப்பு நிலையங்களுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் பின்வரும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன:-

- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 56
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 57
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 110
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 111
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 112
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 113
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 114

**போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 111 (வருடாந்த அறிக்கையின் பொழிப்பு)**

இலங்கையில் போதையூட்டும் ஔடத சிகிச்சைச் சேவைக்காக அரச மற்றும் அரச சார்பற்ற என்ற இரண்டு வகை நிறுவனங்களும் செயலாற்றுவதுடன், அத்தகவல்கள் பற்றி போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக தரவுக் கண்காணிப்பு முறைமைக்கு அறிக்கையிடப்படுகிறது. 2018 ஆம் ஆண்டில் சிகிச்சைகளுக்காக 4,447 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அது 64% அதிகரிப்பாகும்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையிலிருந்து 1,142 பேரும் (25.7%) அரச சார்பற்ற அமைப்புகளிலிருந்து 415 பேரும் (9.3%) சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். 1,048 பேர் (23.6%) சிறைச்சாலை சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், கந்தகாடு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்திலிருந்து 1,842 பேர் (41.4%) சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

**2018 ஆம் ஆண்டில் சிகிச்சைகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படுவோரின் அமைப்பு**




மூலம்: போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத் தரவுக் கண்காணிப்பு முறைமை - 2019

சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்ட நபர்களில் பெரும்பான்மையானவர்கள் நிறுவன வதிவிட சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், 28.6% சதவீதமானோர் கொழும்பு மாவட்டத்தில் வசிப்பவர்களாவர். மேல் மாகாணத்தை எடுத்து நோக்கும்போது 69% ஆகும். கிடைக்கப்பெற்றுள்ள தரவுகளுக்கமைய 4,421 ஆண் சேவைபெறுநர்கள் காணப்படுவதுடன், 26 பேர் பெண் சேவை பெறுநர்களாவர். 2017 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2018 ஆம் ஆண்டில் சிசிக்சைகளைப் பெற்றுக்கொள்வதில் வளர்ச்சியொன்றைக் காண முடிந்தது. இலங்கையில் அமுலிலுள்ள சிகிச்சையளிப்புச் செயன்முறையில் ஹெரொயின் பாவனை முறைகேடுகளுக்காக சிகிச்சைகள் பற்றி ஆராயப்பட்டு வருவதுடன், பெரும்பாலானவர்கள் சிகிச்சைகளுக்காக ஆற்றுப்படுத்தப்படுவது, இப்போதையூட்டும் ஔடதங்களுக்கே.

**போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக தரவுக் கண்காணிப்பு முறைமையை (DAMS) முன்னெடுத்துச் செல்லலும் நிகழ்நிலைப்படுத்தலும்**

ஆண்டினுள் நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலுமிருந்து இணையத்தின் ஊடாக அளவைப் பத்திரங்கள் பின்வருமாறு ஆராய்ச்சிப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

| 2019-01-01 தொடக்கம் 2019.12.31 வரை | |
|---|---|
| **அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை** | 44,830 |

கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இனைந்து போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக தரவுக் கண்காணிப்பு முறைமை (DAMS), நிகழ்நிலைப்படுத்தப்பட்டதுடன், பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று தரவுக் கண்காணிப்பு முறைமையின் தொழில்நுட்ப ரீதியான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவற்றுக்குரிய தீர்வுகள் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2019-11-26 | நுகேகொட பொலிஸ் அதிகாரப் பிரதேசம் | மிரிஹான, மகரகம, பொரலஸ்கமுவ, கொட்டாவ, தலங்கம, கொத்தட்டுவ, வெல்லம்பிட்டிய, பாதுக்க, ஹோமாகம. |
| 2019-11-27 | கல்கிசை பொலிஸ் அதிகாரப் பிரதேசம் | தெஹிவளை, கல்கிசை, மொரட்டுமுல்ல, மொரட்டுவை, அங்குலான, மீகொட, பிலியந்தலை, மத்தேகொட, எகொட உயன |
| 2019-11-29 | கொழும்பு வடக்கு பொலிஸ் அதிகாரப் பிரதேசம் | மோதர, மட்டக்குளி, புளுமென்டல், கிரேன்ட்பாஸ், தெமட்டகொட. |
| 2019-12-06 | நீர்கொழும்பு பொலிஸ் அதிகாரப் பிரதேசம் | நீர்கொழும்பு, கொச்சிக்கடை, பமுனுகம, கொட்டதெனியாவ, திவுலபிட்டிய, ரத்தொழுகம, கட்டுநாயக்க, கட்டானை, துன்கல்பிட்டிய. |
| 2019-12-10 | கொழும்பு மத்திய பொலிஸ் அதிகாரப் பிரதேசம் | புறக்கோட்டை, வாழைத்தோட்டம், டாம் வீதி, மருதானை, மாளிகாவத்தை. |
| 2019-12-13 | கம்பஹா பொலிஸ் அதிகாரப் பிரதேசம் | கம்பஹா, மினுவான்கொடை, தொம்பே, பூகொட, வெலிவேரிய, கிரிந்திவெல, நிட்டம்புவ, வெயாங்கொட, யக்கல. |

## 04) பயிற்சிச் செயலமர்வுகளும் தொழில்நுட்ப அறிவை வழங்குதலும்

### போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக தரவுக் கண்காணிப்பு முறைமை (DAMS) தொடர்பான பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்

2019 ஆம் ஆண்டில் தென்மாகாணத்தின் அனைத்து பொலிஸ் அதிகாரப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய 04 பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் 215 பொலிஸ் உத்தியோகத்தர்களை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. பயிற்சிச் செயலமர்வுகளின்போது கீழ்க்காணும் தலைப்புக்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது:

- வினாக்கொத்தொன்றின் துணையுடன் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்.
- விஞ்ஞான ரீதியான முறைமைகளை அனுசரித்து இணையத்தின் ஊடாக தரவுகளை தரவுத்தளத்தில் உட்படுத்துதல்.
- மிகச் சரியாகவும், தாமதமின்றியும் தரவுகளை அறிக்கையிடுவதன் முக்கியத்துவமும் அதன் தேவையும்.

| திகதி | பயிற்சிச் செயலமர்வு | பொலிஸ் பிரிவு | நடைபெற்ற இடம் | கலந்துகொண்ட உத்தியோகத்தர் -களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2019-12-16 | போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக தரவுக் கண்காணிப்பு முறைமை (DAMS) | காலி | கேட்போர்கூடம், காலி | 50 |
| 2019-12-18 | | மாத்தறை | கேட்போர்கூடம், மாத்தறை | 70 |
| 2019-12-24 | | எல்பிட்டிய | கேட்போர்கூடம், எல்பிட்டிய | 45 |
| 2019-12-27 | | தங்காளை | கேட்போர்கூடம், தங்காளை | 50 |





### ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடும் அமர்வுகள்

2019 ஜுலை மாதம் 12 ஆந் திகதி ஆராய்ச்சிப் பிரிவினால் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் சிகிச்சையளிப்பு மத்தியநிலையங்களின் பணியாள்தொகுதியினருக்கு போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பல் பற்றிய ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடும் அமர்வொன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

2019 டிசம்பர் மாதம் 27 ஆந் திகதி மத்திய மாகாணத்தில் நடாத்தப்பட்ட போதையூட்டும் ஔடளத தடுப்புக் குழு நிகழ்ச்சித்திட்டத்தில் ஆராய்ச்சிப் பிரிவினால் தேசிய பரம்பல் பற்றிய அளவையின் முடிவுகள் பற்றிய தகவல்கள் முன்வைக்கப்பட்டன. இந்த மத்திய மாகாண கூட்டத்திற்கு கௌரவ மத்திய மாகாண ஆளுநர் தலைமை தாங்கினார்.

**போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய ஆலோசனையில் சான்றிதழ் கற்கைநெறி**

சபையின் கல்வி மற்றும் ஆலோசனைப் பணியாள்தொகுதியினரின் ஒத்துழைப்புடன் ஆராய்ச்சிப் பிரிவினால் ஒருங்கிணைப்புச் செய்யப்படும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனை மற்றும் அது சார்ந்த துறைகளில் ஈடுபாடு உள்ளவர்களுக்கும் பல்கலைக்கழக மாணாக்கர்களுக்கும் இவ்விடயத் துறையில் பிரவேசிக்க விரும்பும் ஆட்களுக்கும் 'போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய ஆலோசனையில் சான்றிதழ் கற்கைநெறி' முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

2019 ஆம் ஆண்டில் பின்வரும் கற்கைநெறிகள் நடத்தப்பட்டன:

| கற்கைநெறி | கலந்துகொண்டோர் எண்ணிக்கை |
|---|---|
| 54 ஆவது அணி | 58 |
| 55 ஆவது அணி | 46 |
| 56 ஆவது அணி | 59 |
| 57 ஆவது அணி | 47 |
| 58 ஆவது அணி | 58 |
| 59 ஆவது அணி | 41 |
| 60 ஆவது அணி | 59 |
| 61 ஆவது அணி | 18 |
| மொத்தம் | 386 |






**05) ஆராய்ச்சிகள் / அளவைகள்**

1. போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பல் பற்றிய தேசிய அளவை - 2019

இலங்கையில் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களின் எண்ணிக்கை யாது? என்பது பற்றிய ஆய்வுக்கான தேசிய அளவையொன்று ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

**முறைமை**

இத்தேசிய அளவையின் தரவுகளைச் சேகரிப்பதற்கு கொழும்பு மாவட்டத்தின் கிராம உத்தியோகத்தர்களுக்கும், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும், அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இரண்டு முறைகளின் கீழ் அளவை நடாத்தப்பட்டது.

1. மதிப்பீட்டுக்கான நேர் முறை

2. மதிப்பீட்டுக்கான நேரில் முறை

இந்த அளவை மூன்று கட்டங்களாக நடாத்தப்பட்டது.

**கட்டம் 01 – வீடுகள் சார்ந்த அளவை**

ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு 100 வீடுகள் என்றவாறு எழுமாறான முறையை பயன்படுத்தி அந்த வீடுகள் தெரிவுசெய்யப்பட்டன. தரவுகளைச் சேகரிப்பதற்காக வினாக்கொத்து முறை பின்பற்றப்பட்டது. இந்த அளவையில் வெளிக்கள உத்தியோகத்தர்கள், ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பயிற்சிகளின் கீழ் வீடுகள் மட்ட ஆராய்ச்சியில் பங்கேற்கச் செய்யப்பட்டனர்.

இந்த அளவை பிரதானமாக மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு கொழும்பு மாவட்டத்தினதும் கம்பஹா மாவட்டத்தினதும் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தெரிவுசெய்யப்பட்டதுடன், ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து 100 வீடுகள் இந்த அளவைக்காக தெரிவுசெய்யப்பட்டது. தரவுகளைச் சேகரிப்பதற்காக கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்பவர்களின் உதவி பெறப்பட்டது. பின்வருமாறு 16 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

| திகதி | பிரதேச செயலாளர் பிரிவு | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2019-02-13 | கெஸ்பேவ | 134 |
| 2019-02-13 | ஹோமாகம | 172 |
| 2019-02-15 | இரத்மலானை | 50 |
| 2019-02-20 | பாதுக்கை | 120 |
| 2019-02-20 | சீத்தாவக்கபுர | 64 |
| 2019-02-21 | தெஹிவளை | 55 |
| 2019-02-22 | மஹரகம | 120 |
| 2019-02-26 | கடுவலை | 149 |
| 2019-02-27 | கொழும்பு | 84 |
| 2019-03-01 | மொரட்டுவை | 97 |
| 2019-03-06 | ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே | 70 |
| 2019-05-08 | திவுலபிட்டிய | 250 |
| 2019-05-15 | களனி | 82 |
| 2019-05-21 | ஜாஎல | 140 |
| 2019-06-04 | நீர்கொழும்பு | 90 |
| 2019-06-12 | திம்பிரிகஸ்யாய | 40 |

**கட்டம் 02 - போதையூட்டும் ஔடத வகைகளை உபயோகிக்கும் சனத்தொகையை எண் ரீதியாகக் கணக்கிடும் முறை**

ஆராய்ச்சிப் பிரிவினால் ஜனாதிபதி செயலணியுடனும் பொலிஸ் திணைக்களத்துடனும் இணைந்து போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய தேசிய அளவை ஆரம்பிக்கப்பட்டது.

முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. சனசமூக பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர்களும் நாட்டின் அனைத்து பிரதேச செயலாக உத்தியோகத்தர்களும் பின்வருமாறு தரவுகளைச் சேகரிப்பதற்காக பயிற்சி அளிக்கப்பட்டனர்.

| திகதி | மாகாணம் | நிலையம் | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2019-03-19 | மேல் மாகாணம் | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம், கொழும்பு | 425 |
| | தென் மாகாணம் | | |
| | ஊவா மாகாணம் | | |
| | சப்ரகமுவ மாகாணம் | | |
| 2019-03-23 | வட மாகாணம் | சிந்தாமணீ மண்டபம், வவுனியா | 204 |
| | கிழக்கு மாகாணம் | | |
| 2019-03-25 | மத்திய மாகாணம் | சன்னச ஹோட்டல், தம்புளை | 281 |
| | வடமேல் மாகாணம் | | |
| | வடமத்திய மாகாணம் | | |





**கட்டம் 03 - மதிப்பீடு மேற்கொள்ளும் நேரில் முறை**

இங்கு போதையூட்டும் ஔடதங்களைப் பயன்படுத்தும் சனத்தொகை சம்பந்தமாக கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் நடாத்தப்பட்ட கணக்கெடுப்புக்கு உரிய தரவுகளுக்கு மேலதிகமாக, போதையூட்டும் ஔடதங்களைப் பயன்படுத்தும் ஆட்கள் சம்பந்தமாக தற்போது காணப்படும் தரவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் மதிப்பீட்டுப் பெறுமானங்கள் தயாரிக்கப்படுகின்றன. குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதி தொடர்பில் முன்னரே அடையாளம் காணப்பட்ட தரவுகளை உபயோகித்து இலக்கிட்ட சனத்தொகை பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

**போதையூட்டும் ஔடத பரம்பல் பற்றிய தேசிய மதிப்பீட்டு அறிக்கையை வெளியிடுதல் - 2019**

நாட்டின் போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பல் பற்றிய மதிப்பீடொன்றைத் தயாரிப்பதற்காக தே.அ.ஔ.க. சபையின் ஆராய்ச்சிப் பிரிவினால் ஜனாதிபதி செயலணியுடனும் இலங்கை பொலிஸாருடனும் இணைந்து போதையூட்டும் ஔடத பரம்பல் பற்றிய தேசிய அளவை 2019 அமுல்படுத்தப்பட்டது. சர்வதேச போதையூட்டும் ஔடத எதிர்ப்பு தினத்தோடு இணைந்ததாக நடைபெற்ற போதையூட்டும் ஔடத தடுப்பு வாரத்தின் மேல் மாகாண மாநாட்டில் ஜூலை மாதம் 01 ஆந் திகதி மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களிடம் இந்த தேசிய அளவையின் இறுதி அறிக்கை கையளிக்கப்பட்டது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் கூட்டத்தின் சிபார்சுகள் அடங்கிய இறுதி அளவை அறிக்கை, 2019 ஜூலை மாதம் 30 ஆம் திகதி கொள்கை உருவாக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. அளவையிலிருந்து கண்டறியப்பட்ட இறுதி சிபார்சுகள் பின்வருமாறு:

- போதையூட்டும் பரம்பலையும் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் மதிப்பீடுத் தரவுகளையும் அடிப்படையாகக்கொண்டு பயனுறுதிவாய்ந்த தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், திட்டங்கள் என்பவற்றை அமுல்படுத்துதல்.

- இன்றைய சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை விஸ்தரிக்கும்போது பின்வரும் பிரதான முன்னுரிமைப் பிரிவுகளைக் கவனத்திற்கொண்டு மேற்கொள்ளப்படும்.

- சமுதாய அடிப்படையில் உளவியல் சிகிச்சை முறையை அடிப்படையாகக்கொண்ட சிகிச்சையளிப்பு நிலையங்களை நிறுவுதல்.

- தனியார் சிகிச்சையளிப்பு மத்தியநிலையங்களின் கொள்திறனை விஸ்தரித்தல்.

- சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் ஆகிய பங்காளர்களின் பங்களிப்பை அதிகரித்தல்.

- சிறைச்சாலை சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களைப் பலப்படுத்துதல்.



மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களிடம் தவிசாளரினால் அளவை அறிக்கை கையளிக்கப்படும்போது

| பால்நிலையின் அடிப்படையிலான போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பல் | | | |
|---|---|---|---|
| போதையூட்டும் ஔடத வகை | பெண் * | ஆண் * | மொத்தம் * |
| சிகரட் / புகையிலை சார்ந்த உற்பத்திகள் | 23,566 | 2,383,015 | 2,406,581 |
| அற்கஹோல் | 20,586 | 3,014,557 | 3,035,143 |
| ஹெரொயின் | 1,384 | 91,156 | 92,540 |
| கஞ்சா | 1,564 | 300,334 | 301.898 |
| மருந்து மாத்திரை வகைகள் | 290 | 23,921 | 24,211 |
| பிற | 4,265 | 111,059 | 115,324 |

* நானாவித போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்கள்

### 2. கொழும்பு மாவட்டத்தில் வேலைத்தல ஊழியர்களின் போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய அளவை

ஆராய்ச்சிப் பிரிவினால் வேலைத்தல ஊழியர்களின் போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய அளவையொன்று கொழும்பு மாவட்டத்தை அண்டியதாக நடாத்தப்பட்டது. கட்டிட நிர்மாணத் துறையில் ஈடுபடும் தொழிலாளர்களின் போதையூட்டும் ஔடத பாவனையின் தன்மை, கட்டிட நிர்மாணப் பணிகளும் போதையூட்டும் ஔடத பாவனையும் பற்றிய தொடர்பை அடையாளம் காணல், நிர்மாணத் தலங்களில் தொழிலாளர்களின் போதையூட்டும் ஔடத பாவனை தொடர்பில் நிலவும் முக்கிய பிரச்சினைகளை அடையாளம் காணல், சமூக மற்றும் சனசமூக விஞ்ஞான காரணிகளை அடையாளம் காணல், அதன் போக்குகளையும் கோலங்களையும் அடையாளம் காணல் என்பன இவ்வாய்வின் நோக்கமாக அமைந்தது. இத்தகைய தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது.

### 3. கொழும்பு மாவட்டத்தில் சர்வதேச பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பலும் அதன் கோலங்களும் பற்றிய அளவை

சர்வதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணாக்கர்களிடையே போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய ஒரு போக்கு காணப்படுகின்றதா என்பது பற்றிய ஓர் அளவை ஆராய்ச்சிப் பிரிவினால் 2018 ஆம் ஆண்டில் முடுக்கிவிடப்பட்டது. அதன்மூலம் சர்வதேச பாடசாலைகளை இலக்காகக்கொண்ட போதையூட்டும் ஔடதங்களைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும் போதையூட்டும் ஔடத பாவனையிலிருந்து மாணாக்கர்களை தடுப்பதற்குமான கொள்கைகளைச் சிபார்சுசெய்தல் இந்த ஆய்வின் நோக்கமாக இருந்தது. கொழும்பு மாவட்டத்தை அண்டியுள்ள 06 சர்வதேச பாடசாலைகளைத் தெரிவுசெய்து 300 மாணாக்கர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். தரவுகள் சேகரித்து முடிந்த பின் ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டது.

### 4. தென் மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் போதையூட்டும் ஔடத பாவனையின் போக்குகள் பற்றிய அளவை

தென் மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் போதையூட்டும் ஔடத பாவனையின் போக்குகள் பற்றிய ஓர் அளவை ஆராய்ச்சிப் பிரிவினால் முடுக்கிவிடப்பட்டது. தென் மாகாணத்தின் கரையோரப் பகுதிகள் சார்ந்த போதையூட்டும் ஔடத பாவனையை இனங்காணல், ஆபத்தான நிலையிலுள்ள குழுக்களை இனங்காணல், போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுதல், சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுதல், கொள்கை வகுப்போருக்கு விதப்புரைகளைச் சமர்ப்பித்தல், தென் மாகாணத்தை அண்டியதாக கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான தகவல்களை வழங்குதல் ஆகியன இந்த அளவையின் முக்கிய நோக்கங்களாக இருந்தன. பனியுருண்டை மாதிரி நுட்பமுறை, முறையான

மாதிரி நுட்பமுறை என்பவற்றைக் கையாண்டு வீடுகள் சார்ந்த ஓர் அளவை மேற்கொள்ளப்பட்டதுடன், தற்போது தரவுகள் சேகரிக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது. தென்மாகாண அளவையின் மாதிரிக்காக 5,000 குடும்பங்களைச் சேர்ந்த 16,150 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்வறிக்கையைத் தயாரிக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளதுடன், அதன் இறுதி அறிக்கை தென் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்திலும் சம்பந்தப்பட்ட வேறு அரச நிறுவனங்களிடமும் கையளிக்கப்பட்டது.

### 5. போதையூட்டும் ஔடத சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் பயன்கூர்நிலை பற்றிய அளவை



போதையூட்டும் ஔடத பாவனை ஒழுங்கீனங்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொண்ட சேவைபெறுநர்கள் மீண்டும் பாவனையின் பால் தூண்டப்படுவதன் மீது தாக்கம் செலுத்தும் காரணிகளை அடையாளம் காணல், சிகிச்சையளிப்புச் செயன்முறையின் விளைத்திறன் பற்றி துரித அளவையொன்று முடுக்கிவிடப்பட்டது. சபையின் சிகிச்சையளிப்புச் சேவைகளின் பண்புத்தர நிலையின் விளைத்திறன் பற்றி ஆராய்தல், மிகவும் பயன்கூர் சிகிச்சையளிப்பு முறையொன்றுக்கு உரிய யோசனைகளையும் சிபார்சுகளையும் சமர்ப்பித்தல் ஆகியன இந்த அளவையின் முக்கிய நோக்கங்களாகும். இந்த ஆய்வுக்கு 170 பேர் அடங்கிய மாதிரியொன்று தெரிவுசெய்யப்பட்டதுடன் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, இரத்தினபுரி, பதுளை, அநுராதபுரம், பொலன்னறுவை, புத்தளம் ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் தரவுகளைச் சேகரிக்கும் பணிகள் நிறைவெய்தின.

### 6. பல்கலைக்கழக மாணாக்கர்கள் மத்தியில் போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய ஆய்வு

பல்கலைக்கழக மாணாக்கர்கள் மத்தியில் போதையூட்டும் ஔடத பாவனையின் போக்கொன்று காணப்படுகின்றதா? என்பதை அடையாளம் காண்பதற்கான ஓர் ஆய்வு முடுக்கிவிடப்பட்டது. பல்கலைக்கழக மாணாக்கர்கள் மத்தியில் போதையூட்டும் ஔடத பாவனையின் போக்கொன்று காணப்படுகின்றதா என்பது பற்றிய ஆய்வுசெய்தல், பல்கலைக்கழக மாணாக்கர்கள் மத்தியில் பயன்படுத்தப்படும் போதையூட்டும் ஔடத வகைகள், போதையூட்டும் ஔடத பாவனையின்பால் ஈடுபாடுகொள்ளல் மீது தாக்கம் செலுதும் சமூகவியல், சமூக, பொருளாதார, கலாசார காரணிகளை அடையாளம் காணல், போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய மனப்பாங்குகளை அடையாளம் காணல், சமுதாயத்தினருக்காக கொள்கைத் திட்டமிடல் ஆகியன இதன் நோக்கங்களாகும். இந்த ஆய்வை மேற்கொள்வதற்காக ஒழுக்கநெறிக் குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஒழுக்கநெறிக் குழுவுக்கு அவசியமான தகவல்கள் வழங்கப்பட்டன. அதன் அடிப்படையில் குறித்த அளவையை மேற்கொள்வதற்கு அவசியமான அனுமதி 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

## 06) சர்வதேச ஒத்துழைப்பு

### சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் (INCB) இலங்கைக்கான கலந்துரையாடல்

2019 மார்ச் மாதம் 25-28 வரை சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் பேராளர்களின் கலந்துரையாடலொன்று இலங்கையில் நடைபெற்றது. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர் பேராசிரியர் ரிச்சர்ட் மெட்ரிக் மற்றும் சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை செயலகத்தின்

புன்க் சிலா அவர்களினாலும் குறித்த கலந்துரையாடல் நெறிப்படுத்தப்பட்டது. சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் கலந்துரையாடலொன்று 2002 ஆம் ஆண்டிலேயே இலங்கையில் கடைசியாக நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் நோக்கங்களிடையே இலங்கை கைச்சாத்திட்டுள்ள சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சமவாயங்களுக்கு அமைந்தொழுகுதலும் இலங்கையில் போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்தல் பற்றிய தற்கால நிலைமை குறித்து ஆராய்தலும் சமவாயங்களுக்கு அமைய சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பில் கவனம் செலுத்துவதும் முக்கியமானவையாகும்.

அதேபோல் போதையூட்டும் ஔடதங்களின் கள்ளக் கடத்தலை இல்லாதொழிப்பதற்கு போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கும் அடிமைப்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் சேவைகளை வழங்குதல் பற்றிய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கையும் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலின்போது சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் பேராளர்கள், பாதுகாப்புச் செயலாளர் திரு. ஹேமசிறி பர்னாந்து அவர்கள், நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மாண்புமிகு அமைச்சர் திருமதி தளதா அத்துகோரள, கௌரவ சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய அவர்கள், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு. ரவிநாத் பீ.ஆரியசிங்க அவர்கள், பொலிஸ்மா அதிபர் திரு. பூஜித் ஜயசுந்தர அவர்கள், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தவிசாளர் பேராசிரியர் சமன் அபேசிங்க அவர்கள், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் பணிப்பாளர் நாயகம் (பதில்) திரு. எஸ்.ஆலோக்க பண்டார அவர்கள், போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் வைத்தியர் சமந்த கித்தலவ ஆரச்சி அவர்கள், பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புப் பணியகத்தின் பணிப்பாளர் ரி.சி.ஏ.தனபால அவர்கள், இலங்கைச் சுங்கம், மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களையும் கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு ஆகியவற்றையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உயரதிகாரிகளுடன் ஒரு விசேட கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. அதேபோல், அரச சார்பற்ற சிகிச்சையளிப்பு நிலையங்களின் உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. தே.அ.ஔ.க. சபையின் நவதிகன்த சிகிச்சையளிப்பு நிலையத்தின் வெளிக்கள விஜயத்திலும் இணைந்துகொண்டனர்.





**சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் (INCB) விஜயம் பற்றிய சிபார்சுகளை முன்வைத்தல்**

அவதானிப்புகளும் சிபார்சுகளும் அடங்கிய அறிக்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்பட்டன. சபையின் சேவைகளை விஸ்தரிப்பதற்கும் சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையினால் அடையாளம் காணப்பட்ட அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

**சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையுடன் (INCB) தரவுகளைப் பரிமாறிக்கொள்ளல்**

இலங்கை கடப்பட்டுள்ள சர்வதேச சமவாயங்களுடன் ஒத்திசைந்து செயலாற்றுமுகமாகவும் அவற்றுக்குச் செவிசாய்க்குமுகமாகவும் மாதாந்த, காலாண்டு, வருடாந்த என்ற அடிப்படையில் சா்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபைக்கு (INCB) பின்வரும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன: தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆராய்ச்சிப் பிரிவு, INCB இற்கு அனுப்பிவைக்கும் இலங்கையின் இன்றைய போதையூட்டும் ஔடத பாவனை மற்றும் அது தொடர்பில் எழும் விடயங்கள் மீதான பொறுப்புக்களை வகிக்கிறது.

சா்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை, மருத்துவ வழங்கல்கள் பிரிவு, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம், இலங்கைச் சுங்கம், இலங்கை மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் என்பவற்றுடன் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. பின்வரும் படிவங்கள் சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் கட்டுப்பாட்டுச் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

**காலாண்டுக்கு ஒரு முறை அனுப்பிவைக்கப்பட்ட தரவுகள்**

- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகளின் இறக்குமதியும் ஏற்றுமதியும் பற்றிய புள்ளிவிவரங்கள் (படிவம் A) 4வது காலாண்டு, 2018 மற்றும் 1வது காலாண்டு 2019, 2வது காலாண்டு 2019, 3வது காலாண்டு, 2019.
- 1971 சமவாயத்தின் நிரல் II இல் தரப்பட்டுள்ள உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப் பொருள்களின் இறக்குமதியும் ஏற்றுமதியும் பற்றிய புள்ளிவிவரங்கள் (படிவம் A/P) 4வது காலாண்டு 2018, 1வது காலாண்டு 2019, 2வது காலாண்டு 2019, 3வது காலாண்டு 2019.

**வருடாந்தம் அனுப்பிவைக்கப்பட்ட தரவுகள்**

- உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள் பற்றிய தேவைப்பாட்டு மதிப்பீடு (படிவம் B)
- 1971 உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப்பொருள்கள் பற்றிய சமவாயத்தின் நிரல் 2 இல் மருத்துவ ரீதியானதும் விஞ்ஞான ரீதியானதுமான தேவைப்பாடுகளுக்கான ஔடத வகைகள் (படிவம் B/P)
- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்களதும் உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப் பொருள்களதும் உற்பத்தி, நுகர்வு, களஞ்சியப்படுத்தல், திடீர் சுற்றிவளைப்புகள் பற்றிய புள்ளிவிவரங்கள் (படிவம் C)
- உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப்பொருள்கள் சம்பந்தமான புள்ளிவிவரங்கள் (படிவம் P)

- வருடாந்த அறிக்கைகளின் வினாக்கொத்து (படிவம் E)

  1. சட்ட ரீதியான மற்றும் நிறுவன ரீதியான பணிச்சட்டம்.
  2. போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வி-நிரம்பலைக் குறைப்பதற்கான நுண் அணுகுமுறை.
  3. போதையூட்டும் ஔடதங்களின் பாவனைக் கோலங்களையும் போக்குகளையும் இனங்காணல்.
  4. போதையூட்டும் ஔடதங்கள் பயிரிடல், உற்பத்திகள், திடீர் சுற்றிவளைப்புகள் சம்பந்தமான தற்கால கோலங்களையும் போக்குகளையும் இனங்காணல்.

சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபைக்கு பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டன:-

- ∴பென்டனைல் சட்டரீதியற்ற முறையில் துஷ்பிரயோகம் செய்யப்படுதல் சார்ந்த வினாக்கொத்து - INCB Project ION and OPIOIDS Project Joint Alert 2/2019
- உலகளாவிய அளவை - SDG Health Target 3.5 (2019)
- HONLEA வினாக்கொத்து.

**ஐக்கிய நாடுகள் போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல் தடுப்பு அமைப்புடன் (UNODC) தகவல்களைப் பரிமாறிக்கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல் தடுப்பு அமைப்பினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த வினாக்கொத்து பற்றிய முன்னோடி ஆய்வொன்று இடம்பெற்றது. அதற்கு ஆராய்ச்சிப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட பின்வரும் தகவல்களின் துணையுடன் போக்குகளின் பகுப்பாய்வு அறிக்கைகள் ஐக்கிய நாடுகள் போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல் தடுப்பு அமைப்புக்கு வழங்கப்பட்டது:

✓ போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய தடுப்பு முறைகள்.
✓ சிகிச்சைக்கு சேர்த்துக்கொள்ளப்படல்கள்.
✓ போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பலும் போக்குகளும்.

**<u>ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் வேறு பணிகள்</u>**

**தேசிய கொள்கையில் திருத்தம் மேற்கொள்ளல்**



போதையூட்டும் ஔடதங்களின் துஷ்பிரயோகம், தடுப்பு, கட்டுப்பாட்டு என்பவற்றுக்கான தேசிய கொள்கையைத் திருத்தும் பணியை மேற்கொள்ளும் பொறுப்பு சபைப் பத்திரமொன்றின் மூலம் ஆராய்ச்சிப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கமைய அவசியமான யோசனைகளும் புதிய கருத்துக்களும் பொது மக்களிடமிருந்து கோரிப் பெறப்பட்டதுடன், கொள்கையைத் திருத்துவதற்கு அவசியான அடிப்படைத் தரவுகள் தயாரிக்கப்பட்டன.

2019 அக்டோபர் மாதம் 24, 25 ஆகிய இரு தினங்களிலும் கொள்கையைத் திருத்துவதற்கான

செயலமர்வு இடம்பெற்றது. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டு திருத்திய அறிக்கை தவிசாளரிடம் கையளிக்கப்பட்டது. யோசனைகளை வழங்குவதற்காக சபையின் அனைத்து பணியாள்தொகுதியினருக்கும் வரைவு அறிக்கை மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டது.

### KOICA யோசனைகளை முன்வைத்தல்

பால்நிலை சமத்துவம் பற்றிய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் இயல்திறன்களை விருத்திசெய்வதற்கான ஒரு யோசனை முன்வைக்கப்பட்டது. சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு, பணியமர்வுசெய்யப்பட்ட மற்றும் தனியார் சிகிச்சையளிப்பு மற்றும் மனிதவளப் பிரிவுக்கான யோசனை வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### தகவல் தொழில்நுட்பப் பிரிவு

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அனைத்துப் பிரிவுகளிலும் நிலையங்களிலும் உள்ள கணினிகளில் காணப்பட்ட குறைபாடுகளை இனங்கண்டு, அவற்றைத் திருத்தும் பணி தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

### இணையத்தளத்தை நிகழ்நிலைப்படுத்தல்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் இப்பிரிவினால் நாளாந்தம் நிகழ்நிலைப்படுத்தப்பட்டது.

World Children's Day celebration

11:28 PM | by NDDCB | No comments



World Children's Day celebration In celebration of World Children's Day, Preventive Education and Training Unit of the National Dangerous Drugs Control Board (NDDCB) organized a fun filled programme for over 1000 children who visited Dehiwala...

Read More

2019 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன:

- கணினி மென்பொருள்களை விருத்திசெய்தல்.
- இணையத்தைப் பயன்படுத்துவோருக்கு இணைப்பு வலையமைப்புடன் இணைத்து விடல்.
- கணினிகளைப் பாதிக்கும் வைரஸ்களை அகற்றுதல்.
- லோட்டஸ் குறிப்புகளை விருத்திசெய்தல்.
- அச்சீட்டுப் பொறிகளில் காணப்படும் பிரச்சினைகளை நிவர்த்திசெய்தல்.
- கணினிகளிலுள்ள பிரச்சினைகள் அனைத்தையும் நிவர்த்திசெய்தல்.

கணினிப் பிரிவினால் பின்வரும் அச்சீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன:

- சான்றிதழ்கள் அச்சிடல்.
- ஆளறிமுக அட்டைகள் அச்சிடல்.
- சீ.டீ.க்களும் டீ.வீ.டீ.க்களும் பதிப்பித்தல்.
- ஆய்வறிக்கைகள் அச்சிடல்.

## 8.3 சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புப் பிரிவு - 2019

சபையின் சேவைகளிடையே சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புப் பிரிவும் சிறப்பான ஓரிடத்தை வகிக்கிறது. முன்னைய ஆண்டுகளில் போலவே இவ்வாண்டிலும் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதிலும் புனர்வாழ்வளிப்பதிலும் சபையின் சிகிச்சையளிப்பு நிலையங்கள் சிறப்பாக தம் பங்காற்றின. போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்படுவதன் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த போதைப் பிரியர்களை அத்தகைய பிரச்சினைகளிலிருந்து விடுவித்தல், அவர்களுக்கும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்தல், அவர்களின் ஆற்றல்களைப் பலப்படுத்துதல் என்பவற்றுடன் ஆன்மீக விருத்தி, ஆளுமை விருத்தி முதலிய பண்புத்தர உள்ளீடுகளின் ஊடாக சிகிச்சையளிப்புச் செயன்முறை போசிக்கப்பட்டது.

சிகிச்சையளிப்பு நிலையங்களுக்கு சேவைபெறுநர்களை அனுமதிக்கும்போது கடந்த ஆண்டில் பின்பற்றப்பட்ட வகையீடே இவ்வாண்டிலும் பின்பற்றப்பட்டது.



மத்திய மாகாண (யொவுன்) சிகிச்சையளிப்பு நிலையம் - கண்டி (21 வயதுக்குக் குறைந்த சேவைபெறுநர்களுக்கு)



தென்மாகாண சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - காலி (32 - 50 வயதுக்கு இடைப்பட்ட சேவைபெறுநர்களுக்கு)



மேல்மாகாண சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - கொஸ்வத்த (32 - 50 வயதுக்கு இடைப்பட்ட சேவைபெறுநர்களுக்கு)



நவதிகன்த சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - நிட்டம்புவ (21 - 32 வயதுக்கு இடைப்பட்ட சேவைபெறுநர்களுக்கு)

### சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கு சேர்த்துக்கொள்ளல்

மேற்குறிப்பிட்ட வகையீட்டின்படி ஒவ்வொரு சிகிச்சையளிப்பு நிலையத்திலும் சேவைபெறுநர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

- தமது சுயவிருப்பின் பேரில் வதிவிட சிகிச்சைக்காக சேர்த்துக்கொள்ளல்.
- பாதுகாவலர்களின் கோரிக்கையின் பேரில் சேர்த்துக்கொள்ளப்படுதல்.
- நீதிமன்றம் மற்றும் சமுதாய சீர்திருத்த நிறுவனங்கள் ஊடாக சேர்த்துக்கொள்ளப்படுதல்.
- வேறு அரச நிறுவனங்களின் அறிவுறுத்தலின்பேரில் சேர்த்துக்கொள்ளப்படுதல்.
- வெளிநிலைச் சேவைகள் ஊடாக சேர்த்துக்கொள்ளப்படுதல்.

என்பவற்றை வழமைபோல் இவ்வாண்டிலும் அவதானிக்க முடிந்தது. எமது அனுபவம் வாய்ந்த உளவள ஆலோசகர்களின் தலையீட்டுடன் மேற்குறிப்பிட்ட எல்லா சேர்த்துக்கொள்ளப்படல்களும் மேற்கொள்ளப்பட்டன. முன் உளவள ஆலோசனை அமர்வுகளை உபயோகித்து வதிவிட சிகிச்சைக்காக சேவைபெறுநர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

### சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதி

சபையின் பொதுவான சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒரு வருட காலமாகும். எனினும், இவ்வாண்டில் எமது சிகிச்சையளிப்பு நிலையங்களில் வதிவிட சிகிச்சையளிக்கப்படும் காலம், குறைந்தபட்சம் 02 மாதங்களாகும். அதனைத் தொடர்ந்து அவர்கள் வெளிநிலைச் சேவைகள் மற்றும் வேறு சமுதாய சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் இணைக்கப்படுகின்றனர். சேவைபெறுநர் எவரேனும் வதிவிட சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்வாராயின், அவருக்கு 02 மாதங்கள் முடிவில் வதிவிட சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து விடைபெற்றுச் செல்லலாம். எனினும், ஆலோசகரதும் ஏனைய பணியாள்தொகுதியினரதும் முன்னேற்ற மதிப்பீட்டின்படி அவர் தொடர்ந்தும் தனிநபர் அபிவிருத்திக்கு உட்படுத்தப்படவேண்டிய ஒருவராயின், அவரது சிகிச்சைக் காலம் நீடிக்கப்பட்டது.

### சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டம்

வதிவிட சிகிச்சைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பின் ஒவ்வொரு நிலையத்திலும் அந்தந்த சேவைபெறுநருக்கு ஏற்ற விதத்திலான சிகிச்சையளிப்புத் திட்டமொன்றைப் பயன்படுத்தி சிகிச்சையளிப்புச் சேவை வழங்கப்பட்டது. குறிப்பாக, எல்லா சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் உளவியல் சிகிச்சை முறையைப் பயன்படுத்தி அவர்களுக்கு உரிய சேவைகள் வழங்கப்பட்டன. போதைப்பிரியர்களின் பிரச்சினைகளை இனங்காணல், பிரச்சினைகளைப் பொருள்வரையறை செய்தல், பிரச்சினைகளைப் பகுத்தாராய்தல் என்பவற்றின் ஊடாக அவர்களுக்கு ஏற்ற விதத்திலான சிகிச்சையளிப்புத் திட்டம் உளவள ஆலோசகரதும் உதவி உளவள ஆலோசகர்களதும் தலையீட்டுடன் தயாரிக்கப்பட்டு உளவள ஆலோசனை உதவியாளர்களது ஒத்துழைப்புடன் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதன்போது தனிநபர் உளவள ஆலோசனை, குழுநிலை உளவள ஆலோசனை, குடும்ப உளவள ஆலோசனை, தொழில் வழிகாட்டல், தன்னாபிமானத்தை ஏற்படுத்துவது சார்ந்த செயற்பாடுகள், ஆன்மீக விருத்திக்கான உளவள ஆலோசனைகள், சுற்றாடல் நயப்பு சார்ந்த செயற்பாடுகள், பொழுதுபோக்குசார் பண்புகளை விருத்திசெய்தல் போன்ற சேவைபெறுநரிடம் குடிகொண்டிருந்த பல்வேறு பக்கத்தோற்றங்களை முன்னேற்றும் நோக்குடன்கூடிய சிகிச்சையளிப்புத் திட்டமொன்றை உபயோகிப்பதன்மூலம் குறித்த சேவைகள் வழங்கப்பட்டன.

## நாளாந்த நிகழ்ச்சித்திட்டம்

எல்லா சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் வதிவிட சேவைபெறுநர்களுக்கு பொதுவான நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன. மு.ப. 5.30 மணி தொடக்கம் பி.ப. 10.00 மணி வரை தொடரும் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் அதிகாலை வேளை சந்திப்பு, தியான நிகழ்ச்சிகள், திறந்தவெளி மற்றும் உள்ளக விளையாட்டு நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சிகள், மௌனம் அனுஷ்டிப்பு காலம், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், தனிநபர் மற்றும் குழுநிலை அமர்வுகள், மாலைநேர சந்திப்புகள் போன்ற பல்வேறு செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எமது ஒவ்வொரு சிகிச்சையளிப்பு நிலையத்திலும் சிறப்பான நிகழ்ச்சிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நிலையத்தில் அமுல்படுத்தப்பட்டன.

## ஆன்மீக விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

போதைப்பிரியர்களின் கைவிட்டுப்போன ஆன்மீக ரீதியான நடத்தைகளை மீண்டும் போசிக்கும் நோக்குடன் எமது எல்லா சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் ஆன்மிக விருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு பூரணை நோன்மதி தினத்திலும் ஒவ்வொரு நிலையத்திலுமுள்ள வதிவிட சேவைபெறுநர்களை 'சில்' விரதம் அனுஷ்டிக்கச்செய்தல், அவர்கள் தர்ம உபந்நியாசங்களைச் செவிமடுக்க வழிவகைசெய்தல், மத வழிபாட்டுத்தலங்களுக்கு அவர்களை அழைத்துச்செல்லல், சிகிச்சையளிப்பு நிலையங்களின் தலைமையில் பௌத்தாலோக மாவத்தை வெசாக் வெளிச்சக்கூடு அமைக்கும் போட்டி, நிலையங்களின் வெசாக் வாழ்த்து அட்டைகள் மற்றும் வெசாக் வெளிச்சக்கூடு அமைத்தல், தானம் வழங்கும் 'பிங்கம' நிகழ்ச்சிகளில் சேவை பெறுநர்களை பங்கேற்கச்செய்தல், பொசொன் பண்டிகை சார்ந்த செயற்பாடுகள் என்பன இவற்றில் அடங்கும்.



சில் அனுஷ்டிப்பு நிகழ்வு - நவதிகன்த நிலையம்



வெசாக் வெளிச்சக்கூடு அமைத்தல் - கண்டி நிலையம்

## தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இவ்வாண்டிலும் எல்லா சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் சேவைபெறுநர்களுக்கான பல்வேறு தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. நாளாந்த சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படும் அதேவேளை, சேவைபெறுநர்களின் பங்களிப்புடன் ஆண்டு முழுவதும் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. சிகிச்சையளிப்புக்கான செயற்பாடொன்றாக தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொரு நிலையத்திலும் அமுல்படுத்தப்பட்டது.

## நிலையங்களில் அமுல்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| நிலையம் | | நிகழ்ச்சித்திட்டங்கள் |
|---|---|---|
| யொவுன் சிகிச்சையளிப்பு நிலையம் | - | கடித உறை தயாரித்தல், விவசாய நடவடிக்கைகள், அந்தூரியம் மலர்ச்செய்கை, ஓக்கிட் மலர்ச்செய்கை, ஹோட்டல் வேலை பயிற்சி, LED மின்குமிழ் தயாரிப்பு, கைகழுவுவதற்கான நீர்ம சவர்க்காரம் தயாரிப்பு. |
| தலங்கம நிலையம் | - | கால் துடைப்பம் தயாரித்தல், கடித உறை தயாரித்தல், தலையணை உறை தைத்தல், அலங்கார அட்டைகள் தயாரித்தல் |
| நவதிகன்த நிலையம் | - | விளக்குமாறு தயாரித்தல், கால் துடைப்பம் தயாரித்தல், விவசாய நடவடிக்கைகள், மலர்ச்சாடிகள் தயாரித்தல், ஓக்கிட் மலர்ச்செய்கை, கடித உறை தயாரித்தல், மின் மற்றும் இலத்திரனியல் சார்ந்த பயிற்சிகள். |
| காலி நிலையம | - | கால் துடைப்பம் தயாரித்தல், விவசாய நடவடிக்கைகள், மலர்ச் சாடிகள் தயாரித்தல், மோட்டார் வாகனம் திருத்த வேலை, மின் இணைப்பு வேலை, மலர்ச்செய்கை. |


நவதிகன்த நிலையம்


தலங்கம நிலையம்

## விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

சிகிச்சையளிப்பு மற்றும் நாளாந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு மேலதிகமாக, ஒவ்வொரு நிலையத்திலும் சேவைபெறுநர்களின் இரசணை உணர்வு கருதி ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி, சுற்றுலாக்களில் பங்குபற்றச்செய்தல், மாதம் ஒரு தடவை நடைபெறும் இசைக் கச்சேரி ('பெதுரு பாட்டிய') போன்ற விசேடமான பல நிகழ்ச்சித்திட்டங்கள் இதில் அடங்கும். மத வைபவங்கள், விளையாட்டுப் போட்டிகள், பக்திப் பாடல் இசைத்தல் நிகழ்ச்சிகள், ஆண்டிறுதி நாள் களியாட்ட நிகழ்ச்சிகள் என்பவற்றுடன் உந்துகைக்கான நிகழ்ச்சிகளும் இதில் உள்ளடங்கியிருந்தன.

.



விஷ்வ பாரமீ நிகழ்ச்சித்திட்டம் - காலி நிலையம்



அடிப்படை முதலுதவி பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் - கண்டி நிலையம்

**வருமான உருவாக்குகை**

2019 ஆம் ஆண்டிலும் இரண்டு பிரதான வருமான உருவாக்குகை மார்க்கங்களை சபையின் சிகிச்சையளிப்பு நிலையங்களில் அவதானிக்க முடிந்தது. அவை தெங்கு பயிரிடுவதன் மூலம் பெறப்பட்ட வருமானமும் கொடுப்பனவு அடிப்படையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்ட சேவை பெறுநர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானமுமாகும்.



தெங்கு பயிரிடல் - நவதிகன்த நிலையம்

**ஆலோசனை மற்றும் சிகிச்சையளிப்புச் சேவைகளை வழங்குதல்**

இவ்வாண்டில் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட 11,975 பேருக்கு சபையினால் உளவள ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன. இவர்களில் 2,575 பேருக்கு எமது சிகிச்சையளிப்பு நிலையங்களிலிருந்து ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக 1,161 பேர் வதிவிட சிகிச்சைக்காக சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

**மேல் மாகாண சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - தலங்கம**

இந்த நிலையத்தினால் 30 சேவைபெறுநர்களுக்கு வதிவிட சிகிச்சை அளிக்க முடியும். நிலையத்தின் சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 3 பிரிவுகளைக் கொண்டதாகும். சாதாரண பிரிவு, கொடுப்பனவு அடிப்படையிலான பிரிவு, மகளிர் பிரிவு என வெவ்வேறான மூன்று பிரிவுகள் உள்ளன. நிலையத்தினால் 2019 ஆம் ஆண்டில் 1,026 சேவைபெறுநர்களுக்கு உளவள ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. சாதாரண பிரிவு மூலம் 281 சேவைபெறுநர்களுக்கும், கொடுப்பனவு அடிப்படையிலான பிரிவு மூலம் 706 சேவை பெறுநர்களுக்கும், மகளிர் பிரிவு மூலம் 39 சேவைபெறுநர்களுக்கும் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன.

| உளவள ஆலோசனை/ வதிவிட சிகிச்சைச் சேவைகள் | சேவைகளைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உளவள ஆலோசனைச் சேவை | 1,026 |
| வதிவிட சிகிச்சைச் சேவை | 471 |

**இந்நிலையத்தின் சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின்மூலம் அமுல்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்:**

- ஒவ்வொரு பூரணை நோன்மதி தினத்திலும் 'சில்' விரதம் அனுஷ்டிப்பு நிகழ்ச்சிகளையும் தர்ம உபந்நியாசங்களையும் தர்ம கலந்துரையாடல்களையும் ஒழுங்குசெய்தல்.
- பெற்றோர்களுடனான மாதாந்த சந்திப்புகளையும் பிற்பாதுகாப்பிற்கான சந்திப்புகளையும் ஒழுங்குசெய்தல்.
- பல்கலைக்கழக மாணாக்கர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- கிரிக்கட் ஆட்டப் போட்டிகளை ஒழுங்குசெய்தல்.
- போதையூட்டும் ஔடத தடுப்புக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- சேவைபெறுநர்களின் இரசணை உணர்வு கருதி இசைக் கச்சேரிகளையும் ('பெதுரு பாட்டிய') இசை நிகழ்ச்சிகளையும் ஒழுங்குசெய்தல்.
- பணியாள்தொகுதியினர் பயிற்சி அமர்வுகளும் பாலியல் நோய்கள், காசநோய் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளும்.
- வெசாக் பண்டிகை சார்ந்த சமய செயற்பாடுகள் - பக்திப் பாடல் இசை நிகழ்ச்சி.
- சிங்கள புதுவருடக் கொண்டாட்டம்.
- மகளிருக்கான உளவள ஆலோசனை மற்றும் சிகிச்சையளிப்பு நிலையத்தை தொடர்ந்தும் இயக்கிச் செல்லல்.
- டெங்குநோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் சிரமதானப் பணியும்.
- சேவைபெறுநர்களுக்கான சுற்றுலாக்கள் அழைத்துச்செல்லல், புராதன ரஜமகா விகாரை, சீத்தாவக்க, தாவரவியல் பூங்கா, பனாகொட ரஜமஹா விகாரை.
- கரம், கிரிக்கட் ஆட்டம்.
- வயதுவந்தவர்களுக்கான ஆங்கிலமொழி வகுப்புக்கள்.
- உலக சிறுவர் தினத்தை ஒட்டிய விசேட நிகழ்ச்சிகள்
- நத்தார் பண்டிகைக் கொண்டாட்டம்.
- ஆண்டிறுதி நாள் களியாட்ட நிகழ்ச்சி (31 ஆம் திகதி இரவு).



பூப் பந்தாட்டம்




"பெதுரு பாட்டிய" நிகழ்ச்சி

**மத்திய மாகாண (யொவுன்) சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - கண்டி**

இந்நிலையத்தின் மூலம் ஒரே தடவையில் 35 பேருக்கு சேவைகளை வழங்க முடியும். இவ்வாண்டில் இந்நிலையத்தின் மூலம் 684 சேவைபெறுநர்களுக்கு உளவள ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன. அவர்களில் 166 சேவைபெறுநர்களுக்கு வதிவிட சிகிச்சையளிப்புச் சேவைகள் வழங்கப்பட்டன.

| உளவள ஆலோசனை / வதிவிட சிகிச்சை சேவைகள் | சேவைகளைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உளவள ஆலோசனைச் சேவை | 684 |
| வதிவிட சிகிச்சைச் சேவை | 166 |

**மத்திய மாகாண (யொவுன்) சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்தினால் கீழ்க்காணும் சிறப்பான நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டில் அமுல்படுத்தப்பட்டன:-**

- சேவைபெறுநர்களின் சிந்தனா ரீதியான ஆற்றல்களை விருத்திசெய்வதற்கு 'சேமபூமி' சங்கத்தை நடாத்துதலும் 'சேம பூமி' சஞ்சிகையை வெளியிடுதலும்.
- சேவைபெறுநர்களின் ஆன்மீக விருத்திச் செயன்முறைக்காக மாதம் ஒரு தடவை 'சில்' விரதம் அனுஷ்டிக்கும் நிகழ்ச்சித்திட்டம், மகா சங்கத்தினரை வரவழைத்து தர்ம உபந்நியாச நிகழ்வுகளை ஒழுங்குசெய்தல்.
- அவர்களின் அறிவையும் ஆற்றல்களையும் விருத்திசெய்வதற்காக விவாதப் போட்டி, ஆங்கில மொழி வகுப்புக்கள் என்பவற்றை ஒழுங்குசெய்தலும், வினா-விடைப் போட்டி நிகழ்ச்சிகள், நடன வகுப்புகள், கட்டுரைப் போட்டிகள், சித்திரப் போட்டிகள், இசை வகுப்புகள் என்பவற்றை ஒழுங்குசெய்தலும் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு முன் ஆயத்தப்படுத்தலும்.
- குடும்ப உறவுகளைக் கட்டியெழுப்புவதற்காக மாதம் ஒரு தடவை பெற்றோருடனான சந்திப்பொன்றை ஒழுங்குசெய்தல், இரசணை உணர்வை வளர்க்குமுகமாக திரைப்படங்களைப் பார்வையிடுதல், இசைக் கச்சேரிகளை (பெதுரு பாட்டி) ஒழுங்குசெய்தல், கயிறிழுத்தல் போட்டி போன்ற குழுநிலைச் செயற்பாடுகள், மாலைநேர சந்திப்புகள், நாடகங்களை நடித்துக்காட்டுதல், சிறுகதையாக்கம், பாட்டிசைத்தல் போன்ற செயற்பாடுகள்.
- சிங்கள புதுவருடக் கொண்டாட்டம், அதன் நிமித்தம் பல்வேறு கிராமிய பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல், வெசாக் பண்டிகையை முன்னிட்டு பக்தி கீதம் இசைத்தலும் சமய நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தலும், வெசாக் வெளிச்சக்கூடு நிர்மாணம், தன்சல தானம் வழங்கும் நிகழ்ச்சி என்பவற்றை ஒழுங்குசெய்தலும்.
- கரப்பந்து, கிரிக்கட், கெரம், டாம், சதுரங்க ஆட்டப் போட்டிகளை ஒழுங்குசெய்தல்.
- மாதாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் பணியாள்தொகுதியினருடன் சிகிச்சையளிப்புக்கான சந்திப்புக்களை ஒழுங்குசெய்தல்.
- ஆண்டு முழுவதிலும் *5S* நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.
- மாகாண போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டமும், வேறு போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களும்.
- பல்வேறு சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் - டெங்குநோய் ஒழிப்பு நோக்கிலான சிரமதானப் பணிகள், மனோ வைத்தியர்களின் மனநலம் பற்றிய சொற்பொழிவுகள், நோய்த்தடுப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை ஒழுங்குசெய்தல்.
- உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒழுங்குசெய்யப்படும் விசேட செயற்பாடுகள்:- அடிப்படை முதலுதவி பற்றி அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம், மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகமும் கண்டி பொது மருத்துவமனையின் சுகாதாரக் கல்விப் பிரிவும்

மூலம் அமுல்படுத்தப்பட்ட சுகாதார பிணியாய நிலைய மற்றும் மரநடுகை நிகழ்ச்சித்திட்டமும்.

- சேவைபெறுநர்களுடன் வெளிநிலை சுற்றாடல்சார் செயற்பாடுகள் - லங்காதிலக்க விகாரை, கடலாதெனிய விகாரை, நெல்லிகல ரஜமகா விகாரை, தலதா மாளிகை.
- தொழிற்பயிற்சி என்ற வகையில் கடித உறை தயாரித்தல், ஓக்கிட் மலர்ச்செய்கை சார்ந்த செயற்பாடுகள், விவசாய நடவடிக்கைகள், தொழில் வழிகாட்டல் ஆலோசனை, வாழ்த்து அட்டைகள் தயாரித்தல், ஹோட்டல் பயிற்சி.
- ஆண்டிறுதியில் நத்தார் பண்டிகை, டிசம்பர் 31 இரவு நேர களியாட்ட நிகழ்ச்சி.
- நடனம், இசை, ஆங்கிலமொழி அறிவை பிள்ளைகளுக்கு வழங்குதல்.
- சிறைச்சாலை ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் - தும்பறை சிறைச்சாலை.



கண்டி மருத்துவமனை சுகாதார பிணியாய் நிலைய நிகழ்ச்சித்திட்டம்



உலக சிறுவர் தின விசேட நிகழ்ச்சித்திட்டம்

**தென் மாகாண சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - காலி**

இந்நிலையத்தின் மூலமும் 35 சேவைபெறுநர்களுக்கு ஒரே தடவையில் சேவைகளை வழங்க முடியும். 2014 ஆம் ஆண்டில் கொடுப்பனவு அடிப்படையில் சேவைகளைப் பெறக்கூடிய ஒரு பிரிவும் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, நாளாந்தம் இவ்வாண்டில் 318 சேவைபெறுநர்கள் ஆலோசனை சேவைக்கும் 190 பேர் வதிவிட சிகிச்சைக்கும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

| உளவள ஆலோசனை / வதிவிட சிகிச்சை சேவைகள் | சேவைகளைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உளவள ஆலோசனைச் சேவை | 318 |
| வதிவிட சிகிச்சைச் சேவை | 190 |

**வதிவிட சேவைபெறுநர்களுக்கு இந்நிலையத்தின் மூலம் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன:**

- டெங்குநோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பற்சிகிச்சை முகாம்கள், ஆயுர்வேத சிகிச்சை முகாம்கள், உடல் நலம் மற்றும் உள நலம் பற்றிய சொற்பொழிவுகள், நிலையத்தில் சிரமதானப் பணிகள்.
- மாதாந்த ‘சில்’ விரதம் அனுஷ்டிப்பு நிகழ்ச்சி, பா வடிவில் வழங்கப்படும் ‘கவி பன’ எனும் நிகழ்ச்சி, வெசாக் மற்றும் பொசொன் பண்டிகை சார்ந்த செயற்பாடுகள்.
- வெசாக் வெளிச்சக்கூடு அமைத்தல்.
- மாதாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் பணியாள்தொகுதியினருடன் சிகிச்சையளிப்புக்கான சந்திப்புக்களை ஒழுங்குசெய்தல்.

- விவசாய நிகழ்ச்சித்திட்டங்கள், ஓக்கிட் மலர்ச்செய்கை, காளான் வளர்ப்பு, பல்வேறு தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல், மோட்டார் வாகனத் திருத்த வேலை, இலத்திரனியல்.
- பணியாள்தொகுதியினருக்கான பயிற்சி அமர்வுகளை ஒழுங்குசெய்தல்.
- குடும்ப சந்திப்புக்களும் பிற்பாதுகாப்பு சந்திப்புக்களும்.
- யோகாசன நிகழ்ச்சிகள்.
- சேவைபெறுநர்களின் இரசணை உணர்வை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சிகள் - ‘பெதுரு பாட்டிய’ போன்ற இசை நிகழ்ச்சிகள்.
- உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒழுங்குசெய்யப்படும் விசேட நிகழ்ச்சிகள்.
- 5S நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.
- மாகாண போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தையும் அதனோடிணைந்த போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒழுங்குசெய்தல்.
- புதுவருட, வெசாக், பொசொன் மற்றும் நத்தார் பண்டிகை சார்ந்த செயற்பாடுகள்.
- மருத்துவ மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- உளவள ஆலோசனைப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- கரப்பந்தாட்டம், கிரிக்கட், டாம், சதுரங்கம்,கெரம் போன்ற விளையாட்டுக்கள்.
- உடல் விருத்திக்கான நிகழ்ச்சிகள்.
- ஆண்டிறுதி வர்ண இரவு நிகழ்ச்சிகள்.



கிரிக்கட் ஆட்டத்தொடர்



யோகாசன பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

**நவதிகன்த சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - நிட்டம்புவ**

இந்நிலையத்தில் ஒரே தடவையில் 60 சேவைபெறுநர்களுக்கு சேவைகளை வழங்க முடியும். கொடுப்பனவு அடிப்படையில் சேவைகளை வழங்கும் பிரிவொன்றும் இங்குள்ளது. 2019 ஆம் ஆண்டில் இந்நிலையத்தில் ஆலோசனைச் சேவை வழங்கப்பட்ட சேவைபெறுநர்களின் மொத்த எண்ணிக்கை 547 ஆகும். அவர்களில் 334 சேவைபெறுநர்களுக்கு வதிவிட சிகிச்சையளிக்கப்பட்டது.

| உளவள ஆலோசனை/ வதிவிட சிகிச்சை சேவைகள் | சேவைகளைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உளவள ஆலோசனைச் சேவை | 547 |
| வதிவிட சிகிச்சைச் சேவை | 334 |

**நவதிகன்த சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்தின் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் நடப்பு ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன:**

- மாதாந்த ‘சில்’ விரதம் அனுஷ்டிப்பு நிகழ்ச்சி.
- சிங்கள புது வருடக் கொண்டாட்டம்.
- வெசாக், பொசொன், நத்தார் பண்டிகைகள் சார்ந்த செயற்பாடுகள்.
- இசை வழி சிகிச்சை முறைகள்.
- டெங்குநோய் ஒழிப்பு சார்ந்த செயற்பாடுகளும் சிரமதானங்களும்.
- ‘போதி பூஜை’ வழிபாட்டு நிகழ்ச்சிகள்.
- பணியாள்தொகுதியினருக்கான பயிற்சி அமர்வுகள்.
- சிகிச்சையளிப்புக்கான வாராந்த சந்திப்புகள்.
- குடும்பத்தவருடனான ஒன்றுகூடல்/ குழுநிலை உளவள ஆலோசனை/ பிரத்தியேக உளவள ஆலோசனை.
- பெற்றோருடனான சந்திப்பு.
- 5*S* நிகழ்ச்சித்திட்டம்.
- உடல் நலம் மற்றும் உள நலம் பற்றிய விரிவுரைகள்.
- தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- காசநோய் தடுப்பு/பாலியல் நோய்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள், நடமாடும் பற்சிகிச்சை முகாம்கள்.
- பிற்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்.
- ‘பெதுரு பாட்டிய’ போன்ற இசை நிகழ்ச்சிகள்.
- சிரமதான நிகழ்ச்சிகள்.
- கிரிக்கட் ஆட்டத்தொடர்களை ஒழுங்குசெய்தல்.
- நடன, நாடக நிகழ்ச்சிகள்.
- கல்வி நிகழ்ச்சிகள்.
- நத்தார் நிகழ்ச்சிகள்.
- ஆண்டு இறுதி (31 ஆம் நாள்) வர்ண இரவு நிகழ்ச்சி.
- பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- போதையூட்டும் ஔடத உளவள ஆலோசனையில் சான்றிதழ் கற்கைநெறி.



31 ஆந் திகதி வர்ண இரவு –
நவதிகன்த சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம்

**பிற்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2019**

2019 ஆம் ஆண்டில் அந்தந்த நிலையங்கள்மூலம் செய்யப்பட்ட பிற்பாதுகாப்பு தகவல்கள் கீழ் தரப்பட்டுள்ளன. சேவைபெறுநர்களை நிலையத்திற்கு வரவழைத்துக்கொள்ளல், தொலைபேசி ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், வெளிநிலைச் சேவைகள் போன்ற முறைகள் இங்கு கையாளப்பட்டன.

| நிலையம் | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தலங்கம | பிற்பாதுகாப்பு | 155 | 161 | 232 | 240 | 186 | 123 | 115 | 183 | 185 | 184 | 150 | 88 |
| | பாவனையைக் கைவிட்டோர் | 100 | 101 | 110 | 100 | 93 | 110 | 115 | 120 | 125 | 123 | 98 | 56 |
| | | | | | | | | | | | | | |
| கண்டி | பிற்பாதுகாப்பு | 22 | 20 | 30 | 21 | 26 | 25 | 21 | 30 | 29 | 27 | 31 | 30 |
| | பாவனையைக் கைவிட்டோர் | 21 | 18 | 28 | 19 | 25 | 24 | 18 | 26 | 28 | 25 | 26 | 25 |
| | | | | | | | | | | | | | |
| காலி | பிற்பாதுகாப்பு | 42 | 58 | 69 | 48 | 59 | 83 | 215 | 122 | 148 | 78 | 118 | 52 |
| | பாவனையைக் கைவிட்டோர் | 29 | 44 | 52 | 37 | 44 | 40 | 84 | 64 | 59 | 48 | 66 | 40 |
| | | | | | | | | | | | | | |
| நவதிகன்த | பிற்பாதுகாப்பு | 25 | 52 | 66 | 20 | 30 | 25 | 45 | 28 | 67 | 154 | 175 | 103 |
| | பாவனையைக் கைவிட்டோர் | 23 | 52 | 66 | 43 | 80 | 84 | 67 | 26 | 56 | 109 | 67 | 64 |




மேற்குறிப்பிட்ட தகவல்களின்படி 2019 ஆம் ஆண்டில் பிற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட சேவைபெறுநர்களில் தலங்கம நிலையத்தில் 2,102 சேவைபெறுநர்களும், காலி நிலையத்தில் 1,092 சேவைபெறுநர்களும், நவதிகன்த நிலையத்தில் 790 சேவைபெறுநர்களும், கண்டி நிலையத்தில் 312 சேவைபெறுநர்களும் இருப்பதுடன், இவர்களில் தலங்கம நிலையத்தில் 1,251 சேவைபெறுநர்களும், காலி நிலையத்தில் 607 சேவைபெறுநர்களும், நவதிகன்த நிலையத்தில் 737 சேவைபெறுநர்களும், கண்டி நிலையத்தில் 283 சேவைபெறுநர்களும் போதையூட்டும் ஔடத பாவனையை விட்டொழித்துள்ளதாக அறியக் கிடைத்தது. இதன் அடிப்படையில், எமது சிகிச்சையளிப்பு நிலையங்களினால் மாத்திரம் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களில் 2,878 பேர் போதையூட்டும் ஔடத பாவனையை விட்டொழித்துள்ளனர்.

### கந்தகாடு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டம்

கந்தகாடு புனர்வாழ்வளிப்பு நிலையத்திற்கு எமது சபையினால் இவ்வாண்டிலும் சிறப்பான ஒரு சேவை வழங்கப்பட்டது. எமது சிகிச்சையளிப்பு நிலையங்களில் சேவைகளில் ஈடுபடும் உளவள ஆலோசனை உதவியாளர் உத்தியோகத்தர்களும் எமது சிகிச்சையளிப்பு நிலையங்களில் நீண்ட காலம் பயிற்சிபெற்ற, நாளாந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உளவள ஆலோசனை உதவியாளர்களும் முழு நேர அடிப்படையில் தமது சேவைகளை வழங்கினர்.

## 8.4 பணியமர்வுசெய்யப்பட்ட மற்றும் தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்கள் பிரிவு - 2019

2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்கள் (சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு) பற்றிய பிரசாரம் அனைத்து போதையூட்டும் ஔடதங்கள் தனியார் மற்றும் பணியமர்வு செய்யப்பட்ட சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இப்பிரிவின் மேற்பார்வையின் கீழ் பெயரிடப்பட்ட 11 சிகிச்சையளிப்பு நிலையங்களும், 24 தனியார் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களும் உள்ளன.

**பணியமர்வுசெய்யப்பட்ட மற்றும் சிகிச்சையளிப்புப் பிரிவிற்கு உரியவையாக பெயர்குறிப்பீடு செய்யப்பட்ட சிகிச்சையளிப்பு நிலையங்களாக அழைக்கப்படும் சிறைச்சாலைகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | பல்லெகெலே | 7 | கந்தெவத்த |
| 2 | வட்டரெக்க | 8 | மீத்திரிகல |
| 3 | தல்தென | 9 | களுத்துறை |
| 4 | வீரவில | 10 | அம்பேபுஸ்ஸ |
| 5 | அநுராதபுரம் | 11 | கந்தகாடு |
| 6 | பல்லன்சேன | | |

மேலே குறிப்பிடப்பட்ட பணியமர்வு செய்யப்பட்ட சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் தங்கியிருப்பவர்களின் உளவள ஆலோசனை நடவடிக்கைகளுக்காக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உளவள ஆலோசனை உத்தியோகத்தர்கள் அந்நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

**போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வாழ்வளிப்புச் செயன்முறையும் மேற்கொள்ளப்படும் தனியார் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வாழ்வளிப்பு நிலையங்கள்**

| | சிகிச்சையளிப்பு நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | 'யௌவன கித்துமக' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'யௌவன கித்துமக' சிகிச்சையளிப்பு நிலையம், இல.289/1ஏ, களுஅந்துர, ஹேவாஇன்ன, அவிசாவளை | 0777 250754 |
| 02 | 'பெத்தும' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'பெத்தும' சிகிச்சையளிப்பு நிலையம், மல்வத்த, சியம்பலாகொட, பொலிகஸ்ஓவிட்ட | 077 7368332 |
| 03 | 'அல் அனோ கிளப்' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'அல் அனோ கிளப்' சிகிச்சையளிப்பு நிலையம், வாஸ் சென்டர், எவ்.ஆர்.டயஸ் மாவத்தை, வென்னப்புவை. | 031 2256034 |
| 04 | 'பெதெஸ்தா புனர்ஜீவன' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'பெதெஸ்தா புனர்ஜீவன' சிகிச்சையளிப்பு நிலையம், இல.60/14, பற்றிமா வத்த, தளுவகொட்டுவ, கொச்சிக்கடை | 071 5352908<br>071 9423916 |
| 05 | 'நேத்ரா' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'நேத்ரா' சிகிச்சையளிப்பு நிலையம், இல.70/8, ரப்பர்வத்த வீதி, கங்கொடவில, நுகேகொடை. | 077 3559792<br>0112 801960 |
| 06 | 'நவஜீவன அமத்யப்ப ஹன்ட சேவய' சிகிச்சை-யளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'நவஜீவன அமத்யப்ப ஹன்ட சேவய' சிகிச்சையளிப்பு நிலையம், உனவட்டுன, காலி | 077 1277474<br>077 9563207 |

| | | | |
|---|---|---|---|
| 07 | 'யஹபத் சமாரியயா' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'யஹபத் சமாரியயா' சிகிச்சையளிப்பு நிலையம், இல.50/5/ஏ, ராவத்த ஒழுங்கை, மட்டக்குளிய, கொழும்பு 15 | 071 4625598 |
| 08 | 'பொரொந்து தேசய' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'பொரொந்து தேசய' சிகிச்சையளிப்பு நிலையம், இல.389/பீ, மாதம்பிட்டிய, கொழும்பு 14 | 077 6763138<br>072 9870969 |
| 09 | 'மித்ர' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'மித்ர' சிகிச்சையளிப்பு நிலையம், கிண்ணியா, திருகோணமலை | |
| 10 | 'யௌவன சஹன சேவய' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'யௌவன சஹன சேவய' சிகிச்சையளிப்பு நிலையம், இல.220, மல்வத்த வீதி, நாகொட, கந்தானை. | 077 9207079<br>01122372163 |
| 11 | 'மித்துரு மித்துரோ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'மித்துரு மித்துரோ' சிகிச்சையளிப்பு நிலையம், ரில்ஹேன, பெல்மடுல்ல | 045 2274363 |
| 12 | 'நிதஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'நிதஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம், இல. 26,ஸ்ரீ சத்தாதிஸ்ஸ மாவத்தை, ஹிக்கஸ்ஹேன, குருவிட்ட | 071 8714377 |
| 13 | 'செனெஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'செனெஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம், இல.80, துன்போவில, பிலியந்தலை | 0112 613242<br>077 1251578 |
| 14 | 'அந்துரின் ஆலோக்கய' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'அந்துரின் ஆலோக்கய' சிகிச்சையளிப்பு நிலையம், இல.163, குடுமிரிச, கடவல, கட்டானை | 031 2248489 |
| 15 | 'கருணாவே நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'கருணாவே நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம், எலிப, கந்தன, ஹொரணை | 034 4940277 |
| 16 | 'மீதும' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'மீதும' சிகிச்சையளிப்பு நிலையம், 'சமன் பியச', விஜய குமாரதுங்க மாவத்தை, என்டேரமுல்ல, வத்தளை | 0112 946546 |
| 17 | 'பலய நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'பலய நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம், பரமாவலஹேன வத்த, பமுனுமுல்ல, பண்டாரகம | 038 4924889 |
| 18 | சுமித்ரயோ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'சுமித்ரயோ' சிகிச்சையளிப்பு நிலையம், இல.60, மெல் மெதுர, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு 07 | 0112 2694665 |
| 19 | 'ஜயவிரு சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம் (சமூக சேவைகள் திணைக்களம்) | பணிப்பாளர், 'ஜயவிரு சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம், நோர்த் அம்பலம் வத்த, புவக்பிட்டிய, அவிசாவளை | 0112 824056 |
| 20 | 'சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம் (சமூக சேவைகள் திணைக்களம்) | பணிப்பாளர், சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம், ஊவா மாகாண சமூக சேவைகள் ,'ஹாலிஎல, உடுவர | 055 2294787 |
| 21 | 'விமோச்சன' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'விமோச்சன' சிகிச்சையளிப்பு நிலையம், புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு | 077 6684671 |
| 22 | 'பொஸ்கோ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'பொஸ்கோ' சிகிச்சையளிப்பு நிலையம், கிரேடா புகையிரத நிலைய வீதி, தோட்டவெளி பாம், மன்னார் | 077 7805388 |
| 23 | 'நிசங்சல' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'நிசங்சல' சிகிச்சையளிப்பு நிலையம், இல.108, கீனிகம, புத்பிட்டிய | 033 3555740 |
| 24 | மித்துரு செவன சிகிச்சையளிப்பு நிலையம் | பாதுக்கை. | 077 8144414 |

**இந்தத் தனியார் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களுள், அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டுள்ள தனியார் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்கள்**

| | நிலையத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | 'மித்துரு மித்துரோ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'மித்துரு மித்துரோடு' சிகிச்சையளிப்பு நிலையம், ரில்ஹேன, பெல்மடுல்ல | 045 2274363 |
| 02 | 'நிதஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'நிதஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம், இல.26,ஸ்ரீ சத்தாதிஸ்ஸ மாவத்தை, ஹிக்கஸ்ஹேன, குருவிட்ட | 071 8714377 |
| 03 | 'செனெஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'செனெஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம், இல.80, துன்போவில, பிலியந்தலை | 0112 613242<br>077 1251578 |
| 04 | 'நிசங்சல' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'நிசங்சல' சிகிச்சையளிப்பு நிலையம், இல.108, கீனிகம, புத்பிட்டிய | 033 3555740 |
| 05 | 'கருணாவே நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'கருணாவே நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம், அலிப, கந்தன, ஹொரணை | 034 4940277 |
| 06 | 'மீதும' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'மீதும' சிகிச்சையளிப்பு நிலையம், 'சமன் பியச',விஜய குமாரதுங்க மாவத்தை, என்டேரமுல்ல, வத்தளை | 0112 946546 |
| 07 | 'பலய நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'பலய நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம், பரமாவலஹேன வத்த, பமுனுமுல்ல, பண்டாரகம | 038 4924889 |
| 08 | 'அந்துரின் ஆலோக்கய' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'அந்துரின் ஆலோக்கய' சிகிச்சையளிப்பு நிலையம், இல.163, குடுமிரிச, கடவல, கட்டானை | 031 2248489 |
| 09 | சுமித்ரயோ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'சுமித்ரயோ' சிகிச்சையளிப்பு நிலையம், இல.60, மெல் மெதுர, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு 07 | 0112 2694665 |
| 10 | 'ஜயவிரு சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம் (மாகாணசமூக சேவைகள் திணைக்களம்) | பணிப்பாளர், 'ஜயவிரு சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம், நோர்த் அம்பலம் வத்த, புவக்பிட்டிய,அவிசாவளை | 0112 824056 |
| 11 | 'சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம் (மாகாணசமூக சேவைகள் திணைக்களம்) | 'சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம், ஊவா மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர், ஹாலிஎல, உடுவர | 055 2294787 |
| 12 | 'விமோச்சன' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'விமோச்சன' சிகிச்சையளிப்பு நிலையம், புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு | 077 6684671 |
| 13 | 'பெதெஸ்தா புனர்ஜீவன' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'பெதெஸ்தா புனர்ஜீவன' சிகிச்சையளிப்பு நிலையம், இல.60/14, பற்றிமா வத்த, தளுவகொட்டுவ, கொச்சிக்கடை | 071 5352908<br>071 9423916 |

**2019 ஆம் ஆண்டில் பணியமர்வுசெய்யப்பட்ட மற்றும் தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்களினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | கலந்துகொண்ட சேவைபெறுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பிரத்தியேக உளவள ஆலோசனை | 5200 | 5200 |
| குழுநிலை உளவள ஆலோசனை | 743 | 3180 |
| குடும்ப உளவள ஆலோசனை | 540 | 1120 |
| விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் (விபஸ்ஸனா பாவனா நிகழ்ச்சித்திட்டமும் வார பாடசாலை நிகழ்ச்சித்திட்டமும் அடங்கலாக) (சிறைச்சாலை/ தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்கள்) | 134 | 6700 |
| பணியாள்தொகுதியினரைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 16 | 364 |
| தடுப்பு மற்றும் சிகிச்சையளிப்பு, புனர்வாழ்வளிப்பு, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (சிறைச்சாலை/ தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்கள்) | 38 | 1030 |

**2019 ஆம் ஆண்டில் பணியமர்வுசெய்யப்பட்ட மற்றும் தனியார் சிகிச்சையளிப்பு நிலையப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட புலனாய்வு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்**

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர்கள் | 20 |
| போதையூட்டும் ஔடத கல்வி உத்தியோகத்தர்கள் | 15 |
| தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்கள் | 47 |
| பணியமர்வுசெய்யப்பட்ட சிகிச்சையளிப்பு நிலையங்கள் (சிறைச்சாலை) | 34 |
| தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் சிகிச்சையளிப்பு நிலையங்கள் | 10 |
| பிற வெளிக்கள நடவடிக்கைகள் | 29 |
| சமுதாய புத்துயிர்ப்பூட்டல் நடவடிக்கைகள் (நடமாடும் நிகழ்ச்சிகள்) | 04 |

**தனியார் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் 2019 ஆம் ஆண்டில் வதிவிட சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்ட சேவைபெறுநர்களின் அளவு**

| சிகிச்சையளிப்பு நிலையம் | முகவரி | 2019 ஆம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவை பெறுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 'பெதெஸ்தா புனர்ஜீவன' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'பெதெஸ்தா புனர்ஜீவன' சிகிச்சையளிப்பு நிலையம், இல.60/14, பற்றிமா வத்த, தலுவகொட்டுவ, கொச்சிக்கடை | 1705 |
| 'மித்துரு மித்துரோ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'மித்துரு மித்துரோ' சிகிச்சையளிப்பு நிலையம், ரில்ஹேன, பெல்மடுல்ல | 104 |
| 'நிதஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'நிதஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம், இல.26,ஸ்ரீ சத்தாதிஸ்ஸ மாவத்தை, ஹிக்கஸ்ஹேன, குருவிட்ட | 66 |
| 'செனெஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'செனெஹஸ' சிகிச்சையளிப்பு நிலையம், இல.80, துன்போவில, பிலியந்தலை | 58 |
| 'நிசங்சல' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'நிசங்சல' சிகிச்சையளிப்பு நிலையம், இல.108, கீனிகம, புத்பிட்டிய | 55 |
| 'அந்துரின் ஆலோக்கய' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'அந்துரின் ஆலோக்கய' சிகிச்சையளிப்பு நிலையம், இல.163, குடுமிரிச, கடவல, கட்டானை | 586 |
| 'கருணாவே நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'கருணாவே நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம், அலிப, கந்தன, ஹொரணை | 104 |
| 'மீதும' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'மீதும' சிகிச்சையளிப்பு நிலையம், 'சமன் பியச', விஜய குமாரதுங்க மாவத்தை, என்டேரமுல்ல, வத்தளை | 55 |
| 'பலய நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'பலய நிவஸ' சிகிச்சையளிப்பு நிலையம், பரமாவலஹேன வத்த, பமுனுமுல்ல, பண்டாரகம | 58 |
| சுமித்ரயோ' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'சுமித்ரயோ' சிகிச்சையளிப்பு நிலையம், இல.60, மெல் மெதுர, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு 07 | (உளவள ஆலோசனைக்கு மட்டும்) |
| 'ஜயவிரு சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம் (மாகாண சமூக சேவைகள் திணைக்களம்) | பணிப்பாளர், 'ஜயவிரு சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம், நோர்த் அம்பலம் வத்த, புவக்பிட்டிய, அவிசாவளை | 429 |
| 'சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம் (மாகாண சமூக சேவைகள் திணைக்களம்) | 'சமாதி நிவஹன' சிகிச்சையளிப்பு நிலையம், ஊவா மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர், ஹாலிஎல, உடுவர | 54 |
| 'விமோச்சன' சிகிச்சையளிப்பு நிலையம் | பணிப்பாளர், 'விமோச்சன' சிகிச்சையளிப்பு நிலையம், புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு | 64 |
| **சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்ட மொத்த சேவை பெறுநர்களின் எண்ணிக்கை** | | **3338** |

## 8.5 வெளிநிலைச் சேவைகள் பிரிவு - 2019

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வெளிநிலைச் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பொதுமக்களின் அறிவை விருத்திசெய்வதன் ஊடாக போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வியைக் குறைத்தல், போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களுக்கு அவற்றைப் பாவிப்பதிலிருந்து விடுபடச்செய்வதற்கு உதவுதல், சிகிச்சையளிப்புக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தல், வழங்கலைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குதல் என்பவற்றின் மீது விசேட கவனம் செலுத்தப்படுகிறது.

சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் செயன்முறையின்போது அடிமைப்பட்டவர்களுக்கு அதனைப் பாவிப்பதிலிருந்து விடுபடுவதற்கு அவசியமான திறன்களை விருத்திசெய்வதில் உதவுதல், அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கான ஆலோசனை ரீதியான தலையீடுகளை மேற்கொள்ளல் என்பவற்றுடன் அவசியமான வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன. வெளிநிலைச் சேவைகள் பிரிவினால் 09 மாகாணங்களுக்குரிய 18 மாவட்டங்களை உள்ளடக்கியதாக நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது. அதற்கமைய, தலைமை அலுவலகத்தை மையமாகக்கொண்டு இப்பிரிவினால் பின்வரும் கருமங்கள் ஆற்றப்படுகின்றன:

- போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் நபர்களை இனங்காணலும் அவர்கள் பற்றிய தரவுகளை ஆவணப்படுத்தலும்.
- இனங்காணப்பட்ட நபர்களுக்கு சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை அளித்தலும் அத்தகையவர்கள் போதையூட்டும் ஔடத பாவனையை விட்டொழிவதற்கு அவசியமான தலையீட்டை மேற்கொள்ளலும்.
- அவசியமான வேளைகளில் சபைக்கும் ஏனைய சிகிச்சையளிப்பு நிலையங்களுக்கும் அவர்களை ஆற்றுப்படுத்துதல்.
- அரசாங்க வைத்தியசாலைகளை மையமாகக்கொண்டு போதையூட்டும் ஔடத பாவனையாளர்களுக்கான சிகிச்சைகளும் ஆலோசனைகளும் பிணியாய் நிலையங்களும் ஊடாக உதவுதல்.
- சிகிச்சைபெறுவோரின் பிற்பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பாவனையாளர்களின் குடும்பங்களுக்கு அவசியமான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- அவர்களின் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு, சட்ட, சுகாதார மற்றும் சமூக ரீதியான பிரச்சினைகளை நிவர்த்திசெய்துகொள்வதற்கான வழிகாட்டலை வழங்குதல்.
- குறித்த அதிகார இடப்பரப்பில் அரசாங்க நிறுவனங்களையும் பாடசாலைகளையும் இளைஞர் குழுக்களையும் இலக்காகக்கொண்டு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இளைஞர் குழுக்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற பிரிவுகளின் அங்கத்தவர்கள் என்பவர்களுக்கு போதையூட்டும் ஔடத தடுப்பு மற்றும் சிகிச்சையளிப்புசார் கருமங்களில் பயிற்சியளித்தல்.
- எல்லா மாகாண சபைகளையும் இணைத்துக்கொண்டு மாகாண பிரதம செயலாளரின் தலைமையில் மாகாண போதையூட்டும் ஔடத தடுப்பு, சிகிச்சையளிப்பு, கட்டுப்பாட்டு என்பவற்றுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

மேற்போந்த கருமங்களை நிறைவேற்றுவதற்கு 2019 டிசம்பர் மாதமளவில் 24 வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர்கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தறை, காலி, குருணாகல்,

புத்தளம், அநுராதபுரம், இரத்தினபுரி, பொலன்னறுவை, கண்டி, நுவரெலியா, மாத்தளை, அம்பாறை, பதுளை, யாழ்ப்பாணம், மொணராகலை, கேகாலை ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கப்படுவதுடன், தேவைப்பாட்டின் அடிப்படையில் ஏனைய மாவட்டங்களையும் உள்ளடக்குவதற்கு தயார்நிலையில் உள்ளனர்.

வெளிநிலைச் சேவைகள் பிரிவின் 2019 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய குறித்த இலக்குகளை எய்தி கீழ்க்காணும் செயற்பாடுகளின் ஊடாக சேவைகளை எதிர்பார்க்கும் மக்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டன.

**போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களின் சிகிச்சையளிப்புக்கான செயற்பாடுகளும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களும்**

போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்கள் பெரும்பாலும் இருக்கின்ற பிரதேசங்களை இனங்கண்டு, அத்தகைய பிரதேசங்களில் இருக்கின்ற போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களை நிரற்படுத்தி, அவர்களின் வீடுகளில் இருந்துகொண்டே பாவனையைக் கைவிடுவதற்கு அவசியமான சிகிச்சைசார் தலையீடுகளை மேற்கொள்ளல், சிகிச்சையளிப்புசார் ஆலோசனை, சிகிச்சையளிப்பு நிலையங்களுக்கு ஆற்றுப்படுத்துதல், அரச வைத்தியசாலைகளில் வைத்திய சிகிச்சைகளுக்கு ஆற்றுப்படுத்துதல், பிற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்போரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆலோசனை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல், சிறையிடப்பட்டுள்ள போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களுக்கான ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

| நிகழ்ச்சித்திட்டம் | சேவைபெறுநர்களின் எண்ணிக்கை |
|---|---|
| புதிதாக இனங்காணல்கள் | 5688 |
| சிகிச்சையளிப்புக்கு ஆற்றுப்படுத்துதல் | 2279 |
| போதையூட்டும் ஔடதங்களை விட்டு விடுதலையாதல் | 800 |
| பிற்பாதுகாப்பு | 4557 |

**உருவரை 01**



| புதிதாக இனங்காணப்பட்டவர்களின் எண்ணிக்கை | |
|---|---|
| ஹெரோயின் | 3596 |
| கஞ்சா | 630 |
| மருந்து மாத்திரைகள் | 286 |
| மெத்தெம்பிட்டமின் (ஐஸ்) | 200 |
| அற்கஹோல் | 976 |

**உருவரை 02**




3,252 சிறைக் கைதிகளுக்கு வெலிக்கடை, மஹர, பல்லன்சேன, அங்குனுகொலபெலெஸ்ஸ, பொலன்னறுவை சிறைச்சாலைகளில் உளவள ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்தினால் (BCGR) அமுல்படுத்தப்படும் சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சேனபுர தொழிற்பயிற்சிப் பிரிவில் சிகிச்சை பெறுவோருக்கான உளவள ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் மாதந்தோறும் 03 நாட்கள் அமுல்படுத்தப்பட்டது.

**வைத்தியசாலை உளவள ஆலோசனை மற்றும் சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

மாவட்ட வைத்தியசாலைகளுடன் இணைந்து போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களுக்கு சிகிச்சையளிப்பு முகாம்கள் பின்வரும் வைத்தியசாலைகளில் அமுல்படுத்தப்படுகின்றன.

வத்துபிட்டிவல, பியகம, கம்பஹா, லுனாவை, மாத்தளை, தம்புள்ளை, வெல்லவாய, மொணராகலை, பொலன்னறுவை, மினுவான்கொடை, மாவத்தகம, கண்டி, பதுளை, நாவலப்பிட்டி, கராப்பிட்டி ஆகிய வைத்தியசாலைகளில் பிணியாய் நிலைய சேவைகளும் உளவள ஆலோசனை அமர்வுகளும் நடாத்தப்படுகின்றன.




நாவலப்பிட்டி வைத்தியசாலை பிணியாய் நிலையம்



லுனாவ வைத்தியசாலை பிணியாய் நிலையம்

போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பதன்பால் தூண்டப்பட வாய்ப்புள்ளவர்களை அதிலிருந்து தடுக்கும் நோக்குடன் நாட்டின் எல்லாப் பிரதேசங்களையும் உள்ளடக்கி வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர்களினால் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

| நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சனசமூக நிகழ்ச்சித்திட்டங்கள் (கண்காட்சிகள், நடமாடும் விழிப்புணர்வூட்டல்கள் முதலியன) | 318 | 13,1743 |
| சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்களின் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 44 | 3,270 |
| அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 161 | 13,283 |
| சுகாதாரத் துறையினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 52 | 3,404 |
| தனியார் துறையினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 67 | 2,785 |
| தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 32 | 2,154 |
| பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 304 | 58,740 |
| பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 164 | 12,493 |
| நெசவுத் துறையினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 08 | 1,338 |
| கைத்தொழில் துறையினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 08 | 329 |
| மீனவ சமூகத்தினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 15 | 744 |
| கட்டுமானத் துறையினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 28 | 591 |
| தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 47 | 3,514 |
| சாரதிகள் மற்றும் சாரதி உதவுநர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் | 117 | 7,348 |

**மாகாண போதையூட்டும் ஔடத தடுப்பு, சிகிச்சையளிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

மாகாண மட்டத்தில் போதையூட்டும் ஔடத தடுப்பு, சிகிச்சையளிப்பு மற்றும் கட்டுப்படுத்தல் நோக்குடன் இலங்கையின் அனைத்து மாகாண சபைகளையும் இணைத்துக்கொண்டு மாகாண பிரதம செயலாளர்களின் தலைமையில் மாகாண சபைகளின் கீழுள்ள அனைத்து அமைச்சுக்களையும் இணைத்துக்கொண்டு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தொழில்நுட்ப ரீதியான உதவியுடன் போதையூட்டும் ஔடத தடுப்பு, சிகிச்சையளிப்பு, கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டில் வட மத்திய மாகாண சபை, மத்திய மாகாண சபை, மேல் மாகாண சபை, ஊவா மாகாண சபை, தென் மாகாண சபை ஆகியவற்றில் இந்நிகழ்ச்சித்திட்டம் முனைப்புடன்

அமுல்படுத்தப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் ஏனைய மாகாண சபைகளில் இந்நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவசியமான பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



ஊவா மாகாணம்



மத்திய மாகாணம்

**மாவட்ட போதையூட்டும் ஔடத தடுப்பு, சிகிச்சையளிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

போதையூட்டும் ஔடத தடுப்பு, சிகிச்சையளிப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகளை பிரதேச மட்டத்தில் விஸ்தரிப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப அறிவுள்ள உத்தியோகத்தர்கள் பிரதேச மட்டத்தில் காணப்படாமையால், மாவட்ட செயலாளரினதும் பிரதேச செயலாளர்களினதும் தலையீட்டுடன் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடன் இணைந்து செயலாற்றுவதற்கு இலங்கையின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் பிரதேச செயலகங்களிலிருந்து பெயர்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் குறித்த பிரதேசத்தின் மாவட்ட செயலகங்களில் அவர்களுக்கு போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு, சிகிச்சையளிப்பு, கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பிரயோக ரீதியாக மேற்கொள்வது பற்றிய ஒரு நாள் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட்டது.

அதன் இரண்டாம் கட்டமாக மாவட்ட ரீதியாக மூன்று நாள் பயிற்சியொன்று நடாத்தப்படவுள்ளது. அதன் முதலாவது மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கேகாலை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது.

ஏனைய மாவட்டங்களுக்கு 2020 ஆம் ஆண்டில் இப்பயிற்சியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.



கேகாலை மாவட்ட அணி



யாழ்ப்பாணம் மாவட்ட அணி

**சமுதாயத்தினரின் அறிவை விருத்திசெய்தல்**

சமுதாயத்திலுள்ள நபர்களின் அறிவை விருத்திசெய்வதற்காக 2019 ஆம் ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. பொதுமக்கள் அதிகமாக நடமாடக்கூடிய இடங்களைத் தெரிவுசெய்து துண்டுப்பிரசுரங்களைப் பகிர்ந்தளித்ததுடன் அவர்களை அறிவூட்டுவதற்கும், பொது மக்களுக்கென்றே விசேடமாக திட்டமிடப்பட்ட இடங்களிலும் நிறுவனங்களிலும் கண்காட்சிகளை நடாத்துவதற்கும் சிறப்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### நடமாடும் போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டம்

நுவரெலியா வசந்த கால களியாட்டம், கண்டி தலதா பெரஹரா ஊர்வலம் என்பவற்றின்போது முன்னெடுக்கப்பட்ட நடமாடும் போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இங்கு கோட்டிட்டுக் காட்டத்தக்கனவாகும். பொது மக்களின் அறிவை விருத்திசெய்யும் நோக்குடன் துண்டுப்பிரசுரங்களும் ஸ்ரிக்கர்களும் சுவரொட்டிகளும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வடிவமைக்கப்பட்டு பொதுமக்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது.





### அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும்










### 2019.01.21 ஆந் திகதியிலிருந்து 2019.12.31 ஆந் திகதி வரை 1984 தகவல் நிலையத்திற்குக் கிடைத்த தகவல்களும் நடவடிக்கைகளும் சம்பந்தமான பொழிப்பறிக்கை

| தகவல்கள் | 2019.01.21 - 2019.12.31 வரை 1984 தகவல் நிலையத்திற்குக் கிடைத்த தகவல்களின் எண்ணிக்கை | பிரிவுக்கு ஆற்றுப் படுத்தப் பட்டுள்ள தகவல்களின் எண்ணிக்கை | கிடைத்துள்ள பதில் தகவல்கள் | | | | கிடைக்க வுள்ள பதில்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | வெற்றிகரமான முற்றுகைகளின் எண்ணிக்கை | புலனாய்வு மட்டத்தில் உள்ளவற்றின் எண்ணிக்கை | பொய்த் தகவல்கள் | மொத்தம் | |
| போதையூட்டும் ஔடதங்கள் | 6397 | 6397 | 1005 | 3829 | 32 | 4866 | 1531 |
| சட்டவிரோதமான அற்கஹோல் | 3604 | 3604 | 1112 | 1671 | 15 | 2798 | 806 |
| **மொத்தம்** | **10001** | **10001** | **2117** | **5500** | **47** | **7664** | **2337** |

**2019.01.21 ஆந் திகதியிலிருந்து 2019.12.31 ஆந் திகதி வரை 1984 தகவல் நிலையத்திற்குக் கிடைத்த தகவல்களும் பதில்களும் சம்பந்தமான அறிக்கை**

| தொ. இல. | பொலிஸ் பிரிவு | சட்டவிரோதமான சாராயம் (கசிப்பு) | | போதையூட்டும் ஔடதங்கள் (ஹெரொயின்/கஞ்சா) | |
|---|---|---|---|---|---|
| | | முறைப்பாடுகள் | பதில்கள் | முறைப்பாடுகள் | பதில்கள் |
| 01 | கண்டி | 43 | 35 | 213 | 144 |
| 02 | கம்பளை | 01 | 01 | 31 | 23 |
| 03 | மாத்தளை | 76 | 60 | 137 | 110 |
| 04 | நுவரெலியா | 16 | 16 | 12 | 12 |
| 05 | ஹற்றன் | 09 | 09 | 12 | 12 |
| 06 | அநுராதபுரம் | 347 | 278 | 410 | 347 |
| 07 | பொலன்னறுவை | 108 | 80 | 129 | 92 |
| 08 | குருணாகல் | 170 | 150 | 249 | 220 |
| 09 | குளியாப்பிட்டி | 197 | 190 | 200 | 190 |
| 10 | நிக்கரவெட்டிய | 105 | 95 | 66 | 64 |
| 11 | புத்தளம் | 62 | 58 | 92 | 86 |
| 12 | சிலாபம் | 89 | 69 | 134 | 92 |
| 13 | மாத்தறை | 136 | 112 | 195 | 135 |
| 14 | காலி | 192 | 140 | 366 | 215 |
| 15 | எல்பிட்டிய | 109 | 95 | 136 | 108 |
| 16 | தங்காளை | 138 | 59 | 199 | 142 |
| 17 | கொழும்பு மத்தி | 02 | 02 | 72 | 52 |
| 18 | கொழும்பு வடக்கு | 05 | 05 | 166 | 132 |
| 19 | கொழும்பு தெற்கு | - | - | 121 | 75 |
| 20 | களனி | 87 | 66 | 445 | 372 |
| 21 | கம்பஹா | 185 | 147 | 389 | 290 |
| 22 | நீர்கொழும்பு | 74 | 49 | 231 | 178 |
| 23 | நுகேகொடை | 127 | 84 | 494 | 322 |
| 24 | கல்கிசை | 33 | 24 | 439 | 377 |
| 25 | பானந்துறை | 159 | 133 | 214 | 147 |
| 26 | களுத்துறை | 297 | 256 | 242 | 196 |
| 27 | மட்டக்களப்பு | 04 | 02 | 18 | 04 |
| 28 | அம்பாறை | 12 | 12 | 37 | 37 |
| 29 | திருகோணமலை | 12 | 08 | 49 | 30 |
| 30 | கந்தளாய் | 06 | 06 | 21 | 14 |
| 31 | காங்கேசன்துறை | - | - | - | - |
| 32 | யாழ்ப்பாணம் | 05 | 05 | 06 | 06 |
| 33 | வவுனியா | - | - | 06 | 06 |
| 34 | கிளிநொச்சி | 09 | 09 | 07 | 07 |
| 35 | மன்னார் | 01 | 01 | 06 | 06 |
| 36 | முல்லைத்தீவு | 17 | 10 | 13 | 08 |
| 37 | இரத்தினபுரி | 198 | 133 | 309 | 240 |
| 38 | கேகாலை | 179 | 123 | 200 | 131 |
| 39 | சீத்தாவக்கபுர | 201 | 147 | 127 | 89 |
| 40 | பதுளை | 58 | 38 | 58 | 42 |
| 41 | பண்டாரவளை | 34 | 22 | 20 | 16 |
| 42 | மொணராகலை | 88 | 60 | 106 | 86 |
| 43 | தெல்தெனிய | 04 | 04 | 07 | 04 |
| 44 | அம்பிலிபிட்டிய | 09 | 05 | 13 | 07 |
| **மொத்தம்** | | **3604** | **2798** | **6397** | **4866** |

## 8.6 தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்கள் ஆய்வுகூடம் (NNL)

### 8.6.1 இலங்கையில் பரம்பியுள்ள துஷ்பிரயோக போதையூட்டும் ஔடதங்களை அடையாளம் காணல்

#### 8.6.1.1 தெருவில் கிடைக்கும் ஹெரொயின் பற்றிய ஆராய்ச்சிக் கருத்திட்டம்

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வுகளுக்கு மேலதிகமாக, பின்வரும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களும் தொடராக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன:-

- 'தெருவில' கிடைக்கும் ஹெரொயினின் விலை எதிர் தூய்தானதன்மை (Price vs Purity) பற்றி வெளிப்படுத்தி, அதிலுள்ள தொடர்பை அடையாளம் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள்.
- ஹெரொயின் மாதிரிப் பொருள்களின் தோற்றுவாயையும் பரிணாமத்தையும் அடையாளம் காணல்.
- 'தெரு' ஹெரொயின் மாதிரிப் பொருள்களிலுள்ள (Street Samples) புதிய செறிவு தளர்த்தும் பதார்த்தங்களை (Adulterants) அடையாளம் காண்பதற்கான பகுப்பாய்வுகள்.

பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் பணியகத்தின் ஒத்துழைப்புடன் இக்கருத்திட்டம் முன்னெடுக்கப்படுவதுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாதாந்தம் சேகரிக்கப்படும் மாதிரிப் பொருள்கள் இந்த ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 154 தெரு ஹெரொயின் மாதிரிப் பொருள்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் அடங்கியுள்ள டை எசடைல் மோர்.ஃபீன் (ஹெரொயின்) சதவீதத்தையும், கலப்படப் பதார்த்தங்களையும், கலவையின் செறிவு தளர்த்தும் பதார்த்தங்களையும் அடையாளம் காண்பதற்கான பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 01 -**

**2019 ஆம் ஆண்டில் பகுப்பாய்வுசெய்யப்பட்ட மாதிரிப்பொருள்களின் எண்ணிக்கை**

| மாதம் | மாதிரிப்பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|
| பெப்ரவரி | 20 |
| மார்ச் | 17 |
| ஏப்ரல் | 19 |
| மே | 16 |
| யூன் | 18 |
| யூலை | 16 |
| ஆகஸ்ட் | 18 |
| நவம்பர் | 17 |
| டிசம்பர் | 13 |
| **மொத்தம்** | **154** |

தெரு ஹெரொயின் மாதிரிப்பொருள்களின் விலைக்கும் தூய்தான தன்மைக்கும் இடையிலான தொடர்பு குறித்து ஆராய்வதை பயனர்களுக்கும் சந்தைக்கும் இடையிலான தொடர்பைக் கண்காணிப்பதற்கான மிகச் சிறந்த ஒரு குறிகாட்டியாகக் கொள்வதன் மூலம் கிடைப்பனவில் ஏற்படக்கூடிய மாற்றங்களை மிக எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். இது தவிர, விலைக்கும் தூய்தான தன்மைக்கும் இடையில்

நிலவும் தொடா்புகளைத் தெளிவுபடுத்திக்கொள்வதன் மூலமும் போதையூட்டும் ஔடதங்களின் வழங்கல் முறைகளை அடையாளம் காண்பதன் ஊடாகவும், திட்டமிட்ட இலக்குகளைப் பிரயோகித்து அமுல்படுத்துவதன் ஊடாகவும் கடத்தல், போக்குவரவு செய்தல், கைப்பற்றப்படும் ஹெரோயின் மற்றும் பயனர்களுக்கு மிகச் சிறந்த முறையில் சட்டத்தை அமுல்படுத்த முடியும்.

இந்த ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின்படி இலங்கையில் தெரு மட்ட ஹெரோயின் மாதிரிப்பொருள்களின் தூய்தான தன்மைக்கும் விலைக்கும் இடையிலான தொடா்பும், கிரமமான ஆய்வொன்றின் மூலம் பெறப்பட்ட தகவல்களும், கொள்கை வகுப்பின்போதும் சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தா்களின் செயற்பொறுப்பின்போதும் முக்கியமானதாக அமைவதுடன், கைப்பற்றப்படும் பாரியளவிலான போதையூட்டும் ஔடத கையிருப்புகள், ஹெரோயின் மாதிரிப்பொருள்களின் தூய்தான தன்மைக்கும் விலைகளுக்கும் இடையிலான தொடா்பின் மீது பாதிப்புச் செலுத்த முடியுமா என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் பணியகத்தினால் சனவரி, செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் போதையூட்டும் ஔடத மாதிரிப்பொருள்கள் வழங்கப்படவில்லை என்பதுடன், ஆய்வுக்கு உட்படுத்தப்படும் 13 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில நகரங்களின் விலை மற்றும் தூய்தான தன்மை தொடா்பிலான தரவுகள் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. தூய்தான தன்மையின் ஆகக்கூடிய சராசரிப் பெறுமானம் ஏப்ரல் மாதத்தில் 83.59% ஆகக் காணப்படுவதுடன் ஏப்ரல், யூன், யூலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் ஆகக் குறைந்த சராசரிப் பெறுமானமான 0% அறிக்கையிடப்பட்டது.

**அட்டவணை இல. 02 - மாதிரிப்பொருள்களின் தூய்தான தன்மை (டை எசிட்டைல் மோர்.ீ.பீன் சதவீதம்)**

| பிரதேசம் | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஆகஸ்ட் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலி (காலி 01) | 2.5 | 66.7 | | 19.01 | 75.04 | | 3.6 | 8.04 | |
| காலி (காலி 02) | | | | | | | 0 | 8.04 | |
| காலி (ஹிக்கடுவை) | | | 16 | | | | | | 52.89 |
| கொழும்பு (மட்டக்குளி) | 43.4 | 34.7 | | | | | | | |
| கொழும்பு (கொழும்பு) | | | | | | | | 0 | |
| கொழும்பு (வடக்கு) | | | 37.46 | 62.57 | 0.74 | 60.23 | | | |
| கொழும்பு (நுகேகொட) | | | | | | | 22.9 | | |
| கம்பஹா (நீர்கொழும்பு 01) | 0.9 | 1.2 | 2.53 | 79.91 | 1.29 | 71.93 | | 0 | |
| கம்பஹா (நீர்கொழும்பு 02) | | | | | | 60.81 | | | |
| கம்பஹா (வெலிவேரிய) | | | 2.26 | | 0 | 0 | | | |
| கம்பஹா (கம்பஹா) | 14.8 | 23.8 | | 83.67 | | | | | |
| கம்பஹா (மினுவான்கொடை) | | | | | | | 24.9 | | |
| கண்டி (கம்பளை) | 1.8 | 38.3 | 15.71 | 65.5 | 71.41 | 59.17 | | | |
| கண்டி (கண்டி) | | | | | | | 35.1 | 50.03 | 51.69 |
| கேகாலை (கேகாலை) | 2.2 | 33.1 | 47.02 | 70.21 | 52.41 | 62.18 | | | 57.21 |
| வவுனியா (வவுனியா) | 43.9 | 61.6 | 0 | 12.08 | 0 | | | | |
| மாத்தறை (மாத்தறை 01) | 53.2 | 62.6 | 83.59 | 9.26 | 59.93 | 63.44 | | | |
| மாத்தறை (மாத்தறை 02) | | | | | | 59.78 | | | |
| மாத்தறை (வெலிகம) | | | | | | | | 22.67 | 65.75 |
| புத்தளம் (சிலாபம்) | | | | | | | | 0 | 52.67 |
| புத்தளம் (புத்தளம் 01) | 51.8 | 61.1 | 58.93 | 60.08 | 43.53 | 51.38 | 44.39 | 0 | 57.97 |
| புத்தளம் (புத்தளம் 02) | | | | | | 46.18 | | | 3.24 |
| களுத்துறை (களுத்துறை) | 49.0 | 64.2 | 78.87 | 18.37 | 41.74 | 37.65 | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| களுத்துறை (வாதுவை 01) | | | | | | | 13.2 | | |
| களுத்துறை (வாதுவை 02) | | | | | | | 0 | | |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | | | | | | 54.5 | 38.53 | 40.23 | |
| மன்னார் (மன்னார்) | | | | | | 63.32 | | | 47.85 |
| யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம்) | | | | | | | 38.94 | | |
| குருணாகல் (குருணாகல்) | | | | | | | 0 | 0 | 54.5 |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | | | | | | | 0 | 0 | |

தூய ஹெரொயின் 1 மில்லி கிராமின் சராசரி விலை 16.76 ரூபாவிலிருந்து 2072.70 ரூபா என்ற வீச்சில் மாற்றமடைந்துள்ளது. ஆகக்கூடிய விலை மார்ச் மாதத்தில் பதிவாகியுள்ளது. தூய ஹெரொயின் 1 மில்லி கிராமின் விலை பல்வேறு பிரதேசங்களில் மாற்றமடையும் விதத்தை அட்டவணை இல. 03 காட்டுகிறது.

**அட்டவணை இல. 03 - 'தெரு' ஹெரொயின் மாதிரிப்பொருள்களின் விலையும் தூய்தான தன்மையும் (டை எசட்டைல் மோர்.ஃ.பீன் 1 மில்லி கிராமின் விலை ரூபாய்களில்)**

| பிரதேசம் | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஆகஸ்ட் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலி (காலி 01) | 438.46 | 42.71 | | 118.3 | 62.86 | | 0 | 211.89 | |
| காலி (காலி 02) | | | | | | | 557.04 | | |
| காலி (ஹிக்கடுவை) | | | 77.68 | | | | | | 207.69 |
| கொழும்பு (மட்டக்குளி) | 109.47 | 139.44 | | | | | | | |
| கொழும்பு (கொழும்பு) | | | | | | | | 0 | |
| கொழும்பு (வடக்கு) | | | 118.64 | 60.42 | 1372.4 | 18.04 | | | |
| கொழும்பு (நுகேகொடை) | | | | | | | 83.34 | | |
| கம்பஹா (நீர்கொழும்பு 01) | 0 | 1455 | 948.99 | 49.86 | 2072.7 | 16.76 | | 0 | |
| கம்பஹா (நீர்கொழும்பு 02) | | | | | | 37.98 | | | |
| கம்பஹா (வெலிவேரிய) | | | 836.83 | | 0 | 0 | | | |
| கம்பஹா (கம்பஹா) | 728.15 | 220.85 | | 36.77 | | | | | |
| கம்பஹா (மினுவான்கொடை) | | | | | | | 61.63 | | |
| கண்டி (கம்பளை) | 710.87 | 208.05 | 163.02 | 71.34 | 95.48 | 113.84 | | | |
| கண்டி (கண்டி) | | | | | | | 130.89 | 127.37 | 25.94 |
| கேகாலை (கேகாலை) | 882.78 | 70.18 | 184.43 | 76.64 | 135 | 174.81 | | | 91.98 |
| வவுனியா (வவுனியா) | 88.13 | 67.5 | 0 | 353.77 | 0 | | | | |
| மாத்தறை (மாத்தறை 01) | 49.24 | 50.16 | 35.96 | 556.66 | 66.57 | 88.56 | | | |
| மாத்தறை (மாத்தறை 02) | | | | | | 18.67 | | | |
| மாத்தறை (வெலிகம) | | | | | | | | 251.58 | 99.19 |
| புத்தளம் (சிலாபம்) | | | | | | | | 0 | 40.69 |
| புத்தளம் (புத்தளம் 01) | 72.01 | 38 | 28.88 | 133.51 | 114.1 | 82.19 | 64.51 | 0 | 70.99 |
| புத்தளம் (புத்தளம் 02) | | | | | | 109.15 | | | |
| களுத்துறை (களுத்துறை) | 121.74 | 99.85 | 34.68 | 101.94 | 81.86 | 135.97 | | | |
| களுத்துறை (வாத்துவை 01) | | | | | | | 178.67 | | |
| களுத்துறை (வாத்துவை 02) | | | | | | | 0 | | |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | | | | | | 118.76 | 146.36 | 45.55 | |
| மன்னார் (மன்னார்) | | | | | | 39.95 | | | 74.17 |
| யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம்) | | | | | | | 227.93 | | |
| குருணாகல் (குருணாகல்) | | | | | | | 0 | 0 | 33.01 |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | | | | | | | 0 | 0 | |

**'தெரு' ஹெரொயின் மாதிரிப்பொருள்களிலுள்ள அல்கொலொயிட் வகை அசுத்தப் பதார்த்தங்கள், கலவையின் செறிவு தளர்த்தும் பதார்த்தங்களை / வேறு கலப்படப் பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வுகள்**

தெரு ஹெரொயின் மாதிரிப்பொருள்களின் பகுப்பாய்வுச் சட்டகத்தின் மூலம் போதையூட்டும் ஔடதத்தின் தரம், தோற்றப் பிரதேசங்கள், மாதிரிப்பொருள் ஒவ்வொன்றுக்கும் இடையிலான தொடர்பு என்பன வெளிப்படுகின்றன.

எவ்வாறாயினும், போதிய எண்ணிக்கையில் மாதிரிப்பொருள்கள் கிடைக்காமை, ஒரே பிரதேசத்திலிருந்து உரிய முறையில் மாதிரிப்பொருள்கள் கிடைக்காமை ஆகியன காரணமாக மிகவும் அர்த்தமுள்ள முடிவுகளுக்கு வர முடியாதுள்ளது. எதிர்பார்த்த குறிக்கோளை முழுமையாக அடைந்துகொள்ள முடியாதுள்ளமைக்குக் காரணம் இதுவே.

பிரதானமான அல்கொலொயிட் மற்றும் அசுத்தப் பதார்த்தங்கள் (Alkaloidal Impurities) மிகச் சிறிய அளவுகளில் Gas Chromatography Mass Spectroscopy தொழில்நுட்பத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அட்டவணை இல. 04, 05 ஆகியவற்றில் அவற்றின் விபரம் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 04 - 'தெரு' ஹெரொயின் மாதிரிப்பொருள்களில் காணக்கிடைக்கும் அல்கொலொயிட் வகை அசுத்தப் பதார்த்தங்கள்**

| பிரதேசம் | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஆகஸ்ட் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலி (காலி) | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM | | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM | | 6-MAM | 6-AC<br>6-MAM | |
| காலி (ஹிக்கடுவை) | | | 6-AC<br>6MAM<br>MOR<br>COD | | | | | | 6-AC<br>6-MAM<br>NOS |
| கொழும்பு (மட்டக்குளி) | 6-AC<br>6-MAM<br>NOS | 6-AC<br>6-MAM<br>NOS | | | | | | | |
| கொழும்பு (கொழும்பு) | | | | | | | | MOR<br>COD<br>THE | |
| கொழும்பு (வடக்கு) | | | 6-AC<br>6MAM | 6-AC<br>6-MAM<br>MOR<br>COD | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM | | | |
| கொழும்பு (நுகேகொடை) | | | | | | | 6-AC<br>6-MAM | | |
| கம்பஹா (நீர்கொழும்பு 01) | 6-AC<br>6-MAM<br>MOR<br>COD | 6-AC<br>6-MAM | 6-AC<br>6MAM | 6-AC<br>6MAM | 6-MAM | 6-AC<br>6-MAM | | MOR<br>COD<br>THE | |
| கம்பஹா (நீர்கொழும்பு 02) | | | | | | 6-AC<br>6-MAM<br>MOR | | | |
| கம்பஹா (வெலிவேரிய) | | | 6-AC<br>6MAM | | | 6-AC<br>6-MAM<br>MOR<br>COD | | | |
| கம்பஹா (கம்பஹா) | 6-AC<br>6-MAM<br>MOR | 6-AC<br>6-MAM<br>NOS | | 6-AC<br>6-MAM<br>MOR | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கம்பஹா (மினுவான்கொடை) | | | | | | | 6-AC<br>6-MAM | | |
| கண்டி (கம்பளை) | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM<br>NOS | 6-AC<br>6MAM | 6-AC<br>6-MAM<br>MOR | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM<br>MOR | | | |
| (கண்டி (கண்டி) | | | | | | | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM<br>MOR | 6-AC<br>6-MAM |
| கேகாலை (கேகாலை) | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM<br>NOS | 6-AC<br>6MAM<br>NOS | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM<br>MOR | | | 6-AC<br>6-MAM |
| வவுனியா (வவுனியா) | 6-AC<br>6-MAM<br>NOS | 6-AC<br>6-MAM<br>NOS | | 6-AC | 6-MAM | | | | |
| மாத்தறை (மாத்தறை) | 6-AC<br>6-MAM<br>NOS | 6-AC<br>6-MAM<br>NOS | 6-AC<br>6MAM | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM<br>MOR | | | |
| மாத்தறை (வெலிகம) | | | | | | | | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM |
| புத்தளம் (சிலாபம்) | | | | | | | | MOR<br>COD<br>THE | 6-AC<br>6-MAM<br>NOS |
| புத்தளம் (புத்தளம் 01) | 6-AC<br>6-MAM<br>NOS | 6-AC<br>6-MAM<br>NOS | 6-AC<br>6MAM<br>MOR | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM<br>MOR | 6-AC<br>6-MAM | MOR<br>COD<br>THE | 6-AC<br>6-MAM |
| புத்தளம் (புத்தளம் 02) | | | | | | 6-AC<br>6-MAM<br>MOR<br>COD | | | 6-AC<br>6-MAM |
| களுத்துறை (களுத்துறை) | 6-AC<br>6-MAM<br>NOS | 6-AC<br>6-MAM | 6-AC<br>6MAM | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM<br>MOR<br>COD | | | |
| களுத்துறை (வாத்துவை 01) | | | | | | | 6-AC<br>6-MAM | | |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | | | | | | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM | 6-AC<br>6-MAM<br>MOR | |
| மன்னார் (மன்னார்) | | | | | | 6-AC<br>6-MAM<br>MOR | | | 6-AC<br>6-MAM<br>MOR |
| யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம்) | | | | | | | 6-AC<br>6-MAM | | |
| குருணாகல் (குருணாகல்) | | | | | | | | MOR<br>COD<br>THE | 6-AC<br>6-MAM |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | | | | | | | | MOR<br>COD<br>THE | |

MOR -Morphine ; 6-AC – Acetylcodeine ; 6-MAM – 6-Monoacetylmorphine;THE – Thebaine ;; NOS – Noscapine, COD – Codeine,

## அட்டவணை இல. 05 - 'தெரு' ஹெரொயின் மாதிரிப்பொருள்களில் அடையாளம் காணப்பட்ட கலப்படப் பதார்த்தங்களும் (Adulterants) கலவையின் செறிவு தளர்த்தும் பொருள்களும் (Diluents)

| பிரதேசம் | பெப்ர | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஆகஸ். | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலி (காலி 01) | | CEF | | CAF<br>ACT | | | GLU | CAF<br>ACT | |
| காலி (காலி 02) | | | | | | | SUC | | |
| காலி (ஹிக்கடுவை) | | | | PAR | | | | | CAF |
| கொழும்பு (மட்டக்குளி) | ACT | ACT | | | | | | | |
| கொழும்பு (கொழும்பு) | | | | | | | | | |
| கொழும்பு (வடக்கு) | | | ACT | CAF<br>ATN | ACT | | | | |
| கொழும்பு (நுகேகொடை) | | | | | | | CAF<br>ACT | | |
| கம்பஹா (நீர்கொழும்பு 01) | ACT<br>CAF | CAF | | | | CAF | | | |
| கம்பஹா (நீர்கொழும்பு 02) | | | | | | CAF | | | |
| கம்பஹா (வெலிவேரிய) | | | | | | CAF | | | |
| கம்பஹா (கம்பஹா) | CAF<br>AST<br>IMI | CAF | | | | | | | |
| கம்பஹா (மினுவான்கொடை) | | | | | | | CAF<br>ACT | | |
| கண்டி (கம்பளை) | IMI | ACT<br>CAF | | | CAF | CAF<br>ACT | | | |
| கம்பஹா (கண்டி) | | | | | | | | CAF | CAF |
| கேகாலை (கேகாலை) | | CAF<br>ACT<br>DEM | ACT<br>TRA<br>CAF | CAF | CAF<br>ACT | CAF<br>ACT | | | CAF |
| வவுனியா (வவுனியா) | | DEM | ACT | ACT<br>CAF | ACT | | | | |
| மாத்தறை (மாத்தறை) | AST | | | CAF<br>PARMMET | CAF | CAF | | | |
| மாத்தறை (வெலிகம) | | | | | | | | MET<br>ACT | CAF<br>TRA<br>PAR |
| புத்தளம் (சிலாபம்) | | | | | | | | CIT | CAF |
| புத்தளம் (புத்தளம் 01) | | | CAF | CAF<br>ACT | CAF | CAF | | NPT<br>CIT | CAF<br>ACT<br>PAR |
| புத்தளம் (புத்தளம் 02) | | | | | | CAF<br>ACT | | | |
| களுத்துறை (களுத்துறை) | CAF | CAF<br>CEF | | CAF | CAF<br>ACT | CAF | | | |
| களுத்துறை (வாத்துவை) | | | | | | | CAF<br>ACT<br>ATN<br>PAR | | |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | | | | | | ACT | | CAF | |
| மன்னார் (மன்னார்) | | | | | | | | | |
| யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம்) | | | | | | | CAF | | |
| குருணாகல் (குருணாகல்) | | | | | | | MET<br>ACT | | CAF |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | | | | | | | | LAC | |

***ACT*** *– Acetaminophen;* ***CAF-****Caffeine ;* ***DIZ*** *– Diazepam ;* ***LAC*** *– Lactose ;* ***IMI-****Imidasole,* ***AST-****Asteromycin , TRA – Tramadol ,* ***PAR*** *– Paromomycin;* ***CEF-****Cefalexin,* ***DEM-****Demacolcine,* ***ATN-****Actinobolin,* ***MET-****Metacetamol,* ***NPT*** *– Naphthalenone,****CIT-****Citenamide,* ***PAR-*** *Paracetamol ,* ***Glu-*** *Glucose;* ***SUC-*** *Sucrose,*

### 8.6.1.2 ஏனைய ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்

#### 8.6.1.2.1 சிகிச்சையளிப்பு நிலையங்களில் புனர்வாழ்வுபெறும் சேவைபெறுநர்களின் பல்வகை போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் பதார்த்தங்களின் பாவனையும், சிகிச்சைகளைத் தயார்செய்தலும் பற்றிய பகுப்பாய்வுபூர்வ ஆராய்ச்சிக் கருத்திட்டம்

பல்வகை போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்கள் பயன்படுத்தும் போதையூட்டும் ஔடதங்களை ஆராய்ச்சிகள் மூலம் அடையாளம் காண்பதற்கும் மதிப்பீடு, சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு முறைகளைத் தயார்செய்வதற்கும் பின்வரும் நோக்கங்களை அடைந்துகொள்ளல்.

1. அடிமைப்பட்டவர்களுக்கான சிகிச்சை முறைகளில் பயன்படுத்தப்படும் யாதேனும் அடிமைப்படுத்திவிடக்கூடிய பதார்த்தங்களை / போதையூட்டும் ஔடதங்களை அடையாளம் காணல்.

2. பல்வகை போதையூட்டும் ஔடதங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகளையும் அதற்கான காரணங்களையும் வெளிப்படுத்திக்கொள்ளல்.

3. வெவ்வேறு வயதுப் பிரிவுகளின் பல்வகை போதையூட்டும் ஔடத பாவனைகளை அடையாளம் காணல்.

4. போதையூட்டும் ஔடத பரிசோதனைகளின் ஊடாக சிகிச்சைசார் மற்றும் அடிமைப்பட்டவர்களின் சிகிச்சை முறைகள், பதார்த்தங்களைப் பாவிப்பதன் காரணமாக ஏற்படக்கூடிய கோளாறுகளை அவதானித்தலும் சிகிச்சை முறைகளைத் தயார்செய்தலும் குணப்படுத்தலுக்கும் சட்டரீதியான விடயங்களுக்கும் முக்கிய ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம்.

#### 8.6.1.2.2 தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்களும், உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப்பொருள்களும் சம்பந்தமாக தற்போது இடம்பெற்றுவரும் ஆராய்ச்சிகள்

போதையூட்டும் ஔடதங்கள் என்ற ஐயறவுள்ள பொருள்களை அடையாளம் காண்பதற்கு சட்ட வினைப்படுத்துகை உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்படும் மாதிரிப்பொருள்கள் மீது தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் ஆய்வுகூடம் (NNL) மூலம் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எம்பெட்டமின், மெத்எம்பெட்டமின், மெதிலீன்டயொக்சி மெத்எம்பெட்டமின் (MDMA) மற்றும் லைசர்ஜிக் எசிட் டை எதில் எமைட் (LSD) ஆகிய போதையூட்டும் ஔடதங்கள் இவற்றிடையே உள்ளனவா என்பதை அடையாளம் காண்பது இதன் முக்கிய நோக்கமாகும். இவற்றின் ஊடாக அடையாளம் காணப்படும் ஏனைய கழிவுச் சேர்மானங்களதும் இரசாயனங்களதும் கூறுகளை அடையாளம் காண்பதன் மூலம் இவற்றை உற்பத்திசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் மாற்றமான இரசாயன முறைமைகளையும் பயன்படுத்தும் இரசாயனப் பதார்த்தங்களையும் அடையாளம் காண்பதும் விசேடமாக இலக்காகக் கொள்ளப்படுகிறது.

**அட்டவணை இல. 06 - 2019 ஆம் ஆண்டில் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்ட உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்கள்**

| இல. | வகை | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | Methamphetamine | 4 | 11 |
| 2. | Methylenedioxidemethamphetamine (Ecstacy) | 4 | 16 |
| | மொத்தம் | 08 | 27 |

### 8.6.1.2..3 விளையாட்டின்போது பயன்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்துகளுக்காக (Controlled/ Prohibited Substances) செய்யப்படும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்

தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்துகளைப் பாவிப்பதன் மூலம் விளையாட்டுத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலைக்கு மிகத் துரிதமாக தீர்வுகாண்பது முக்கியமானதாகும். இலங்கை இந்நெருக்கடிக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கும் பொருட்டு தேசிய விளையாட்டு வைத்திய நிறுவகத்துடன் இணைந்து விளையாட்டு வீர வீராங்கனைகளின் செயலூக்க மருந்துப் பாவனை மற்றும் துஷ்பிரயோகத்தின் அடிப்படையில் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய பதார்த்த ஆய்வுகூடத்தினால் பின்வரும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

உலக தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்து எதிர்ப்பு நிறுவனத்தினால் தடைசெய்யப்பட்டுள்ள ஊக்க மருந்துகளை அடையாளம் காணலும், அதன்மூலம் தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்துப் பாவனை சம்பந்தமாக விளையாட்டு வீர வீராங்கனைகளை அறிவுறுத்துவதற்கான தடுப்புக் கல்வி மற்றும் தடுப்பு பற்றிய புதிய உபாயமுறைகளை விருத்திசெய்வதற்கும் அது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் இத்தகைய பகுப்பாய்வுகளின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

### 8.6.1.2.4 கொக்கைன், கொக்கைன் மூலத்திலிருந்து வருவிக்கப்பட்டவை (Derivatives) மற்றும் அது சார்ந்த போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய ஆராய்ச்சிகள்

கொக்கைன் மற்றும் அதன் மூலத்திலிருந்து வருவிக்கப்பட்ட போதையூட்டும் ஔடதங்களை அடையாளம் காண்பதன் அடிப்படையில் கொக்கைன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோல், போதையூட்டும் ஔடத பண்புரு வருணனைசார் (Drug Charaterization) ஆய்வுகள் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களினால் வழங்கப்படும் கொக்கைன் எனச் சந்தேகிக்கப்படும் மாதிரிப்பொருள்களுக்காக மேற்கொள்ளப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் ஐயறவான 05 மாதிரிப் பொருள்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

### 8.6.1.3 ஆராய்ச்சிபூர்வ வெளியீடுகள்

2019 ஆம் ஆண்டில் பின்வரும் தலைப்புகள் குறிப்பிடப்பட்ட கருத்துநிலைகள் இலங்கை மருத்துவ சட்ட சங்கத்தினால் (Sri Lanka Medico Legal Society) வெளியிட ஏற்றங்கீகரிக்கப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த 16 வெளியீடுகளில் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்கள் ஆய்வுகூட உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆராய்ச்சிப் பத்திரமொன்றும் 03 கருத்துருப் பத்திரங்களும் மருத்துவ சட்ட சங்கத்தின் வருடாந்த விஞ்ஞான அமர்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்கள் ஆய்வுகூடத்தின் உத்தியோகத்தர்களினால் அந்த அமர்வின்போது வாய்மொழி மூலம் சமர்ப்பணமொன்று முன்வைக்கப்பட்டது. மேலும், சிறந்த கருத்துருப் பத்திரத்திற்கான தங்கப் பதக்கம் விஞ்ஞான உத்தியோகத்தர் ஒருவரினால் வென்றெடுக்கப்பட்டது.

**'புளொட்டர் காகிதம் மீதுள்ள புதிய உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களை அடையாளம் காணல்' ஆராய்ச்சி மீதான கருத்துநிலை.**

- முத்துமாலா கே.எம்., வீரசிங்க டி.பீ.பீ., ஆலோக்க பண்டார எஸ்., அபேசிங்க எஸ்.

**'சமூக வலைத்தளங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் போதையூட்டும் ஔடத கடத்தலும், போதையூட்டும் ஔடத சட்ட ஆற்றலைப் பலப்படுத்துவதற்கு விஞ்ஞான ரீதியான புலனாய்வுத் தகவல்களைச் சேகரிக்கும் தேவைப்பாடும்" என்ற கருத்துரு மீதன கருத்துநிலை.**

**- அபேநாயக்க எம்.டப்ளியுஎன்.எம்., வீரசிங்க டி.பீ.பீ., ஆலோக்க பண்டார எஸ்., அபேசிங்க எஸ்.**

**'மருத்துவச் சட்ட விடயங்கள் சம்பந்தமான விஞ்ஞான ரீதியான புலனாய்வுத் தகவல்களும், டிஜிட்டல்**

**சான்றுகளும்' : இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும் போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்கமைந்த குற்றங்களும் சட்டவிரோத போதையூட்டும் ஔடதங்களின் கடத்தலை முறியடித்தலும்' என்ற கருத்துரு மீதான கருத்துநிலை.**

- அனூசன் கே., வீரசிங்க டி.பீ.பீ., ஆலோக்க பண்டார எஸ்., அபேசிங்க எஸ்.

**'போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான குற்றச்செயல் விடயங்களுக்கான பிரபலமான விஞ்ஞான ரீதியான சான்றுகள்: சட்டத்தையும் ஒழுங்கையும் பலமான நிறுவனங்களையும் வலுவூட்டுவதற்கான பயனுறுதிவாய்ந்த முறை' என்ற கருத்துருக்கள் மீதான கருத்துநிலை.**

- அனூசன் கே., வீரசிங்க டி.பீ.பீ., ஆலோக்க பண்டார எஸ்., அபேசிங்க எஸ்.

### 8.6.1.4 ஆராய்ச்சி முன்மொழிவுகள்

**8.6.1.4.1** வழங்கலைக் கட்டுப்படுத்துவதற்கும் கேள்வியைக் குறைப்பதற்குமான விசேட விஞ்ஞான ரீதியான 03 ஆராய்ச்சிக் கருத்திட்ட முன்மொழிவுகளுக்கு சபையின் அனுமதி கிடைத்ததுடன், சபையின் சிபார்சுகள் மீதமைந்து குறித்த கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்விசார் நிபுணர்களின் மீளாய்வுகளையும் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

#### 8.6.1.4.2 விஞ்ஞான ரீதியான சான்றுகள் மீதமைந்த புதிய உருமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களின் வழங்கலைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான விஞ்ஞான ரீதியான புலனாய்வுத் தகவல்களின் ஆய்வு

இணையத்தையும், சமூக வலைத்தளங்களையும் உபயோகித்து முன்னெடுக்கப்படும் புதிய உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களை வியாபாரம் செய்வதை அடையாளம் காண்பதன் ஊடாக குறித்த உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களின் புவியியல்சார் தோற்ற இடங்கள், செயற்கை மார்க்கங்கள், போதையூட்டும் ஔடதங்களின் வழங்கலினதும் விநியோகத்தினதும் வலையமைப்பின் சிறப்பான தொடர்புகள் முதலிய போதையூட்டும் ஔடதங்களின் தோற்ற இடங்களை அடையாளம் காண்பதற்கான விஞ்ஞான ரீதியான சான்றுகளின் உருவாக்கமும் போதையூட்டும் ஔடதங்களின் தூய்தான தன்மை பற்றிய ஆய்வு / போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய விரிவான இயல்புகளை அடையாளம் காண்பதும் இந்த ஆய்வின் முக்கிய இலக்காகும்.

#### 8.6.1.4.3 தெரு மட்ட போதையூட்டும் ஔடதங்களைத் திரையிடுவதற்கான புதிய விஞ்ஞான ரீதியான நுட்பமான கருவியொன்றின் அபிவிருத்தி

இக்கருத்திட்டத்தின் நோக்கம், Molecular Imprinted Polymer System என்ற முறைமையின் ∴புளொரசென்ஸ் இயல்புகளை உபயோகித்து மாசடைந்த தெரு மட்டத்திலான போதையூட்டும் ஔடதங்களை துரிதமாக சோதிப்பதற்கான சூட்டிகையான பல்லுணர்வு முறைமையொன்றை (Smart multi-sensoring system) விருத்திசெய்வதற்கு தூண்டப்பட்ட, கலப்புடைய போதையூட்டும் ஔடத சேர்மானமொன்றைத் தயாரிப்பதற்கு மாசடைந்த தெரு மட்டத்திலான போதையூட்டும் ஔடதத்தை மீள்சுழற்சிசெய்து தூய்மைப்படுத்துவதாகும். ஊக்குவிக்கப்பட்ட மாசடைந்த தெரு மாதிரிப்பொருள்களை குழுக்களிலிருந்து விருத்திசெய்யப்பட்ட தரவுத்தொகுதிகளின் அடிப்படையில், அறியப்படாத தெரு மட்ட போதையூட்டும் ஔடதங்களின் பௌதிக மற்றும் இரசாயன இயல்புகள் அடையாளம் காணப்படுகின்றன. தயாரிக்கப்பட்ட இந்த புதிய தொழில்நுட்பக் கருவிக்கு ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரத்தைப் பெற்று கையில் வைத்துக்கொண்டே போதையூட்டும் ஔடதங்களை இனங்காணக்கூடிய ஒரு கருவியாக கைத்தொழில் மட்டத்தில் தயாரித்து போதையூட்டும் ஔடத சட்டங்களை வினைப்படுத்துகின்ற நிறுவனங்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தத்துவ முதுமாணி பாடநெறியைப் பூர்த்தி செய்வதற்கு கலாநிதி மனுஜ லமாபந்துசூரிய, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பிரிவின் பேராசிரியர் கே.ஆர்.

ரன்ஜித் மகாநாம ஆகியோரினால் இக்கருத்திட்டம் மேற்பார்வை செய்யப்படுகிறது.

இந்த ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் முடிவுகள், மாசான போதையூட்டும் ஔடதங்களை மிக விரைவில் அடையாளம் காண்பதற்கு சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்களுக்கு உறுதுணையாக அமையும்.

### 8.6.2 துஷ்பிரயோக போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்துமுகமாக சட்டவினைப்படுத்துகை நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரம் பொருந்திய நிறுவனங்களுக்கு அவசியமான விஞ்ஞான ரீதியான உதவிகளை வழங்குதல்

#### 8.6.2.1 சந்தேகத்திற்கிடமான போதையூட்டும் ஔடதங்களின் ஔடதங்களின் பகுப்பாய்வு

2019 ஆம் ஆண்டில் 100 நிகழ்வுக்கூறுகளின்போது விடுக்கப்பட்ட கோரிக்கைகளின்படி போதையூட்டும் ஔடதங்கள் எனச் சந்தேகிக்கப்படும் 191 மாதிரிப்பொருள்களுக்கான பகுப்பாய்வுகள் எமது ஆய்வுகூடத்தினால் (NNL) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய மற்றும் ஏனைய பொறுப்புவாய்ந்த நிறுவனங்களுடன் பகிர்ந்துகொண்டு போதையூட்டும் ஔடதப் பிரச்சினை பற்றிய பல்வேறு செயற்பாடுகள், புதிய போக்குகள் பற்றி பகுப்பாய்வுசெய்தல், நுட்பமுறைப் பகுப்பாய்வுகள், சட்டக் கொள்கைப் பகுப்பாய்வும் தயாரிப்புத் தேவைகளும், சட்ட மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தணித்துக்கொள்ளல், நோக்கங்களை எய்துதல் ஆகிய விடயங்களுக்காக மேற்படி பகுப்பாய்வு முடிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாட்டின் சட்டங்களை செயல்வலுப் பெறச்செய்தல், குற்றத்தடுப்பு மற்றும் சுகாதார கொள்கைவகுப்பு ஆகியவற்றுக்கு அவசியமான விஞ்ஞான ரீதியான வெளிப்பாடுகள் இத்தகவல்களில் அடங்கும்.

நச்சுத்தன்மைவாய்ந்த அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தின் (திருத்த) கீழும், 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களதும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் கீழும், NNL மூலம் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளினால் ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதையூட்டும் ஔடதங்கள் எனச் சந்தேகிக்கப்படும் மாதிரிப்பொருள்களின் ஆராய்ச்சிபூர்வ பகுப்பாய்வின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கைகள் கீழ் தரப்பட்டுள்ளன:-

**அட்டவணை இல. 07 - 2019 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் என்ற சந்தேகத்தின்பேரில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிப்பொருள்களின் எண்ணிக்கைகள்**

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ் | செப். | ஒக்டோ | நவம் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **இலங்கை பொலிஸ் / பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் பணியகம்** | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | 03 | 01 | 01 | 02 | 01 | 01 | 01 | 01 | 02 | 02 | | 01 |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 07 | 04 | 01 | 02 | 02 | 01 | 04 | 02 | 04 | 04 | | 01 |
| **புகையிலை மற்றும் மதுசாரம் பற்றிய தேசிய அதிகாரசபை** | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | | | 01 | | | | | | 01 | | 01 | |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | | | 02 | | | | | | 04 | | 01 | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **விசேட புலனாய்வுப் பிரிவு, தரைப்படை பொலிஸ்** | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | | 01 | 01 | 01 | | | 04 | 01 | | 01 | 02 | |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | | 03 | 02 | 03 | | | 06 | 01 | | 01 | 02 | |
| **இலங்கைச் சுங்கம்** | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | 03 | | 01 | | | | | | | | 01 | 02 |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 20 | | 02 | | | | | | | | 01 | 17 |
| **இலங்கை மதுவரித் திணைக்களம்** | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | 01 |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | | | | | | | | | | | | 01 |
| **நீதவான் நீதிமன்றங்கள்** | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | 7 | 03 | 07 | 02 | 03 | 1 | 04 | 3 | 06 | 2 | 10 | 07 |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 10 | 04 | 10 | 03 | 03 | 11 | 05 | 3 | 09 | 02 | 14 | 09 |
| **தே.அ.ஔ.க.சபை** | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | | | | 01 | |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | | | | | | | 02 | | | | 01 | |
| **வேறு** | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | | | 01 | | | | 01 | 01 | 01 | | 02 | |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | | | 01 | | | | 02 | 01 | 01 | | 02 | |
| **மொத்தம்** | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | 13 | 05 | 12 | 05 | 04 | 02 | 11 | 06 | 10 | 05 | 17 | 11 |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 37 | 11 | 18 | 08 | 05 | 12 | 19 | 07 | 18 | 07 | 21 | 28 |

**நிகழ்வுக்கூறுகளின் மொத்த எண்ணிக்கை : 100**

**மாதிரிப் பொருள்களின் மொத்த எண்ணிக்கை : 191**

### 8.6.2.2 அற்கஹோல் மாதிரிப்பொருள்களின் பகுப்பாய்வு

ஆராய்ச்சி மட்டத்தில் NNL மூலம் மேற்கொள்ளப்படும் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஊடாக அனுப்பிவைக்கப்படும் அற்கஹோல் பகுப்பாய்வின் மூலம், அவற்றில் அடங்கியிருக்கும் மெதனோல் மற்றும் ஏனைய கழிவுச் சேர்மானங்கள் பற்றிய அறிக்கை விபரங்கள் கீழ் தரப்பட்டுள்ளன. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட 11 நிகழ்வுக்கூறுகளுக்குரிய 32 மாதிரிப்பொருள்களின் பகுப்பாய்வு பற்றிய விபரம் வருமாறு:-

**அட்டவணை இல. 08** - 2019 ஆம் ஆண்டில் பகுப்பாய்வுசெய்யப்பட்ட மாதிரிப்பொருள்களின் எண்ணிக்கைகள்

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை மதுவரித் திணைக்களம் | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | 01 | 02 | - | 01 | - | 02 | - | 01 | - | 01 | 01 | 02 |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 02 | 11 | - | 03 | - | 06 | - | 03 | - | 01 | 01 | 05 |
| மொத்தம் | நிகழ்வுக் கூறுகளின் எண்ணிக்கை | 01 | 02 | - | 01 | - | 02 | - | 01 | - | 01 | 01 | 02 |
| | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 02 | 11 | - | 03 | - | 06 | - | 03 | - | 01 | 01 | 05 |

நிகழ்வுக்கூறுகளின் மொத்த எண்ணிக்கை : 11

மாதிரிப்பொருள்களின் மொத்த எண்ணிக்கை : 32

### 8.6.2.3 வெளிக்கள சோதனைக் கருவிகலத்தொகுதிகளின் (பொட்டளிகள்) செயற்பாட்டை உறுதிசெய்தலும் மீள் நிரப்புதலும்

8 வெளிக்கள சோதனைக் கருவிகலத்தொகுதிகள், இலங்கைச் சுங்கத்தினால் செயற்பாடு குறித்த பரிசோதனைக்காக நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. அவை சோதனைக்கு உட்படுத்தப்பட்டு மீள நிரப்பப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு:-

| நிறுவனம் | வெளிக்கள சோதனைக் கருவிகலத்தொகுதி வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| இலங்கைச் சுங்கம் | - தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் இரசாயனங்களைப் பிரித்தறியும் கருவிகலத்தொகுதிகள் | 04 |
| பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் பணியகம் | - தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் இரசாயனங்களைப் பிரித்தறியும் கருவிகலத்தொகுதிகள் | 02 |
| | - முன்னோடி இரசாயனங்களைப் பிரித்தறியும் கருவிகலத்தொகுதிகள் | 01 |
| மொத்தம் | | 07 |

### 8.6.2.4 பிற சேவைகள், விஞ்ஞான ரீதியான சிபார்சுகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான உதவி

#### 8.6.2.4.1 மேற்கொள்ளப்பட்ட பிற செயற்பாடுகள்

- சட்டவிரோதமான போதையூட்டும் ஔடதங்களின் கடத்தலையும் பாவனையையும் தடுப்பதற்கான விஞ்ஞான ரீதியான உபாயமுறைகளின் பயன்பாடு என்ற தலைப்பிலான நிபுணர்களின் மாநாடொன்று 2019 மார்ச் மாதம் 05-06 ஆகிய இரு நாட்களிலும் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. இந்நிபுணர்களின் மாநாட்டை நடாத்துவதற்கு அரச விஞ்ஞான மதியுரை வலையமைப்பினால் (INGSA)நிதியுதவி

வழங்கப்பட்டது.

- சர்வதேச உறவுகளைப் பலப்படுத்துவதற்காக இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இன்டர்போல் அதிகாரிகளுடன் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான இரு தரப்புக் கூட்டமொன்று நடைபெற்றது.

- இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ள தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் பதார்த்தங்கள், உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப்பொருள்கள் மற்றும் முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களை சட்டவிரோதமான முறையில் கடத்துவதற்கு எதிரான புரிந்துணர்வு உடன்படிக்கைக்குரிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.

- OHCHR அறிக்கையில் மனித உரிமைகள் மற்றும் உலக போதையூட்டும் ஔடத உபத்திரவத்தை முறியடிப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பின் விளைவுப்பெருக்க அறிக்கைக்காக அறிக்கை சமர்ப்பித்தல். (சர்வதேச ஒத்துழைப்பைப் பலப்படுத்துதல்.)

- ‘போதையூட்டும் ஔடத உபத்திரவத்தை முறியடிப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பு - இலங்கை அரசாங்கம்’ என்ற தலைப்பில் தொழில்நுட்ப அறிக்கையொன்று ஐ.நா. பொதுச் சபையின் 73 ஆவது அமர்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

- சட்டவிரோதமான போதையூட்டும் ஔடத கடத்தல் சந்தையில் ஔடதங்கள் பகிரப்படுவதைத் தடுப்பதற்கு தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பைப் பலப்படுத்தல்.

- இலங்கை அரசு சார்பாக போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்தல் பற்றிய ஒரு சுருக்கமான அறிக்கை, ஐ.நா. பொதுச் சபையின் 73 ஆவது அமர்விற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

- NNL ஆய்வுகூடத்தின் பணிக்குழுவினர் முன்னோடி இரசாயனங்கள் அதிகாரசபையின் பணியை முன்னேற்றுவதற்கான உப குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

- போதையூட்டும் ஔடத தடுப்பு முகாம் ஒன்றுக்கான NNL ஆய்வுகூடத்தின் விஞ்ஞான ரீதியான ஒத்தாசை வழங்கப்பட்டது.

- நிட்டம்புவ பொலிஸ் நிலையத்துடனும், வத்துபிட்டிவல வைத்தியசாலையுடனும் இணைந்து நடாத்திய போதையூட்டும் ஔடத தடுப்பு முகாமொன்றுக்கு NNL ஆய்வுகூடத்தின் விஞ்ஞான ரீதியான ஒத்தாசை வழங்கப்பட்டது.

- SARRIC-TOC செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு தற்போதுள்ள தகவல் நிலையத்தை நவீன தேசிய தகவல் மற்றும் புலனாய்வுப் பரிமாற்ற நிலையமொன்றாக மறுசீரமைப்பதற்குரிய முன்மொழிவு ஐ.நா. போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டது.

- இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையில் இடம்பெறும் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான ஒழுங்கமைந்த குற்றச்செயல்களை முறியடிப்பதற்கான ஒத்துழைப்பைப் பலப்படுத்துதல் பற்றிய தீர்வுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டது.

- முன்னோடி இரசாயனப் பதார்த்தங்கள் சம்பந்தமான பணிகளின் ஆற்றலைப் பலன்படுத்துதல் பற்றிய முன்மொழிவு.

- போதையற்ற இலங்கையை உருவாக்குவதற்காக பொது மக்களைப் பலப்படுத்துவதற்கான புத்தாக்க சவால்களின் போட்டியொன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

### சர்வதேச ஒருங்கிணைப்பு

1. மேலும் 2019 செப்டம்பர் 17-20 வியட்நாமின் ஹோ சி மின் நகரில் நடைபெற்ற ஆசிய தடய அறிவியல் வலையமைப்பின் (AFSN) வருடாந்த கூட்டத்திற்கு தே.அ.ஔ.க. சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி NNL ஆய்வுகூட உத்தியோகத்தரொருவர் கலந்துகொண்டார். ஆசிய தடய அறிவியல் வலையமைப்பின் வருடாந்தக் கூட்டம் மூலம் தே.அ.ஔ.க. சபையின் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஆய்வுகூடத்திற்கு தடயவியல் சமூகத்தவருடன் இணைந்து NNL ஐ ஊக்குவிப்பதற்கான வாய்ப்பு கிடைப்பதுடன், NNL இன் உத்தியோகத்தர்களுக்கு ஆசிய தடய அறிவியல் வலையமைப்பின் நன்மைகளைத் துய்ப்பதற்கான வாய்ப்புக் கிட்டும். செயற்பாட்டுக் குழு இந்த வியாபார மாநாட்டில் கலந்துகொண்டதை பாராட்டியதுடன், ஆசிய தடய அறிவியல் வலையமைப்பின் சட்டவிரோதமான போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய செயற்பாட்டுக் குழு மூலம் அமுல்படுத்துவதற்கான முக்கிய புதிய கருத்துக்களை முன்வைக்குமாறு கோரப்பட்டது.

2. 2019 அக்டோபர் 16-18 ஆந் திகதிகளில் ஒஸ்ட்ரியாவின் வியன்னா நகரில் நடைபெற்ற 62 ஆவது போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய ஆணைக்குழுவுக்கும் 06 ஆவது இடைப்பட்ட கூட்டத்திற்கும் தே.அ.ஔ.க. சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி உதவிப் பணிப்பாளர் (விஞ்ஞான ஆராய்ச்சிகள்) கலந்துகொண்டார்.

3. தடய மருத்துவ ஆய்வுகூடப் பணிப்பாளர்களின் இரண்டாவது சர்வதேச ஓம்பரங்கு, 2019 யூலை மாதம் 22 - 25 ஆந் திகதிகளில் சிங்கப்பூரில் நடைபெற்றது. தே.அ.ஔ.க. சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி உதவிப் பணிப்பாளர் (விஞ்ஞான ஆராய்ச்சிகள்) இக்கருத்தரங்கில் கலந்துகொண்டார்.

### தேசிய ஒருங்கிணைப்பு

### இணையவழி போதையூட்டும் ஔடத கடத்தலையும் தபால்மூல விநியோகத்தையும் முறியடித்தல் பற்றிய செயலமர்வு

இணையவழி போதையூட்டும் ஔடத கடத்தலையும் தபால்மூல விநியோகத்தையும் முறியடிப்பதற்கான ஒரு செயலமர்வு, இணையம் மற்றும் தபால் சேவை ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோதமான போதையூட்டும் ஔடதங்களின் கடத்தலையும் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாட்டுக் குழுவுக்காக நடாத்தப்பட்டது. இதில் பின்வரும் நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். இணையம் மற்றும் தபால் சேவை ஊடாக இலங்கையில் இடம்பெறும் போதையூட்டும் ஔடதங்களின் கடத்தலை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது.

1. சட்டமா அதிபர் திணைக்களம்.
2. இலங்கை தபால் சேவை.
3. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு.
4. இலங்கை பொலிஸ் (பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் பணியகம், விசேட அதிரடிப்படை, மத்திய எதிர்ப்புத் தாக்குதல் படை, குற்றப் புலனாய்வுத் திணைக்களம்)
5. இலங்கைச் சுங்கம்.
6. இலங்கை கடற்படை.
7. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்.
8. இலங்கை மதுவரித் திணைக்களம்.
9. சிறைச்சாலைத் திணைக்களம்.

10. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை.
11. Sri lanka Computer Emergency Readiness Team (SL CERT)

**8.6.2.4.2 ஔடத துஷ்பிரயோகம் சம்பந்தமான விஞ்ஞான ரீதியான சிபார்சுகளை முன்வைத்தல்**

- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மற்றும் உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களின் துஷ்பிரயோகம் முதல் சட்ட சந்தையில் பிரவேசித்தல் வரை கட்டுப்படுத்துவதற்கு நிருவாகப் பொறிமுறையொன்றைத் தயாரித்தல் தொடர்பில் விஞ்ஞான ரீதியான சிபார்சுகளையும் யோசனைகளையும் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தின்போது சமர்ப்பிக்கப்பட்டது.

- Chlorodiazepoxide இறக்குமதி - ஏற்றுமதி செய்வதற்கு ஆட்சேபனை இல்லையெனக் குறிப்பிடப்பட்ட கடிதங்களை வழங்குவதற்கு அவசியமான விஞ்ஞான ரீதியான சிபார்சுகளுக்கும் ஒருங்கிணைப்பிற்கும் ஒத்தாசை வழங்கப்பட்டது.

- ஔடத துஷ்பிரயோகத்திற்கு உரிய ஐந்து சம்பவங்களில் சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களுக்கான தொழில்நுட்ப ரீதியான நிபுணத்துவ உதவி வழங்கப்பட்டது.

**8.6.2.4.3 சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்பை வழங்குதல்**

இலங்கைச் சுங்கத்திற்கு தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மற்றும் உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களை அடையாளம் காணும் இயந்திரமொன்றைக் கொள்வனவுசெய்யும் பெறுகைக் குழுவில் அதற்குரிய விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன.

**8.6.2.4.4 போதையூட்டும் ஔடதங்களை மோப்பம் பிடிக்கும் நாய்களைப் பயிற்றுவிப்பதற்கு அவசியமான தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் பதார்த்தங்களின் மாதிரிப்பொருள்களை இலங்கை கடற்படைக்கு வழங்குதல்.**

இலங்கை கடற்படைக்கு போதையூட்டும் ஔடதங்களை மோப்பம் பிடிக்கும் நாய்களைப் பழக்குவதற்கு அவசியமான மாதிரிப் பொருள்களை வழங்குதல் சம்பந்தமான சட்ட அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு அவசியமான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

**8.6.2.4.5 நச்சு வகை, அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கு உரிய விஞ்ஞான ரீதியான சிபார்சுகளைச் சமர்ப்பித்தல்.**

போதையூட்டும் ஔடதங்களின் வழங்கலின் கட்டுப்பாட்டையும் போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வியையும் குறைப்பதை கிரமமாக மேற்கொள்வதற்குரிய சிபார்சுகளும் அறிவுறுத்தல்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

**8.6.2.5 முன்மொழிவுகளும் கூட்டங்களும்**

**8.6.2.5.1 தபால் சேவைகளும் வழங்கல் சேவைகளும் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற போதையூட்டும் ஔடத கடத்தலைக் கட்டுப்படுத்துகின்ற பொறிமுறைக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்**

தபால் சேவைகளும் வழங்கல் சேவைகளும் மூலம் போதையூட்டும் ஔடத கொள்வனவாளர்களும் விற்பனவாளர்களும் நேரில் சந்திக்காமல் போதையூட்டும் ஔடத கடத்தலை மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்றளவில் தபால் மற்றும் வேறு வழங்கல் சேவைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற போதையூட்டும் ஔடத கடத்தலில் துரித வளர்ச்சியொன்று சுட்டிக்காட்டப்படுகிறது. அதன் அடிப்படையில், இலங்கை தபால் சேவையும் ஏனைய வழங்கல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களையும் இணைத்துக்கொண்டு இந்நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு

உரிய சிபார்சுகள் முன்மொழியப்பட்டன.

இணையமும் தபால் சேவைகளும் மூலம் மேற்கொள்ளப்படும் சட்டவிரோதமான போதையூட்டும் ஔடத கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாட்டுக் குழுவின் முதலாவது கூட்டத்திற்கு இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை பொலிஸ், இலங்கைச் சுங்கம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கை தபால் சேவை, மதுவரித் திணைக்களம், இலங்கை விசேட அதிரடிப்படை, சிறைச்சாலைத் திணைக்களம், Sri Lanka Computer Emergency Readiness Team (SL CERT) ஆகிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். போக்குகளின் பகுப்பாய்வு, திட்டமிடல் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தே.அ.ஔ.க. சபையின் தவிசாளருக்கான சிபார்சுகளை முன்வைக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவர்.

### 8.6.2.5.2 NNL ஆய்வுகூடத்தை முன்னேற்றுவதற்கான முன்மொழிவும், உணவு நிரப்பிகளை (Diatery Supplements) பகுப்பாய்வுசெய்வதற்கான அதிகாரம்பெற்ற நிறுவனமாக அதனை அபிவிருத்தி செய்தலும்

விளையாட்டுத்துறை அமைச்சினால் NNL ஆய்வுகூடத்தை, அதிகாரம்பெற்ற ஆய்வுகூடமாக நிரப்பு உணவுகளைப் பதிவுசெய்தல் மற்றும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட / தடைவிதிக்கப்பட்ட நிரப்பு உணவுகளை அடையாளம் காண்பதற்கான பகுப்பாய்வு நடவடிக்கைகளிலிருந்து நீக்குதல் காரணமாக NNL ஆய்வுகூடத்தை முன்னேற்றுவதற்குரிய முன்மொழிவொன்று (GCMS வசதிகளை முன்னேற்றுதல், தொடர்புத் தர நியமங்கள், இரசாயனப் பதார்த்தங்கள், கண்ணாடி உபகரணங்கள், நுகர்வுப் பொருள்கள்) வரவுசெலவுத்திட்டத்துடன் (ரூ.20.00 மி.ரூ.) அனுப்பிவைக்கப்பட்டது.

### 8.6.2.5.3 தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும், உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்கள், புதிய உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்கள், மிகவும் தாக்கமுள்ள உள-ஔடத தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான முன்மொழிவு (NDPS, NPS & HPP)

ஔடத துஷ்பிரயோகமும் கடத்தலும் தொடர்பில் சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்கள் எதிர்நோக்கும் சவால்கள் சம்பந்தமாக சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சினால் கௌரவ அமைச்சரின் தலைமையில் நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும், உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்கள், புதிய உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்கள், மிகவும் தாக்கமுள்ள உள-ஔடதங்களின் தடுப்புக்கும் கட்டுப்பாட்டுக்குமான பின்வரும் முன்மொழிவுகளுக்கான சிபார்சு கிடைத்தது.

1. போதையூட்டும் ஔடதங்களின் கட்டுப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் 03 சர்வதேச சமவாயங்களின் ஏற்பாடுகளை செயல்வலுப்படுத்துவதற்கும் அமுலாக்கம்செய்வதற்கும் இலங்கை கடப்பட்டுள்ள புதிய சட்டவாக்க செயன்முறையொன்றின் தேவைப்பாடு.

- போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய தனிச் சமவாயம், 1961
- உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்கள் பற்றிய சமவாயம், 1971
- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும், உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களை சட்டவிரோதமான முறையில் கடத்தல் பற்றிய ஐ.நா. சமவாயம், 1988

2. சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சின் கீழ் புதியதோர் அதிகாரசபையை நிறுவுதல்.

தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும், உளமருட்சியை உண்டுபண்ணும், புதிய உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்கள், மிகவும் தாக்கமுள்ள உள-ஔடத இறக்குமதி அல்லது ஏற்றுமதி, உற்பத்தி, விநியோகம், விற்பனை, வழங்கல், ஒழித்தல், போக்குவரத்து, நுகர்வு ஆகிய

சந்தர்ப்பங்களில் எந்தக் கட்டத்திலிருந்து இந்த ஔடதங்கள் சட்டவிரோதமான சந்தைக்குள் பிரவேசிக்கின்றன என்பதை மேற்பார்வைசெய்வதற்கான தேவைப்பாடு.

3. தே.அ.ஔ.க. சபையினுள் விஞ்ஞான ரீதியான நிபுணர் குழுவொன்றை (Expert Group) நிறுவுதல்.

வழங்கல் கட்டுப்பாட்டுக்கும் கேள்வியைக் குறைக்கும் நடவடிக்கைகளுக்கும் சட்டத்தை வினைப்படுத்தும் நிறுவனங்களுக்கு உதவுவதற்கு மாதிரிப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கும் சோதனைகளை மேற்கொள்வதற்கும் அதிகாரமளித்தல்.

4. சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்களினால் கைப்பற்றப்படுகின்ற மாதிரிப்பொருள்களில் ஒரு சிறு அளவை விஞ்ஞான சிபார்சுகள், தர மற்றும் போக்குகளின் பகுப்பாய்வு, புலனாய்வு மற்றும் சோதனை நடவடிக்கைகளுக்கும் கொள்கை வகுப்பிற்கும் NNL ஆய்வுகூடத்திற்கு வழங்குவதற்கு அவசியமான அதிகாரத்தை வழங்குதல்.

### 8.6.2.6 குறுகிய பயிற்சித் தவணைகள்

- மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் சட்ட மருத்துவம் பற்றிய பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவைத் தொடரும் மருத்துவர் திருமதி எல்.எச்.தம்மி அவர்களுக்கு தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும், உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களை அடையாளம் காணல் என்ற தலைப்பின் கீழ் ஒரு வார கால பயிற்சி அளிக்கப்பட்டது.

- **வான் சரக்குகளின் கட்டுப்பாடு பற்றி அரச துறையை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்**

  இலங்கைச் சுங்கத்தினால் ஐ.நா. போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய அலுவலகம் (UNODC), உலக சுங்க அமைப்பு (WCO), சர்வதேச வான்செலவு பற்றிய அமைப்பு (ICAO) ஆகியவற்றினால் ஒருங்கிணைந்து இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. வான் சரக்கு கொள்கலன் கட்டுப்பாட்டு முறைமை பற்றிய அரச துறையை அறிவுறுத்துவதற்கு அந்த அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்ததுடன், அதில் சட்டவிரோதமான கடத்தல்களைத் தடுப்பதற்கான உபகரணங்களைப் பயன்படுத்தல் முதலியன பற்றி அறிவுறுத்தப்பட்டது. தேசிய தூக்கமயக்கத்த உண்டுபண்ணும் பதார்த்தங்கள் ஆய்வுகூடத்தின் உத்தியோகத்தர் ஒருவர் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

- **ஊடகவியலாளர்களுக்கு போதையூட்டும் ஔடத தடுப்பு பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல்.**

  தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் ஊடகவியலாளர்களுக்கு போதையூட்டும் ஔடத தடுப்பு பற்றி நடாத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டத்தில் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்கள் ஆய்வுகூடத்தின் உத்தியோகத்தர் ஒருவர் கலந்துகொண்டார்.

### 8.6.2.6.1 சார்க் குடிவரவு அதிகாரிகள் மற்றும் உள்ளக / உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலகங்கள் 8 ஆவது மாநாடு

பின்வரும் விஞ்ஞான ரீதியான சிபார்சுகளும் முன்மொழிவுகளும் மேற்படி மாநாட்டின் நிகழ்ச்சிநிரலின் இல. 08 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டன.

- சட்டவிரோதமான சந்தையினுள் கட்டுப்படுத்திய ஔடதங்களுக்கான சட்டரீதியான மாற்று நடவடிக்கைகளாக துரிதமாக அதிகரித்துச் செல்லும் புதிய உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களின் கட்டுப்பாட்டுக்கான ஒரு பொறிமுறையையும் தாக்குதலுக்கான இயல்திறனையும் விருத்திசெய்தல்.
- ஆராய்ச்சிச் செயற்பாடுகளையும் உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களையும்

அடையாளம் காண்பதற்கு உரிய விபரங்களைப் பரிமாறிக்கொள்வதற்கு உறுப்புரிமை நாடுகளின் ஆய்வுகூடங்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட வலையமைப்பொன்றை உருவாக்குதல்.

- வெளிக்கள சோதனைக் கருவிகலத்தொகுதிகள் மூலம் அதே இடத்தில் தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும், உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களையும் புதிய உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களையும் அடையாளம் காண்பதற்காக உறுப்புரிமை நாடுகளின் சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்களை செயல்வலுப்படுத்தல்.

- இணையம், தபால் சேவை மற்றும் வேறு விநியோக சேவைகளை உபயோகித்து மேற்கொள்ளப்படும் போதையூட்டும் ஔடத கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாட்டுப் பொறிமுறையொன்றை ஏற்படுத்துதல்.

இலங்கையில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான தேசிய கொள்கையைப் பலப்படுத்துவதற்கு விஞ்ஞான ரீதியான சான்றுகள் மீதமைந்த ஒருங்கிணைப்பு உபாயமுறையொன்றை ஏற்படுத்துவதற்கு ஆராய்ச்சி நிதியமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

போதையூட்டும் ஔடத தடுப்பும் கட்டுப்பாடும் சம்பந்தமான தேசிய கொள்கையை பரந்த, சமநிலையான, ஒருங்கிணைந்த விஞ்ஞானபூர்வ உபாயம் என்ற கருத்திட்டப் பெயரின் கீழ் அரச விஞ்ஞான மதியுரைகள் சம்பந்தமான வலையமைப்புக்கு விண்ணப்பமொன்று அனுப்பிவைக்கப்பட்டது.

போதையூட்டும் ஔடதங்கள் மீது தங்கியிருக்கும் இளைஞர்களை தொழில்சார் புனர்வாழ்வளிப்பைத் தொடர்ந்து மீச்சந்தைகளில் பணியிலீடுபடுத்துவதன் ஊடாக சமூக அந்தஸ்தைக் கட்டியெழுப்புதல் என்ற கருத்திட்டப் பெயரின் கீழ் ஜேர்மனி சமஷ்டிக் குடியரசின் தூதுவராலயம் மூலம் நுண் கருத்திட்டங்களை நிறுவுவதற்கான விண்ணப்பம், தீர்வுத் திட்டம், நிதிசார் ஒத்துழைப்பு என்பன கோரப்பட்டன.

### 8.6.2.6.2 உறுப்புரிமை

- **தடவியல் நச்சுவியலாளர்களின் சர்வதேச சங்கம் - (The Intl' Association of Forensic Toxicologists)**

  தடவியல் நச்சுவியலாளர்களின் சர்வதேச சங்கம் (TIAFT) உலகம் பூராவும் சுமார் 2000 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு நிறுவனம் என்பதுடன், நச்சியல் பகுப்பாய்வின் ஊக்குவிப்பிற்காக செயற்படு ரீதியில் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு தடயவியல் துறை அங்கத்தவர்களுக்கிடையில் ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் ஊக்குவிக்கின்றது. மேலும், வளர்முக நாடுகளுக்கு வருடாந்த மாநாடுகளில் கலந்துகொள்வதற்கு உதவிகளையும் முறைமைகளை அபிவிருத்திசெய்வதற்கான உதவிகள், நூல் அன்பளிப்புகள் முதலியவற்றையும் மேற்கொண்டு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

- **ஆசிய தடய அறிவியல் வலையமைப்பு (The Asian Forensic Science Network)**

  ஆசிய தடய அறிவியல் வலையமைப்பினால் (AFSN) தடய அறிவியல் சார்ந்த ஆய்வுகூடங்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் ஒன்றாக இணைந்து முன்னேறிய தடவியல் பற்றி கலந்துரையாடுவதற்கும் பகிர்ந்துகொள்வதற்கும் அரங்கொன்றை நிர்மாணிக்கின்றது. உறுப்புரிமை பெற்றுக்கொள்வதையடுத்து ஆசிய தடய அறிவியல் வலையமைப்பினால் வெளியிடப்படுகின்ற Forensic Asia செய்தி மடலின்-2019 09 ஆவது பதிப்பிற்காக NNL ஆய்வுகூடத்தினால் ஆக்கமொன்று வெளியிடப்பட்டிருந்தது.

### 8.6.3 போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுத் துறையுடன் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை அதிகார சபைகளுக்கும், சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்குமான வினைத்திறன் மற்றும் மதிநுட்ப விருத்தி நிகழ்ச்சித்திட்டம்

கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஔடதங்கள் மற்றும் முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களின் ஏற்றுமதி, இறக்குமதி, விநியோகம் ஆகிய விடயங்களில் இதனோடு செயலாற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் அறிவு, ஆராய்ச்சி இயல்திறன், விஞ்ஞான ரீதியான தோற்றச்சாயல் ஊடாக அறிவுறுத்தல் பயிற்சி அமர்வுகளை நடாத்துதல் என்பன NNL ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு துஷ்பிரயோக ஔடதங்களை அடையாளம் காண்பதுடன், சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்களின் அலுவலர்கள் விசேடமாக பயிற்றுவிக்கப்படுகின்றனர். போதையூட்டும் ஔடத கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் இவ்வாறான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள் அமுல்படுத்தப்பட்டன.

#### 8.6.3.1 விஞ்ஞான ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / செயலமர்வுகள்

"இலங்கையில் சட்டவிரோதமான ஔடதங்களை அடையாளம் காணல் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை ஆற்றல்களை விருத்திசெய்தல்" என்ற தொனிப்பொருளில் இரு நாள் விஞ்ஞான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் NNL இனால் ஒழுங்குசெய்யப்பட்டது. இப்பயிற்சிச் செயலமர்வின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் வருமாறு:-

1. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களை சட்டவிரோதமான முறையில் கடத்தல் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

2. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள் சம்பந்தமான அகல்விரிவான அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

3. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களை அடையாளம் காணல் சம்பந்தப்பட்ட வெளிக்கள சோதனைக் கருவிகலத்தொகுதிகளை உபயோகித்து பிரயோக ரீதியான அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

4. போதையூட்டும் ஔடதங்களின் நவீன விதங்கள் சம்பந்தமாக பங்குபற்றுவோரின் அறிவை இற்றைப்படுத்தல்.

#### 8.6.3.2 பிற நிறுவனங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

நாட்டிலுள்ள மருந்தகங்களில் விற்பனைசெய்யப்படும் போதையை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களை துஷ்பிரயோகம் செய்தல் சம்பந்தமான விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வுகளும் விளக்கங்களும் காலத்திற்கு ஏற்ப மிகவும் முக்கியத்துவம் வகிக்கின்றன. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தின் உளவியல் வைத்தியப் பிரிவின் மாணாக்கர்களுக்கு இது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடராக நடாத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி மற்றும் சான்றிதழ் கற்கைநெறியைத் தொடரும் மாணாக்கர்களுக்கும் விசேட விரிவுரைகளும் பயிற்சி அமர்வுகளும் ஒழுங்குசெய்யப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் ஒழுங்குசெய்யப்பட்ட அத்தகைய செயலமர்வுகளின் விபரம் அட்டவணை இல. 09 இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை இல. 09 - 2019 ஆம் ஆண்டில் ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சிகளின் / பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தரைப்படை | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | 01 |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | | | | | | | | | | 66 |
| இலங்கை பொலிஸ் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 01 | | | | | | 01 | | | 01 | | 01 |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | 49 | | | | | | 47 | | | 47 | | 75 |
| இலங்கை கடலோரப் பாதுகாப்பு திணைக்களம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | 01 | | | 01 | | | | | | 01 |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | 36 | | | 39 | | | | | | 40 |
| இலங்கை மதுவரித் திணைக்களம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | 01 | 01 | 01 | | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | | | | | 40 | 50 | 50 | 50 | | |
| போதையூட்டும் ஔடதங்கள் முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறியைத் தொடரும் மாணவர்கள் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 01 | 01 | 01 | | 01 | 01 | 01 | | 01 | | 02 | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | 56 | 39 | 50 | | 60 | 46 | 58 | | 44 | | 74 | |
| இலங்கை பொன்கொடா நிறுவனம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| தே.அ.ஔ.க.சபை. | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | 01 | | | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | | | | | | | 37 | | | |
| இலங்கை மதுவரித் திணைக்களம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 01 | | 01 | | | | 01 | | | | | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | 39 | | 32 | | | | 34 | | | | | |
| வயம்ப பல்கலைக்கழகம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | 01 | | | | | | | | | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | 41 | | | | | | | | | |
| மருத்துவ பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | 01 | 01 | | | 01 | 01 | 01 | | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | | 20 | 20 | | | 21 | 20 | 20 | | |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | 01 | | | | | | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | | | | 10 | | | | | | |
| மாவட்ட செயலகம், மாத்தளை. | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | | | | | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | | | | | 250 | | | | | |
| மாவட்ட செயலகம், களுத்துறை. | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | 01 | | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | | | | | | | | 41 | | |
| நுகேகொடை கல்வி வலயம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | 01 | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | | | | | | | | | 16 | |
| மொத்தம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 03 | 01 | 04 | 01 | 02 | 03 | 05 | 02 | 04 | 04 | 03 | 03 |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | 144 | 39 | 159 | 20 | 80 | 95 | 429 | 71 | 151 | 158 | 90 | 144 |

பயிற்சிச் செயலமர்வுகளின் மொத்த எண்ணிக்கை : 35

கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை : 1617

### 8.6.3.3 போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்படுகின்ற கணினிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

போதையூட்டும் ஔடத பாவனையைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும் பற்றிய இலங்கை தேசியக் கொள்கையை அமுல்படுத்தும் பொருட்டு போதையூட்டும் ஔடதங்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவது இன்றியமையாத ஓர் உபாயமுறையாக இருப்பதுடன், அதற்கு சட்ட வினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்கு முறையானதொரு பயிற்சியை வழங்குவதை அடிப்படையாகக்கொண்டு கணினிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டிலும் நடாத்தப்பட்டன. அதனடிப்படையில், பின்வரும் விசேட மொடியூல் சம்பந்தமாக சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்களுக்கு விழிப்புநிலையை ஊட்டுவதற்காக கணினிப் பயிற்சி நகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. தர நியமப்படுத்தி இற்றைப்படுத்திய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் மிகவும் வெற்றிகரமான நடவடிக்கைகளுடன்கூடிய தொழில்நுட்ப நுட்பமுறைகளை ஈடுபடுத்தி அதேபோல், அறிவார்ந்த நுட்பமுறைகளைப் பயன்படுத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பதுடன், அதன்மூலம் மிகவும் பலமுடன் சட்டத்தை அமுல்படுத்தலாம். அதன் காரணமாக கணினி மூலமான பயிற்சிப் பாடநெறியினுள் அறிவை விருத்திசெய்தல், புரிந்துணர்வை ஏற்படுத்தல், இலக்கிட்ட விடயங்களுக்கு மாற்றமான மொடியூல்கள் மூலம் மிகவும் பெறுபேறுகளைத் தரக்கூடிய வெற்றிகரமான உபாயமுறை சார்ந்த முறைமைகளுடன்கூடிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சட்ட வினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான விபரங்கள் அடங்கியுள்ளன.

போதையூட்டும் ஔடத சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டங்கள் இன்றியமையாதவை என்பதுடன், சட்டவிரோதமான போதையூட்டும் ஔடதங்களின் கடத்தலுக்கு எதிரான இலக்கிட்ட முறைமைகளுடன்கூடிய பயிற்சிப் பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையின் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டங்கள் உறுதுணையாக அமையும்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை (NDDCB) ஐ.நா. போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான அலுவலகத்தின் (UNODC) தொழில்நுட்ப உதவியுடன் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான சட்ட வினைப்படுத்துகை ஆற்றல்களைப் பலப்படுத்துமுகமாக கணினிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

பின்வரும் துறைகளுடன் சம்பந்தப்பட்ட பரந்ததோர் அறிவைப் பெற்றுக்கொடுப்பதன்மூலம் சட்டவினைப்படுத்துகை செயற்பாடுகளின் ஆற்றல்களைப் பலப்படுத்துவதே இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாக விளங்கியது.

- கடல், ஆகாயம், பூமி ஆகியவற்றின் எல்லைகளின் ஊடாக இடம்பெறுகின்ற போதையூட்டும் ஔடத கடத்தல்களைத் தடுத்து நிறுத்துதல்.
- கண்காணிப்பு நுட்பமுறைகள்.
- கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஔடதங்களின் விநியோகம்.
- இடர் முகாமைத்துவம்.
- போதையூட்டும் ஔடதங்களைப் பிரித்தறிதலும் சோதனை நடவடிக்கைகளும்.

**அட்டவணை இல. 10 - 2019 ஆம் ஆண்டில் கணினி அடிப்படையிலான பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை**

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கைக் கடற்படை | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | - | - | - | - | - | 01 | 03 | 04 | - | - | - | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | - | - | - | - | - | 03 | 01 | 12 | - | - | - | |
| இலங்கைச் சுங்கம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | - | - | - | - | - | - | 01 | - | - | - | - | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | - | - | - | - | - | - | 05 | - | - | - | - | |
| விசேட அதிரடிப்படை | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | - | - | - | - | 01 | 01 | 01 | 04 | - | - | - | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | - | - | - | - | 09 | 03 | 03 | 12 | - | - | - | |
| முன்னோடி இரசாயனங்கள் அதிகாரசபை | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | - | - | - | - | - | - | | | - | - | - | 01 |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | - | - | - | - | - | - | | | - | - | - | 05 |
| இலங்கை பொலிஸ் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | - | - | - | - | - | 01 | 01 | 04 | - | - | - | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | - | - | - | - | - | 03 | 03 | 12 | - | - | - | |
| பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் பணியகம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | - | - | - | - | - | 01 | 02 | 04 | - | - | - | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | - | - | - | - | - | 11 | 08 | 12 | - | - | - | |
| மொத்தம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | - | - | - | - | 01 | 02 | 02 | 04 | - | - | - | 01 |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | - | - | - | - | 09 | 20 | 22 | 48 | - | - | - | 05 |

பயிற்சிச் செயலமா்வுகளின் மொத்த எண்ணிக்கை : 10

பங்குபற்றியோரின் மொத்த எண்ணிக்கை : 104

### 8.6.4 துஷ்பிரயோக ஔடதங்களின் ஜீவதத்துவ பரிணாம பதார்த்தங்களை அடையாளம் காணலும் பகுப்பாய்வு செய்தலும்

இச்செயன்முறையின்போது உயிரியல் மாதிரிப்பொருள்களிலுள்ள கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற ஔடதங்களின் ஜீவதத்துவ பரிணாமக் கூறுகளை அடையாளம் காண்பதற்கான தனிநபர் மற்றும் நிறுவன மட்டத்தில் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகைய பகுப்பாய்வுகளைத் தொடர்ந்து போதையூட்டும் ஔடதங்களிலிருந்து விடுபட்டுள்ளார் என்பதற்காக வழங்கப்படும் சான்றிதழானது தொழில் பெற்றுக்கொள்வது போன்ற இன்ன பிற கருமங்களுக்கும் பயனுள்ளதாக அமைகிறது. நோய்க் காரணிகளை அடையாளம் காணல், சிகிச்சை முறைகளைத் தீர்மானித்தல், புனர்வாழ்வளித்தல் என்பவற்றுக்கு ஆட்களை ஆற்றுப்படுத்தல், கல்வி நிறுவனங்களிலும் தொழில் தேவைகள் போன்ற விடயங்களிலும் இந்த ஆய்வுகூட அறிக்கை பயனுள்ளதாக அமைகிறது. இதற்கு மேலதிகமாக, போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு பற்றிய 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தை வினைப்படுத்துவதற்கு

அவசியமான மாதிரிப்பொருள்களின் பகுப்பாய்வு அறிக்கைகள் நீதவான் நீதிமன்றங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

நச்சுத்தன்மை வாய்ந்த அபின் மற்றும் அபாயகரமான போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்தல் பற்றிய சட்டம், 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களதும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம் என்பவற்றுக்குப் பயன்கொடுப்பதற்கான ஆய்வுகூடத்தில் பகுப்பாய்வுசெய்யப்பட்ட உயிரியல் மாதிரி வகைகளின் விவரமான ஆவணங்கள் அட்டவணை இல. 11 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 11 - 2019 ஆம் ஆண்டில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட உயிரியல் மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை**

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரச மற்றும் தனியார் வைத்திய- சாலைகள் | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 17 | 09 | 08 | 06 | 18 | 05 | 19 | 11 | 07 | 14 | 11 | 15 |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | 43 | 23 | 27 | 19 | 47 | 26 | 52 | 25 | 16 | 31 | 26 | 22 |
| நீதவான் நீதிமன்றங்கள் | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 03 | 02 | 03 | 02 | 05 | 05 | 04 | 08 | 02 | 05 | 03 | 02 |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | 06 | 04 | 04 | 04 | 10 | 11 | 07 | 14 | 02 | 06 | 08 | 04 |
| சட்ட வினைப் படுத்துகை நிறுவனங்கள் | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 00 | 01 | 00 | 00 | 01 | 02 | 00 | 02 | 03 | 05 | 02 | 01 |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | 00 | 02 | 00 | 00 | 02 | 04 | 00 | 03 | 05 | 08 | 03 | 02 |
| தனி நபர்கள் | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 02 | 02 | 02 | 00 | 00 | 00 |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 02 | 02 | 05 | 00 | 00 | 00 |
| ஏனைய | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 01 | 00 | 00 | 00 | 00 | 00 |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | 00 | 00 | 00 | 00 | 00 | 00 | 02 | 00 | 00 | 00 | 00 | 00 |
| மொத்தம் | மாதிரிப் பொருள்களின் எண்ணிக்கை | 10 | 07 | 17 | 22 | 12 | 08 | 10 | 11 | 14 | 14 | 11 | 02 |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | 26 | 16 | 39 | 45 | 31 | 15 | 22 | 29 | 48 | 27 | 30 | 02 |

மாதிரிப் பொருள்களின் மொத்த எண்ணிக்கை : 217

பரிசோதனைகளின் மொத்த எண்ணிக்கை : 557


பல்வேறு நிறுவனங்களிலிருந்து உயிரியல் மாதிரிப்பொருள்கள் கிடைக்கப்பெறல்
சட்ட வினைப்படுத்தல் நிறுவனங்கள்
தனியாள்
தனியார் மருத்துவமனைகள்
அரச மருத்துவமனைகள்
நீதவான் நீதிமன்றம்
30
25
20
15
10
5
0
சன
பெப்ர
மார்ச்
ஏப்ரல்
மே
ஜூன்
ஜூலை
ஆகஸ்
செப்ட
அக்டோ
நவம்
டிசம்


மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் பெறுபேறுகளின் பொழிப்பு
13%
87%
மறை
நேர்


போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய நேர்ப்படியான பெறுபேறுகளைச் சுட்டிக்காட்டிய மாதிரிப்பொருள்களில் அடங்கியுள்ள போதையூட்டும் ஔடதங்களின் பொழிப்பு
THC
OPI
MOR
COC
MET
BNZ
AMP
TML
BAR
BZO
MDMA
MTD
OXY
PCP
TCA
Alcohol

### 8.6.5 செயலூக்க ஔடதங்களின் பகுப்பாய்வு - புதிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இன்றளவில் நாட்டில் பாரதூரமான ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ள இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகளின் தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்து / ஔடத பாவனை தொடர்பில் எடுக்கப்படக்கூடிய ஒரு துரித தீர்வாக, முறைகேடான விதத்தில் பயன்படுத்தப்படும் ஔடதங்களின் கட்டுப்பாடு, துஷ்பிரயோகம் என்பவற்றைத் தடுப்பதற்கான பொறுப்புவாய்ந்த ஒரே அரச நிறுவனமான தே.அ.ஔ.க.சபை விளையாட்டு வீர வீராங்கனைகளின் தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்துகளின் / ஔடதங்களின் பகுப்பாய்வுப் பணியை ஆரம்பித்தது.

தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகத்துடன் இணைந்த ஆராய்ச்சிக் கருத்திட்டமொன்றாகவே இந்நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

விளையாட்டு வீர வீராங்கனைகளின் உடற்பாய்மங்களிலும் மேலதிக போசாக்கு உற்பத்திகளிலும் அடங்கியிருக்கும், விளையாட்டின்போது பயன்படுத்தும் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களையும் அவற்றின் ஜீவதத்துவ பதார்த்தங்களையும் அடையாளம் காண்பதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வுகளும் தொழில்நுட்ப முறைகளும் கையாளப்பட்டன:-

* பகுப்பாய்வு மற்றும் சோதனை முறைமைகளைக் கண்டுபிடித்தல்.
* சோதனை முறைகளை செல்லுபடியானதாக்கல்.

#### 8.6.5.1 நிரப்பு உணவுசார் உற்பத்திகளில் அடங்கியிருக்கின்ற தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்காக செய்யப்படும் பகுப்பாய்வுகள்

விளையாட்டு வீர வீராங்கனைகள் பயன்படுத்தும் நிரப்பு உணவுசார் தயாரிப்புகளில் அடங்கியிருக்கின்ற தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் விளையாட்டுத் துறையிலும் பாடசாலை மட்டத்திலும் விளையாட்டு வீர வீராங்கனைகள் பயன்படுத்தும் நிரப்பு உணவுசார் தயாரிப்புகளில் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் அடங்கியிருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்து, இவ்வாறான பதார்த்தங்கள் பற்றி பகுப்பாய்வுசெய்யப்பட்ட அவ்வாறான பதார்த்தங்களை அடையாளம் காணல், விளையாட்டின் உள்ளுயிர்ப்பைப் பேணல், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அபகீர்த்திக்குரிய நிலைமைகள் காரணமாக நாட்டுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்தல் ஆகிய நோக்கங்களுடன் தேசிய பணியொன்றாகக் கருதி தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் ஆய்வுகூடம் நிரப்பு உணவுசார் தயாரிப்புகளின் பகுப்பாய்வுப் பணியை ஆரம்பித்தது. இதன்போது தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகம் / இலங்கை தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்துகள் ஒழிப்பு நிறுவகம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிப்பொருள்கள் விஞ்ஞானபூர்வ பகுப்பாய்வுகள் ஆராய்ச்சி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. நாட்டின் பல்வேறு நிரப்பு உணவுசார் தயாரிப்புகள் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிப்பொருள்களின் பகுப்பாய்வுகள் பற்றிய விபரம் அட்டவணை இல. 12 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை இல. 12 - குறித்த காலப்பகுதியில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மேலதிக உணவுசார் தயாரிப்பு மாதிரிப்பொருள்களின் எண்ணிக்கை**

| நிறுவனம் | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | மாதிரிப்பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| Sri Lanka Anti-Doping Agency (SLADA) | 02 | 04 |
| Individual | 04 | 04 |
| **மொத்தம்** | **06** | **08** |

### 8.6.6 துஷ்பிரயோக போதையூட்டும் ஔடதங்களின் பகுப்பாய்வுக்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூட தரப்படுத்தலும் பேணுகையும் பராமரிப்பும்

#### 8.6.6.1 சர்வதேச வினைத்திறன் சோதனை நிகழ்ச்சித்திட்டம்

ஐ.நா. போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சர்வதேச ஒத்துழைப்புக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் என்ற பெயரில் நடாத்தப்படும் சர்வதேச ஆய்வுகூட வினைத்திறன் சோதனை நிகழ்ச்சித்திட்டத்தில் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்கள் ஆய்வுகூடம் பங்கேற்கின்றது. அபிவிருத்தியடைந்த மற்றும் வளர்முக நாடுகளின் ஆய்வுகூடங்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்கின்றன.

தொடர்ச்சியாக இதில் பங்குகொள்வதன்மூலம் உலகளாவிய அளவில் ஆய்வுகூட நியமமாக்கல், பகுப்பாய்வு ஆற்றல்களை விருத்திசெய்துகொள்ளல் என்பவற்றுடன் சரியான முடிவெடுத்தல் பற்றிய மிகச் சரியான அணுகுமுறையொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஒருசீரான மற்றும் ஒருங்கிணைந்த பெறுபேறுகளையும் அறிக்கையிடல்களையும் அனைத்து ஆய்வுகூடங்கள் மூலமும் அடைந்துகொள்வதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

அவசியமான சிபார்சுசெய்யப்பட்ட மாதிரிப்பொருள்களும், அடையாளம் காணப்படாத, சந்தேகத்திற்கிடமான மாதிரிப்பொருள்களும் உயிரியல் மாதிரிப்பொருள்களும் அடையாளம் காண்பதற்காகவும் பகுப்பாய்வு செய்வதற்காகவும் ஐ.நா. போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல்களுக்கான அலுவலகத்தினால் அனுப்பிவைக்கப்படுகிறது.

**சர்வதேச ஒத்துழைப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (ICE) – 2018, 2019**

இக்காலப்பகுதியில் சர்வதேச ஒத்துழைப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2018 சுற்று 2, 2019 சுற்று 1 இல் ஆய்வுகூடம் பங்குபற்றியது. இந்த மாதிரிப்பொருள் வகைகளுக்கு அளவுரீதியான, பண்புரீதியான பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் அடங்கியவை அல்லது அவை அடங்கியிராதவை என்பதற்கான (சந்தேகத்திற்கிடமான மாதிரிப்பொருள்களும் உயிரியல் மாதிரிப்பொருள்களும் பற்றிய) அவசியமான அறிக்கைகள் வழங்கப்பட்டன.

**சர்வதேச ஒத்துழைப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (ICE) – 2018 சுற்று 2**

சர்வதேச ஒத்துழைப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் 2018 சுற்று 1 பெறுபேற்று மீளாய்வின்படி 75 நாடுகளின் 235 ஆய்வுகூடங்கள் தகுதிபெறும் ஆய்வுகூடங்களின் நிரற்படுத்தலில் அடங்கின. தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் ஆய்வுகூடத்தின் பெறுபேற்று மதிப்பீட்டை அட்டவணை இல. 13 இல் காணலாம்.

**Table 13:** Evaluation results of Round 2 of ICE program 2018

| Test | Z Score |
|---|---|
| Cocaine | 0.1 |
| 3,4 - methylenedioxypyrovalerone (MDPV) | -0.5 |
| Heroin | -0.4 |

Satisfactory Limit of /Z/ Score :< 2

**சர்வதேச ஒத்துழைப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (ICE) – 2019 சுற்று 1**

சர்வதேச ஒத்துழைப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் (ICE) 2019 சுற்று 2 பெறுபேற்று மீளாய்வின்படி 74 நாடுகளின் 241 ஆய்வுகூடங்கள் தகுதிபெறும் ஆய்வுகூடங்களின் நிரற்படுத்தலில் அடங்கின. தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் ஆய்வுகூடத்தின் பெறுபேற்று மதிப்பீட்டை அட்டவணை இல. 14 இல் காணலாம்.

**Table 14:** Evaluation results of Round 1 of ICE program 2019

| **Test** | **Z Score** |
|---|---|
| 3,4 -Methylenedioxypyrovalerone (MDPV) | -0.1 |
| **Cocaine** | **1.9** |

Satisfactory Limit of /Z / Score :< 2

### 8.6.6.2 **ISO 17025 ஆய்வுகூட தர முகாமைச் சான்றிதழ்**

ISO 17025 ஆய்வுகூட தர முகாமைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக ஆய்வுகூட சேவைகளை உயர் பொது நியமம்பெற்ற முறையில் பேணும் பொருட்டு போதையூட்டும் ஔடதங்கள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய பதார்த்தங்கள், முன்னோடி இரசாயனங்கள், விளையாட்டு வீர வீராங்கனைகளின் செயலூக்கத்தை அதிகரிப்பதற்குப் பயன்படுத்தும் பதார்த்தங்கள் முதலியன சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகூட சோதனைகளை முன்னேற்றுவதற்கு ஆய்வுகூடத்தின் ஆற்றலை முன்னேற்றுவதற்குரிய ஆவணங்களைத் தயாரிக்கும் பணி இடம்பெற்ற வருகின்றது.

### 8.7 முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு

போதையூட்டும் ஔடதங்களுக்கும், தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடிய முக்கியமான முறை, முன்னோடி இரசாயனங்களின் சட்டரீதியான வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதாகும். அதாவது, சட்டரீதியான வர்த்தகத்திலிருந்து சட்டரீதியற்ற வர்த்தக மார்க்கங்களுக்கு முன்னோடி இரசாயனங்கள் வியாபிப்பதைத் தடுப்பதாகும்.

பொதுவாக முன்னோடி இரசாயனப் பதார்த்தங்கள் என்றால் இரசாயன சேர்வைகள் என்பதுடன், இரசாயனச் செயன்முறையொன்றுக்கு அதனை உட்படுத்துவதன் மூலம் வேறு சேர்வையொன்றை (compound) உருவாக்க முடியும். மருந்துப் பொருள்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் முன்னோடி இரசாயனப் பதார்த்தங்கள் சட்டவிரோதமான ஔடதங்களைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆகையால், இந்த முன்னோடி இரசாயனப் பதார்த்தங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுவதையும் பயன்படுத்தப்படுவதையும் கண்காணிப்புச் செய்வதற்கான ஒரு தீவிர பொறிமுறை தேவையாகும்.

இலங்கையில் பொதுவாக மேற்படி முன்னோடி இரசாயனப் பதார்த்தங்கள் நறுமணப் பொருள்கள், ஒப்பனைக்கான வண்ணப்பொருள்கள், நிறப்பூச்சுகளும் சாயங்களும், மருந்துப் பொருள்கள், பிளாஸ்ரிக் உள்ளிட்ட நாளாந்தத் தேவைப் பொருள்களை பரந்ததொரு வீச்சில் சட்டரீதியாக உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. அதேபோல், இந்த முன்னோடி இரசாயனங்கள் ஆய்வுகூட பரிசோதனைகளின்போது தாக்குபொருளாகவும் (reagents) பயன்படுத்தப்படுகிறது. கைத்தொழில் பிரயோகங்களில் அசிட்டோன், மெதில் எத்தில் கீட்டோன் அச்சீட்டு மைகளில் கரைப்பான் ஒன்றாக பரவலாகப் பயன்படுத்தப்படுவதுடன், அச்சீட்டு மை தொழிற்சாலைகளில் திகதி குறியீட்டுக்குத் தேவைப்படுகிறது. ஐதரோ குளோரிக் அமிலத்தையும் சல்பூரிக் அமிலத்தையும் கைத்தொழில்களில் கழிவுநீரைச் சுத்தப்படுத்தும்போது pH பெறுமானத்தைச் சீராக்குவதற்கு பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதுடன், நீச்சல் தடாகங்களைப் பராமரிக்கும்போதும் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு மேலதிகமாக மின்கல (பற்றரி) அமில உற்பத்தியில் சல்பூரிக் அமிலம் பயன்படுத்தப்படுகிறது. அசிட்டோன், டொலுயின், மெதில் எதில் கீட்டோன் தினர் கரைதிரவ உற்பத்திச் செயன்முறையிலும் மரப்பொருள்களுக்கான பூச்சுக்களின் உற்பத்தியிலும் கரைப்பானாக வர்ணப் பூச்சு உற்பத்திக் கைத்தொழிலிலும் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு மேலதிகமாக டொலுயின் ஒட்டுப்பசை உற்பத்தியில் கரைப்பானொன்றாகப் பயன்படுத்தப்படுகிறது. பலசரக்குகளின் வேறாக்கலின்போது (extraction) வேறாக்கல் பதார்த்தமொன்றாக எதில் ஈதர் பயன்படுத்தப்படுகிறது.

பிப்பெரனோல் சுவையூட்டி (Flavour) உற்பத்திக் கைத்தொழிலில் குறிப்பாக ஐஸ்கிறீம் (குளிர்களி) உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது. பொற்றாசியம் பரமங்கனேற்று விலங்கு வளர்ப்பில் தூமமூட்டலுக்கு (fumigation) பயன்படுத்தப்படுகிறது. மருந்துப் பொருள்கள் தயாரிப்பின்போது என்திரனிலிக் அமிலம், பீனைல் அசிட்டிக் அமிலம், பிப்பெரடீன், அசிட்டிக் என்ஹைட்ரைட், N-எசிட்டைல் எந்திரினிலிக் அமிலம், எப்ரிடின், அர்கொ மெட்ரின், நோர்எப்ரிடீன், 1-பீனைல்-2 புரொபனோன், பிசியுடொ எப்ரிடின் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, புரொன்கொடிலேட்டர் நாசித்துவார சளித் தடையகற்றி மருந்துகளின் உற்பத்திக்கு எப்ரிடின் மற்றும் சூடோஎப்ரிடீன் பயன்படுத்தப்படுகிறது. ஒற்றைத் தலைவலிக்கு (migraine) சிகிச்சையளிக்கும்போது அர்கொமெட்ரீன், அர்கொரெமீன் என்பன பயன்படுத்தப்படுகிறது. பிப்பரனோல் உற்பத்திசெய்வதற்கு செப்ரோல் மற்றும் ஐசொ செப்ரோல் பயன்படுத்தப்படுகிறது. காபன் சேர்வைகளைத் தொகுப்பதற்கு லிசர்ஜிக் அமிலம் பயன்படுத்தப்படுகிறது.

1988 ஐக்கிய நாடுகளின் தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகளையும் உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப்பொருள்களையும் சட்டரீதியற்ற முறையில் கள்ளக் கடத்தல் செய்வதைத் தடுப்பதற்கான சமவாயத்தில் 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் சார்க் பட்டயத்தை

வலுவூட்டுவதை நோக்காகக்கொள்வதன் மூலம் தே.அ.ஔ.க. சபையோடு இணைக்கப்பட்ட முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை 2011.01.01 ஆந் திகதி தாபிக்கப்பட்டது. 1988 ஐக்கிய நாடுகளின் தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகளையும் உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப் பொருள்களையும் சட்டரீதியற்ற முறையில் கள்ளக் கடத்தல் செய்வதைத் தடுப்பதற்கான பட்டயத்தின் 12 ஆம் பிரிவிற்கமைய முன்னோடி இரசாயனங்களை ஒழுங்குபடுத்துவதில் இலங்கையில் செயல்வலுப்பெறும் தேசிய அதிகாரசபையாக இன்று அதுஇயங்குகிறது. இன்று, நாடு பூராவும் 23 இரசாயனப் பதார்த்தங்கள் (திருத்தத்தின்போது இன்னும் ஆறு இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படவுள்ளன.) கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படுவதுடன், அச்சட்டதிட்டங்களை மீறும் ஆளெவருக்கும் 2010 ஆம் ஆண்டின் 1653/7 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் தண்டனை அளிக்கப்படலாம். மேலும் போதையூட்டும் ஔடத து்ப்பிரயோகம், தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான இலங்கை தேசிய கொள்கையின் பந்தி 2.2 தொடர்பாக (இதனகத்துப் பின்னர் அதிகாரசபை என்ற குறும் பெயரால் அழைக்கப்படும்) முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கு இலங்கையில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம், தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான பயனுறுதிவாய்ந்த கண்காணிப்பு முறைமையொன்றை உருவாக்கும் தத்துவம் உரித்தாகிறது.

முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு 2008ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சட்டத்திற்கமைய முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவினால் பின்வரும் பணிகள் ஆற்றப்படுகின்றன.

**பணிகள்**

- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகளையும் உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களையும் வழங்குவதும், அதற்கான கேள்வியைக் குறைப்பதும் இதன் மிக முக்கிய நோக்கமாகும்.
- முன்னோடி இரசாயனங்களின் முறைப்படியான போக்குவரத்து, களஞ்சியத்திடல், விநியோகம், பாதுகாப்பு, பாவனை என்பவற்றைக் கண்காணித்தல்.
- முன்னோடி இரசாயனங்களுடன் சம்பந்தப்பட்ட செயன்முறைகளின் கண்காணிப்பு, கட்டுப்பாடு என்பவற்றை ஒழுங்குபடுத்துதல்.
- முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களின் இறக்குமதி, ஏற்றுமதி, வியாபாரம், பயன்படுத்தும் தனிநபர்கள் / நிறுவனங்கள் / கைத்தொழில்ளுக்கு அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்.
- அனுமதிபெற்ற இறக்குமதியாளர்கள், இறுதிப் பயனர்கள், விநியோகஸ்தர்களின் களஞ்சியப்படுத்தும் இடங்களைப் பதிவுசெய்தலும் காலத்திற்கேற்ப மேற்பார்வைசெய்தலும்.
- இரசாயனப் பதார்த்தங்கள், போதையூட்டி மருந்துகள் மற்றும் உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களையும் பயன்படுத்தல் (சட்டரீதியாகவும் சட்டரீதியற்ற முறையிலான பிரயோகங்கள்) பற்றிய தகவல்களை சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடன் (ஐஹேஊடீ) பரிமாறிக்கொள்ளல்.
- முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களதும் ஔடதங்களதும் து்ப்பிரயோகத்தைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் சட்ட வினைப்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கு அவசியமான அறிவை வழங்குதலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், கைத்தொழில்கள், சமூகத்தில் அனைத்து பங்குதாரர்களுக்கும் உதவுதலும் சரியான வழிகாட்டலொன்றை வழங்குதலும்.

மருந்துகள் மற்றும் முன்னோடி இரசாயனப் பதார்த்தங்கள் தொடர்பில் இலங்கையில் நிலவும் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் ஆக்குவதற்கும் மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கும் பங்களிப்பை

வழங்குதல்.

முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களின் இறுதிப் பயனர்களினாலும் இறக்குமதியாளர்களினாலும் இரசாயனப் பதார்த்தங்கள் வைத்திருக்கப்படும் இடங்கள் சரியான முறையில் பாதுகாப்பான நிலைமையின் கீழ் பராமரிக்கப்படுகின்றதா என்பதை உத்தியோகத்தர்கள் தமது புலனாய்வுகளின்போது குறிப்பாக அவதானிக்கின்றனர்.

இது தவிர, முன்னோடி இரசாயனப் பதார்த்தங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கும் அவை பற்றிய விழிப்புநிலையை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பிராந்திய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பைப் பேணுவதற்கு அதிகாரசபையின் மூலம் பின்வரும் பணிகளும் ஆற்றப்படுகின்றன:-

- இறக்குமதி செய்யப்படும் நாடுகளுக்கு முன் ஏற்றுமதி அறிக்கைகளை (Pre Export Notification - PEN) வழங்குதல்.
- முன் ஏற்றுமதி அறிக்கைகளுக்கு (PEN) ஏற்புடைய புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையுடனும் (INCB) வேறு நாடுகளின் சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுடனும் முன் இரசாயனப் பதார்த்தங்கள், தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மருந்துகள் மற்றும் உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப்பொருள்கள் பற்றிய தகவல்களை நிகழ்நிலைப்படுத்திக் கொள்ளல்.
- அறிக்கைகளைத் தயாரித்தலும் அவற்றை சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபைக்கு (INCB) வழங்குதலும். (Form D)

**விசேட செயற்பாடுகள் - 2019**

✓ கணினிமுறைப்படுத்திய முறைமைத் தரவுத் தளத்தை நிறுவுதல் பற்றிய முறைமை ஆய்வுகளைச் சமர்ப்பிக்கும் நிகழ்ச்சித்திட்டம் பங்கீடுபாட்டாளர்களுக்கும், தே.அ.ஔ.க. சபையின் சிரேஷ்ட பணியாள்தொகுதியினருக்கும் 2019.02.25 ஆந் திகதி PCA இனால் தே.அ.ஔ.க. சபை கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டது. கலாநிதி மஞ்ஜுஶ்ரீ அவர்களினால் (விரிவுரையாளர் UCSC) பிரதான சமர்ப்பிப்பு முன்வைக்கப்பட்டது.





✓ பாதுகாப்பு அமைச்சுக்கு முன்னோடி இரசாயனங்களின் இறக்குமதித் தரவுகளைச் சமர்ப்பித்தல் சம்பந்தமாக அனைத்து பதிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்குமான ஒரு கூட்டம் PCA இனால் ஒழுங்குசெய்யப்பட்டது. பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகத்தர்களினால் 2019.10.23 ஆந் திகதி தே.அ.ஔ.க.சபை கேட்போர்கூடத்தில் இக்கூட்டம் நடாத்தப்பட்டது.





**<u>தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள்</u>**

- புதிய கணினித் தரவுத் தளமொன்றை விருத்திசெய்தல்.

**<u>எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்</u>**

- முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் மற்றும் உளமருட்சியை உண்டுபண்ணும் மருந்துப் பொருள்களின் வழங்கலும், அதற்கான கேள்வியைக் குறைப்பது பற்றி பங்கீடுபாட்டாளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதலும்.

  (கைத்தொழிலாளர்களுக்கும், முகவராண்மைகளுக்கும், வீட்டுப் பாவனையாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும் பாடசாலைகளுக்கும் ஏற்றவாறு)

- போதையூட்டும் ஔடதங்களையும் உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப்பொருள்களையும் சட்டவிரோதமான முறையில் தயாரிப்பதைத் தடுப்பதற்கு சட்டவிரோதமான வர்த்தகத்தையும் முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களையும் சட்டவிரோதமான முறையில் பாவிப்பதை மேற்பார்வைசெய்வதற்கு சட்டவினைப்படுத்துகைச் செயற்பாடுகளைப் பலப்படுத்துதல்.

| | பரப்பு | அனுமதிப்பத்திர வகை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இறுதிப் பயனர் | விநியோகத்தர் | இறக்குமதி | ஏற்றுமதி | வளவுகள் | மொத்தம் |
| 2019 | பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திர விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 480 | 93 | 116 | 4 | 140 | 833 |
| | விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் | 466 | 94 | 114 | 3 | 126 | 803 |
| | வளவுகளின் பரிசோதிப்பு | | | | | | 150 |

➢ முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் முன்னேற்றப் பொழிப்பு 2019









➢ வளவுகளின் பரிசோதிப்புத் தரவுகள் - 2019

| மாதம் | 2019 | |
|---|---|---|
| | பரிசோதிக்கப்பட்ட | இரத்துச் செய்யப்பட்ட |
| ஜனவரி | 18 | |
| பெப்ரவரி | 09 | |
| மார்ச் | 12 | |
| ஏப்ரல் | 10 | |
| மே | 18 | 01 |
| ஜூன் | 21 | 01 |
| ஜூலை | 13 | |
| ஆகஸ்ட் | 11 | 01 |
| செப்டம்பர் | 09 | |
| அக்டோபர் | 11 | 04 |
| நவம்பர் | 08 | 01 |
| டிசம்பர் | 10 | |
| மொத்தம் | 150 | 08 |

வளவுகள் பரிசோதனையும் மேற்பார்வையும் இடம்பெறும்போது



## முன்னோடி இரசாயனங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் வருமானம் - 2019

| மாதம் | இறுதிப்பயனர் (ரூ) | விநியோகத்தர் (ரூ) | இறக்குமதியாளர் (ரூ) | வளவுகள் (ரூ) | ஏற்றுமதியாளர் (ரூ) | மொத்தம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 30800 | 35750 | 52250 | 34650 | 0 | 153450 |
| பெப்ரவரி | 40150 | 15950 | 43450 | 56650 | 0 | 156200 |
| மார்ச் | 50050 | 28050 | 27500 | 50600 | 0 | 156200 |
| ஏப்ரல் | 32450 | 19800 | 29700 | 45100 | 0 | 127050 |
| மே | 68750 | 31350 | 42350 | 95150 | 4950 | 242550 |
| ஜூன் | 41800 | 58850 | 39050 | 46750 | 0 | 186450 |
| ஜூலை | 46750 | 48400 | 69850 | 81400 | 0 | 246400 |
| ஆகஸ்ட் | 51150 | 24200 | 53900 | 59400 | 0 | 188650 |
| செப்டம்பர் | 39600 | 27500 | 64900 | 55550 | 4950 | 192500 |
| அக்டோபர் | 59950 | 28600 | 31900 | 70400 | 0 | 190850 |
| நவம்பர் | 43450 | 27500 | 34100 | 40150 | 4950 | 150150 |
| டிசம்பர் | 61050 | 23650 | 29150 | 59400 | 4950 | 178200 |
| **மொத்தம்** | **565950** | **369600** | **518100** | **695200** | **19800** | **2168650** |









வளவுகள் பரிசோதனையும் மேற்பார்வையும் இடம்பெறும்போது





## 9. வருமானக் கூற்று

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின்**

**2019 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவுறும் ஆண்டுக்கான வருமானக் கூற்று**

| வருமானங்கள்: | குறிப்பு இல. | 2019 (ரூ.) | 2018 (ரூ.) |
|---|---|---|---|
| அரச மீண்டெழும் கொடைகள் | குறிப்பு 1 | 218,522,202.00 | 208,723,999.00 |
| பிற வருமானங்கள் | குறிப்பு 2 | 14,034,865.38 | 15,273,201.18 |
| நிலையான சொத்துக்கள் விற்பனையிலிருந்தான இலாபம் | குறிப்பு 3 | 22,063.00 | 34,085.00 |
| வெளிநாட்டுக் கொடைகள் - மீண்டெழும் | | - | - |
| CBT கருத்திட்டத்திற்கு கிடைத்த கொடைகள் | | - | - |
| INGSA இற்குக் கிடைத்த கொடைகள் | | | 2,752,400.00 |
| | | 232,579,130.38 | 226,783,685.18 |
| **செலவினங்கள்:** | | | |
| ஆள்சார் மற்றும் நிர்வாகச் செலவு | குறிப்பு 4 | 174,016,691.33 | 162,855,867.31 |
| நடவடிக்கைக் கிரயம் | குறிப்பு 5 | 39,933,945.76 | 35,639,822.31 |
| உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனப் பங்களிப்பு | குறிப்பு 6 | 615,250.00 | 507,000.00 |
| தடுப்புக் கல்விப் பிரிவுச் செலவு | குறிப்பு 7 | 1,174,100.69 | 1,700,121.16 |
| சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் செலவு | குறிப்பு 8 | 21,272,258.00 | 20,627,076.58 |
| ஆராய்ச்சிக் கற்கைச் செலவு | குறிப்பு 9 | 5,098,785.15 | 4,121,954.60 |
| வெளிநிலைச் சேவைகள் செலவு | குறிப்பு 10 | 3,438,117.70 | 2,015,585.76 |
| ஆய்வுகூடச் செலவு | குறிப்பு 11 | 2,764,021.55 | 2,135,128.85 |
| சிறைச்சாலைகளும் ஏனைய நிலையங்களும் | குறிப்பு 12 | 579,208.50 | 273,159.00 |
| மனிதவள அபிவிருத்திச் செலவு | குறிப்பு 13 | 840,691.94 | 987,963.00 |
| நிதிச் செலவு | குறிப்பு 14 | 86,030.00 | 99,025.00 |
| பெறுமானத் தேய்வு | குறிப்பு 15 | 21,019,673.23 | 24,112,705.46 |
| **மொத்த நடவடிக்கைச் செலவு** | | 270,838,773.85 | 255,075,406.03 |
| **மேண்மிகை அல்லது பற்றாக்குறை** | | (38,259,643.47) | (28,291,720.85) |

# 10. ஐந்தொகை

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின்**
**2019 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை**

| | | | 2019 | | 2018 |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்:** | | ரூ | ரூ. | ரூ | ரூ |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | | | |
| வங்கியிலுள்ள காசு | குறிப்பு 16 | 1,706,592.09 | | 6,231,881.32 | |
| கையிருப்புகள் | குறிப்பு 17 | 5,034,706.13 | | 4,598,145.57 | |
| முற்கொடுப்பனவுகள் | குறிப்பு 18 | 1,885,469.16 | | 2,128,897.44 | |
| கிடைக்கற் பாலதான வருமானம் | | 28,362.39 | | | |
| முற்பணங்கள் | குறிப்பு 19 | 1,809,704.50 | | 1,828,713.50 | |
| | | | 10,464,834.27 | | 14,787,637.83 |
| கடன்படுநர் - முற்பணங்கள் | குறிப்பு 20 | 658,812.96 | | | 728,812.96 |
| அறவிடப்பட வேண்டிய இடர்க் | | | | | |
| கடனும் பண்டிகை முற்பணமும் | குறிப்பு 21 | 7,984,983.00 | | | 7,921,424.00 |
| WIP புதிய கட்டிடம் | | 556,142.20 | | | 556,142.20 |
| மென்பொருள்கள் | | 928,085.00 | | | 400,000.00 |
| | | | 10,128,023.16 | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்:** | | | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் | குறிப்பு 22 | | 499,774,058.66 | | 504,132,172.44 |
| **மொத்த சொத்துக்கள்** | | | 520,366,916.09 | | 528,526,189.43 |
| **உரிமைகளும் பொறுப்புக்களும்:** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்:** | | | | | |
| கடன் கொடுநர்கள் | குறிப்பு 23 | 69,220.00 | | 49,220.00 | |
| அட்டுறு செலவுகள் | குறிப்பு 24 | 18,909,399.91 | | 9,604,960.21 | |
| நிறுத்திவைத்த தொகைகள் | குறிப்பு 25 | 344,946.55 | | 179,540.00 | |
| | | | 19,323,566.46 | | 9,833,720.21 |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்:** | | | | | |
| பணிக்கொடை ஒதுக்குகள் | குறிப்பு 26 | | 53,385,440.75 | | 47,310,326.76 |
| **உரிமையாண்மைகள்:** | | | | | |
| அரச மூலதனக் கொடை | குறிப்பு 27 | 65,348,000.00 | | 50,948,000.00 | |
| மூலதன ஒதுக்கங்கள் | | 65,503,710.68 | | 65,503,710.68 | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | | 462,720,932.38 | | 462,720,932.38 | |
| தொங்கல் கணக்கு | | 462,720,932.38 | | 462,720,932.38 | |
| மேன் மிகை / பற்றாக்குறை | | 480,899.89 | | 480”899.89 | |
| | | (146,395,634.07) | | (108,271,400.49) | |
| **மொத்த உரிமையாண்மை** | | | 447,657,908.88 | | 471,382,142.46 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்:** | | | **520,366,916.09** | | **528,526,189.43** |

கணக்குகளுக்கு உரிய கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதிக்கூற்றின் இன்றியமையாத ஓரங்கமாகும்.

டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று உள்ளவாறு அரச அலுவல்கள் பற்றிய உள்ளபடியானதும் நியாயமானதுமான ஒரு நோக்கை வழங்குவதற்காகவே நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் வெளியிடப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றோம். 2019 மற்றும் அதன் மேன்மிகை∴ (பற்றாக்குறை) முடிவடைந்த ஆண்டிற்கான இந்நிதிக்கூற்றுக்கள் அரசாங்க சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவானவையாகும்.

| | |
|---|---|
| **உதவிப் பணிப்பாளர் - நிதி** | **தவிசாளர்/பணிப்பாளர் நாயகம்** |
| **தே.அ.ஔ.க.ச.** | **தே.அ.ஔ.க.ச.** |

இந்த பக்கம் 1 முதல் 4 வரையான கணக்கீட்டுக் கொள்கைகளதும் இந்த நிதிக்கூற்றுக்களதும் உள்ளக பகுதிகளை உருவாக்குவதற்கு பக்கங்கள் பற்றிய குறிப்புக்கள், இந்த நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். அத்தகைய நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அவர்களுக்காக கையொப்பமிடப்பட்டது.

| | |
|---|---|
| **சபை உறுப்பினர்** | **சபை உறுப்பினர்** |
| **தே.அ.ஔ.க.ச.** | **தே.அ.ஔ.க.ச.** |

# 11. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

## 1. கூட்டிணைத் தகவல்கள்

1.1 வாழிடமும் சட்டவடிவமும்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தினால் இலங்கையில் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட சபையாகும். கோட்டே வீதி, இராஜகிரிய என்ற முகவரியில் இந்நிறுவனம் அமைந்துள்ளது.

### 1.2 சபையின் தத்துவங்கள்

(அ) அபாயகரமான ஔடதங்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்துவதைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும் சம்பந்தமான தேசிய கொள்கையொன்றை ஒழுங்குறுத்துதல், மீளாய்வுசெய்தல், அவ்வாறான கொள்கைகள் பற்றி அமைச்சருக்கு மதியுரைகளையும் விதப்புரைகளையும் வழங்குதல்,

(ஆ) சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு நியாயமான வகையில் தேவைப்படும்போது தனிநபர்கள், அமைப்பாண்மைகள், அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்களிடமிருந்து தகவல்களையும் விபரங்களையும் கோருதல்,

எவ்வாறாயினும், நீதிமன்றத்தினால் கோரப்படும்போது அல்லது சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுடன் இசைவுறுதல் தவிர்ந்தவிடத்து இப்பிரிவின் ஏற்பாடுகளின்வண்ணம் பெற்றுக்கொண்ட ஏதேனும் ஒரு தகவல் அல்லது விபரம் அங்கத்தவரொருவரினால் வெளிப்படுத்தப்படுதல் ஆகாது,

(இ) சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து உதவிகளையும் கொடைகளையும் பெற்றுக்கொள்ளல்,

(ஈ) அபாயகரமான ஔடதங்களைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள முகவராண்மைகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச்செய்தல்,

(உ) போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புப் பணிகளை ஊக்குவித்தலும், தேசிய அபாயகரமான ஔடதங்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்தல் மற்றும் தடுப்பு சம்பந்தமான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை சிறுவர்களுக்கும் முதியவர்களுக்கும் ஒழுங்குசெய்தல் அத்துடன்,

(ஊ) அபாயகரமான ஔடதங்களைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளுடன் இணைந்த தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்பாண்மைகளுடனும் முகவராண்மைகளுடனும் ஒருங்கிணைப்பைப் பேணுதல்

என்பன சபையின் தத்துவங்களாகும்.

## 2. கணக்கீட்டுக் கொள்கைகள் (பொது)

### 2.1 தயாரிக்கும் அடிப்படை

சபையின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசதுறை கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்களுக்கு பாதிப்புச் செலுத்தும் பணவீக்கக் காரணிகளுக்கான சீராக்கங்கள் செய்யப்படவில்லை. குறித்த இடங்களில் பயன்படுத்தப்பட்ட விசேட கொள்கைகள்

எதிர்வரும் குறிப்புகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் திரண்ட அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2 ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

நடப்பு ஆண்டில் நிதிக்கூற்றுக்களை மிகச் சிறந்த முறையில் விளங்கிக்கொள்வதற்காக முன்னைய ஆண்டிற்குரிய அவசியமான ஒப்பீட்டுரீதியான தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்களின் உருப்படிகளைச் சமர்ப்பித்தல் அல்லது மீள்வகையீடுசெய்தல் திருத்தம் செய்யப்பட்டுள்ளவிடத்து, மிகச் சிறந்ததொரு சமர்ப்பிப்பை வழங்கும் பொருட்டு நடப்பு ஆண்டுக்கு இசைவானவாறு ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளும் மீள் வகையீடு செய்யப்பட்டுள்ளன.

### 2.3 ஆதனங்களும் பொறித்தொகுதிகளும் சாதனங்களும்

ஆதனங்களும் பொறித்தொகுதிகளும் சாதனங்களும் கிரயத்தில் அல்லது மீள்மதிப்பிட்டுப் பெறுமதியில் திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமானத்தைக் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இறையிலி நிலங்கள் தவிர்ந்தவிடத்து ஆதனங்களுக்கும் பொறித்தொகுதிகளுக்கும் சாதனங்களுக்கும் தேய்வுப் பெறுமான ஒதுக்கீடு அவற்றின் மதிப்பீட்டுப் பயனள்ள ஆயுட்காலத்தில் சமமான தவணைகளில் பதியும் பொருட்டு அவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதியின் பேரில் பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படுகிறது:-

| | வீதம் (%) |
|---|---|
| கட்டிடங்களும் கட்டுமானங்களும் | 5 |
| தளபாடங்கள் | 10 |
| அலுவலக உபகரணங்கள் | 20 |
| பொருத்துதல்கள் | 20 |
| நூலக நூல்கள் | 25 |
| வாகனங்கள் | 25 |
| சமையலறை உபகரணங்கள் | 20 |
| வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை உபகரணங்கள் | 20 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 20 |
| வேறு பொறித்தொகுதிகளும் சாதனங்களும் | 20 |

எளிய நேர்கோட்டு முறையின் அடிப்படையில் சொத்துக்கள் கொள்வனவுசெய்த ஆண்டில் முழு ஆண்டிற்குமான பெறுமானத் தேய்வும் 2016 ஆம் ஆண்டிற்கு முன்பு கொள்வனவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக அப்புறப்படுத்தும் திகதி வரை பெறுமானத் தேய்வு செய்யப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் கொள்வனவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கு கொள்வனவுசெய்த/ அப்புறப்படுத்திய திகதியின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படுகிறது.

மோட்டார் வாகனங்கள் தலைமையகத்தின் காணியும், கட்டிடங்களும் மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளின்பேரில் காட்டப்படுவதுடன், ஏனைய எல்லா சொத்துக்களும் வகையீட்டுக் கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன.

பின்வரும் சொத்துக்கள், குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன:-

| குத்தகை ஆதனம் | பெறுமதி (ரூ) | குத்தகை காலப்பகுதி |
|---|---|---|
| தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, இல.383, கோட்டே வீதி, இராஜகிரிய. | 4,350,000 | 99 ஆண்டுகள் |
| பிட்டிபன காணி | 4,027,518 | 30 ஆண்டுகள் |
| ஹந்தெஸ்ஸ காணி - கண்டி | 1,893,051 | - |
| 3ஆம் மாடி, இல.385C-3/1, இராஜகிரிய. | 3,600,000 | 02 ஆண்டுகள் |
| மஹஹேன தோட்டம் | 13,062,750 | 30 ஆண்டுகள் |

### 2.4 குத்தகை ஆதனங்கள்

2016.03.04 தொடக்கம் 2046.03.03 ஆந் திகதி வரையான 30 வருட காலத்திற்கு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையுடன் குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பெறுமதிசேர் வரியும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி இத்தொகையில் அடங்கவில்லை என்பதுடன், 30 வருட வாடகை செலுத்தல், முத்திரைக் கட்டணங்கள், சட்டத்தரணிகளின் கட்டணங்களும் உள்ளடங்கும்.

நடப்பாண்டில் குத்தகை வாடகை 5 ஆண்டுகளுக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், அத்தொகை ஐந்தாண்டுகளில் எளிய நேர்கோட்டு முறை அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்படும்.

### 2.5 பணிக்கொடைக்கான நிதிஒதுக்கீடு

சேவையின் முதல் ஆண்டில் ஆரம்பித்து ஓராண்டு சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர் ஒவ்வொருவரதும் நிதியாண்டின் இறுதி மாதத்திற்குரிய சம்பளத்தில் அரைவாசி என்ற அடிப்படையில் கணிப்பிடப்பட்ட பெறுமதிக்குச் சமமான பணிக்கொடைக்கான நிதிஒதுக்கீடுகள் இந்நிதிக்கூற்றுக்கள்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின்கீழ் தொடர்ச்சியாக 05 ஆண்டு சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருப்பதன் பேரில் மட்டும் உத்தியோகத்தர் ஒருவர் பணிக்கொடை செலுத்தப்படுவதற்குத் தகுதி பெறுவார்.

### 2.6 வர்த்தகப் பெறுவனவுகள்

எதிர்பார்க்கப்பட்ட கிடைக்கத்தக்க பெறுமதிக்கு வர்த்தக பெறுவனவுகள் பதியப்படுகின்றன. ஆண்டு இறுதிப் பகுதியளவில் காணப்படும் செலுத்தப்படாதுள்ள அனைத்துத் தொகைகளின் மீளாய்வொன்றின் அடிப்படையில் ஐயுறவான பெறுவனவுகளுக்கான மதிப்பீடொன்று தயாரிக்கப்படுகிறது. அறவிடமுடியாக் கடன்கள் அடையாளம் காணப்பட்ட ஆண்டினுள் பதிவழிக்கப்படுகின்றன.

### 2.7 காசும் காசுக்கு நிகரானவையும்

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசுக்கு நிகரான உருப்படிகளில் கையிலுள்ள காசு, வங்கி வைப்புக்கள், வங்கி மேலதிகப்பற்றின் தேறிய பெறுமதி என்பன அடங்குகின்றன. ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களில் கடன்பெறல் என்பதன்கீழ் வங்கி மேலதிகப்பற்றுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.8 ஐந்தொகை திகதிக்குப் பிந்திய சம்பவங்கள்

ஐந்தொகை திகதிக்குப் பிந்திய முக்கிய சம்பவங்கள் அனைத்தையும் கவனத்திலெடுத்து நிதிக்கூற்றில் அவசியமான சீராக்கங்களும் வெளிப்படுத்தல்களும் செய்யப்படுகின்றன.

### 2.9 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு அடையாளம் காணப்பட்ட எல்லாப் பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதுடன், தற்போதுள்ளதாக அடையாளம் காணப்பட்டபோதும், தொகையை சரியாக நிச்சயிக்க முடியாத பொறுப்புக்களுக்கு போதியளவு ஏற்பாடு செய்யப்படுகிறது.

### 2.10 ஊ.சே.நிதியம் (EPF) மற்றும் ஊ.ந.பொ.நிதியத்திற்கான (ETF) ஏற்பாடுகள்

ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சபைக்கும் பங்களிப்பு கிடைப்பதற்கு ஊழியர்கள் தகுதியானவர்களாவர். ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் அடிப்படையில் சபையினால் ஊ.சே.நிதியத்திற்கும் ஊ.ந.பொ.நிதியத்திற்கும் முறையே 12%, 3% என்ற அடிப்படையில் பங்களிப்புச் செய்யப்படும்.

### 2.11 வருமானம்

#### 2.11.1 மீண்டெழும் தன்மையிலான ஏற்பாடுகள்

மீண்டெழும் செலவினங்களுக்காக பொதுத் திறைசேரியினால் சபைக்குக் கிடைத்த ஒதுக்கீடுகள் வருமானமாக ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், சபையினால் ஈட்டப்படும் எல்லா வருமானங்களும் வேறு வருமானங்களின்கீழ் வருமானக் கூற்றுக்களுக்கு நேரடியாகவே ஏற்றங்கீகரிக்கப்படுகின்றன.

#### 2.11.2 மூலதன தன்மையிலான ஏற்பாடுகள்

மூலதனச் செலவினங்களுக்காக பொதுத் திறைசேரியினால் சபைக்கு வழங்கப்படும் ஒதுக்கீடுகள் குறித்த செலவுகளை அறிக்கையிடுவதன்மூலம் குறைக்கப்பட்டுள்ளன.

### 2.12 செலவினங்கள்

செலவை விஞ்சிய வருமானத்தைக் கணிப்பிடும்போது சபையை இயக்கிச்செல்வதற்கு செய்யப்பட்ட மீண்டெழும் தன்மையிலான எல்லாச் செலவினங்களும் வருமானத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன.

### 2.13 கையிருப்புப் பண்டங்கள்

கையிருப்புப் பண்டங்கள் கிரயத்திற்கு ஏற்றங்கீகரிக்கப்படுவதுடன் முதலில் உள் வந்தது முதலில் வெளிச்செல்லல் (FIFO) முறையின் கீழ் பெறுமதி மதிப்பிடப்படுகிறது.

### 2.14 மூலதனச் சொத்துக்கள் கொள்ளல்

மூலதனக் கணக்கின் மீதி ரூ.3,205,222 தொகை 2018 ஆம் ஆண்டில் நிலுவையாக உள்ளது. எமது சபையினால் 2018 டிசம்பர் மாதத்தில் Narcotic Trace Detector இயந்திரமொன்றை 17,864.70 யூரோ நாணயத்தைச் செலுத்தி கொள்வனவுசெய்வதற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்தபோதும், மூலதனத் தொகைகள் கிடைக்காத காரணத்தால் நாணயக் கடிதத்தைத் திறக்க முடியவில்லை. அதன் காரணமாக இந்த உருப்படியைக் கொள்வனவுசெய்வதற்கு இவ்வாண்டில் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.15 மீள்மதிப்பீடு

சபையினால் மோட்டார் வாகனங்களும் இராஜகிரியவிலுள்ள தலைமை அலுவலக வளவிலுள்ள காணியும் கட்டிடமும் விலைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| சொத்துக்களின் வகை | மீள்மதிப்பீட்டுத் திகதி | மீள்மதிப்பீட்டுத் தரப்பு | மீள்மதிப்பீட்டுப் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| காணி | 2018-03-28 | மாகாண விலைமதிப்பீட்டாளர், விலைமதிப்பீட்டுத் திணைக்களம் | 365,000,000 |
| கட்டிடங்கள் | 2018-03-28 | மாகாண விலைமதிப்பீட்டாளர், விலைமதிப்பீட்டுத் திணைக்களம் | 81,418,000 |
| மோட்டார் வாகனங்கள் | 19-02-2014 | | |
| WP KR 4875 | | | 4,200,000 |
| WP KF 2801 | | | 2,300,000 |
| 301-9695 | | | 1,600,000 |
| 19-9679 | | | 1,000,000 |
| 64-4315 | | | 1,700,000 |
| 32-4515 | | | 2,000,000 |
| WP NB 1258 | | | 7,000,000 |
| 129-7344 | | | 20,000 |
| WP XC 8708 | | | 135,000 |
| 51-7214 | | | 1,400,000 |
| WP HQ 6503 | | | 35,000 |
| WP HQ 6505 | | | 40,000 |
| WP YU 6932 | | | 350,000 |
| WP YU 6934 | | | 350,000 |
| WP YU 6938 | | | 390,000 |
| WP YU 6933 | | | 375,000 |
| 54-0014 | | | 1,200,000 |
| WP PB 4613 | | | 2,500,000 |
| WP XC 8705 | | | 70,000 |

### 3. கணக்கீட்டுக் கொள்கையை மாற்றுதல்

#### 3.1 பெறுமானத்தேய்வுக் கொள்கை

2016 ஆம் ஆண்டு முதல் கொள்வனவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யும் முறை, கொள்வனவுசெய்த ஆண்டில் முழு ஆண்டுக்கும் பெறுமானத்தேய்வு செய்யும் முறையிலிருந்து கொள்வனவுசெய்த ஆண்டின் நாள் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யும் முறைக்கு மாற்றமடைகிறது.

### 4. காசுப்பாய்ச்சல் கூற்று

நேரில் முறையை உபயோகித்து காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்கு நிகரானவையும் என்ற உருப்படியில் சபையின் வங்கி மீதிகள் உள்ளடங்குகின்றன.

## 12. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

**எனது இல:** எல்ஓஆர்/பி/என்டீடீசிபி/FS19/04 **திகதி:** 2020 யூன் 19 ஆந் திகதி

தவிசாளர்,
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை.

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மேற்போந்த அறிக்கை இத்தோடு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**டப்ளியு.பி.சி.விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள்: 1. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
2. செயலாளர், நிதி அமைச்சு

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

**எனது இல:** எல்ஓஆர்/பி/என்டீடீசிபி/FS19/04 **திகதி:** 2020 யூன் 19 ஆந் திகதி

தவிசாளர்,
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை.

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று உள்ளவாறான நிதிநிலைக் கூற்று, அத்திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, தேறிய சொத்து மாற்றக் கூற்று, அத்திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுக்கமைவாக எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அரசியலமைப்பினது 154(6) ஆம் உறுப்புரைக்கமைவாக எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனது அறிக்கையில் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் எழுகின்ற பாதிப்புக்கள் தவிர்ந்தவிடத்து, சபையின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று உள்ளவாறான நிதிநிலை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு, காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) முற்றாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தபோதும் இன்னும் பயன்படுத்தப்படும் ரூ.160,515,223 கிரயம் கொண்ட நிலையான சொத்துக்கள் குறித்து இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அச்சொத்துக்களை மீள்கணிப்பீடுசெய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் வருமதியானவை, இடர்க் கடன் மற்றும் பண்டிகை முற்பணங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பெறுமானங்களுக்கும் அதற்கு நேரொத்த விரிவான குறிப்புக்களில் காட்டப்பட்டிருந்த பெறுமானங்களுக்கும் இடையில் மொத்தம் ரூ.1,404,005 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வு ஆண்டு இறுதியில் ரூ.480,900 தொங்கல் கணக்கு மீதியொன்றாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தபோதும், அம்மீதியை அடையாளம் கண்டு தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூ.1,782,059 ஆக இருந்த முற்பண மீதிகள் 20 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலமாக அறவிடப்படாதிருந்ததுடன், குறித்த மீதியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) சபையின் ஆய்வுகூடத்தில் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் பொருட்டு பல்வேறு நிறுவனங்களினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த 12 வகைகளைச் சார்ந்த அபாயகரமான போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புடைமையானது, இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுக்கள், கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்புடைமை என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்குமுகமாக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் பொருண்மையானவையும் பொருத்தமானவையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டுத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்து நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து

விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் அவசியமாகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின்பாற்பட்ட பொறுப்பாகும்.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, சபையை தொடர்ச்சியாக பேணிச் செல்லும் ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின்பாற்பட்ட ஒரு பொறுப்பாகும் என்பதுடன், சபையை ஒழிவுக்குட்படுத்த முகாமைத்துவம் கருதுகின்றதாயின் அல்லது வேறு மாற்று நடவடிக்கையொன்று இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாயின் ஒழிய, இடையறா வழியுரிமையின் அடிப்படையின் பேரில் கணக்கு வைத்தலும் சபையின் இடையறா வழியுரிமைக்குரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின்பாற்பட்ட பொறுப்பாகும்.

சபையின் நிதிசார் அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமான பொறுப்பு, ஆளுகைத் தரப்பினரைச் சாரும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவிற்கமைவாக சபையின் ஆண்டுக்குரிய மற்றும் பருவ நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானதாக அமையக்கூடிய விதத்தில் தமது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய உரிய ஏடுகளும் அறிக்கைகளும் பேணி வரப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

முழுதும்அளாவியதாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும், எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்ட உறுதிப்படுத்தலொன்று என்றபோதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது, எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உறுதிப்பாடொன்றாக அமையாது. மோசடிகளும் தவறுகளும் தனியான அல்லது கூட்டான பாதிப்பு காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படலாமென்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது பாதிப்பொன்று ஏற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால், உயர்தொழில்சார் நியாயப்படுத்தலுடனும் உயர்தொழில்சார் ஐயுறவுவாதத்துடனும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்-

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் தோன்றக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் ஆபத்துக்களை அடையாளம் காணும்போதும், மதிப்பீடு செய்யும்போதும் வேளைக்கேற்றவாறான, பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்கு, பொருண்மையான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையானதாகும். பொருண்மையான பிறழ்கூற்றுக்களினால் ஏற்படக்கூடிய பாதிப்பை விட மோசடியொன்றினால் ஏற்படக்கூடிய பாதிப்பு வன்மையானது என்பதுடன் சூழ்ச்சிசெய்தல், போலி ஆவணங்களைப் புனைதல், திட்டமிட்ட

திரித்துக்காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவறவிடுதல் மோசடியொன்று இடம்பெறுவதற்குக் காரணமாக அமையும்.

- வேளைக்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டபோதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதி பற்றிய அபிப்பிராயமொன்றைத் தெரிவிப்பதற்கு கருதப்படவில்லை.

- கையாளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் நியாயபூர்வ தன்மையையும் முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாட்டையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக சபையின் இடையறா வழியுரிமை பற்றிய பொருண்மையான நிச்சமற்றதன்மையொன்று காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறா வழியுரிமை பற்றிய அடிப்படையைப் பயன்படுத்தும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்றதொரு தன்மை காணப்படுவதாக நான் முடிவுசெய்வேனாயின், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இருக்கவில்லையெனில், எனது அபிப்பிராயம் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் இடையறா வழியுரிமை ஒழிவுறலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு, கட்டமைப்பு, உள்ளடக்கம் என்பன மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டதுடன், அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் அடங்கியிருப்பதை மதிப்பிடுதல்.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து ஆளுகைத் தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

## 2. வேறு சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் குறித்த விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன:-

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையில் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான பாதிப்புக்கள் தவிர்ந்தவிடத்து, கணக்காய்வுக்கு அவசியமான அனைத்துத் தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையிலிருந்து தோன்றுகின்றவாறு உரிய நிதிசார் அறிக்கைகள் சபையினால் பேணி வரப்பட்டிருந்தன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவானவையாகும்.
-
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக இவ்வறிக்கையின் 1.2.(ஈ) பந்தி தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் வழங்கப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளினுள் பின்வரும் கூற்றுக்களைத் தெரிவுக்குமளவுக்கு எந்தவொரு விடயமும் எனது கவனத்திற்கு உட்படவில்லை:

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கமைவாக சபையின் நிருவாக சபை உறுப்பினரொருவருக்கு சபையுடன் தொடர்புபட்ட யாதேனுமோர் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது வேறு வகையிலோ பொதுவான வியாபாரச் சூழலுக்கு அப்பாற்பட்ட தொடர்புள்ளமை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கமைவாக பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த யாதேனும் தொடர்புடைய எழுத்திலான சட்டமொன்றுடன் அல்லது சபையின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட பணிப்புகளுடன் முன்பின் முரணான விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

| **சட்டங்கள், விதிகள்/ பணிப்புரைகளுடனான தொடர்பு** | **ஒத்திசையாமை** |
|---|---|
| அ. 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்களின் (சிகிச்சையளிப்பும் புனர்வாழ்வளிப்பும்) பற்றிய சட்டம் | |
| - பிரிவு 7 | சொல்லப்பட்ட பிரிவின் பிரகாரம் மதிப்பீட்டுக் குழாம்கள் (Assessment Panels) நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ஆ. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது நிதிப் பிரமாணக் கோவை : | |
| (i) நிதிப் பிரமாணம் 753(2) | கண்டி சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்தில் சரக்குகள் கிடைத்தமைக்கான சரக்குப் |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | |
|---|---|
| | பெறுகைப் பத்திரங்கள் கோப்பிடப்பட்டிருக்காமை காரணமாக கிடைக்கப் பெற்ற அனைத்து சரக்குகளின் பெறுவனவுகளும் பதியப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 754 | ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் பொருட்பதிவேடு (Inventory Book) சமப்படுத்தப்படல் வேண்டும். அதேபோல், அவ்வப் பொருள் வகை சம்பந்தமான பெறுவனவுகளும் விநியோகிக்கப்பட்டவையும் சேர்க்கப்படல் வேண்டும் என்பதுடன், அதனைத் தொடர்ந்து அவ்வப் பொருள் வகை சம்பந்தமாக "கையிலுள்ள மீதி" அதாவது பெறுவனவுகளின் மொத்தத்திற்கும் விநியோகிக்கப்பட்டவற்றின் மொத்தத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை விநியோகிக்கப்பட்டவற்றின் கீழ் பதிந்து, அதனுடன் கூட்டிக் காண்பித்து குறித்த மீதியை அடுத்த நிதியாண்டுக்கு முன்கொண்டுசெல்ல வேண்டுமென்ற போதும், கண்டி சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்தில் அவ்வாறு செயலாற்றப்பட்டிருக்கவில்லை. |
| இ. 2009 ஏப்ரல் மாதம் 04 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 09/2009, 2009 யூன் மாதம் 17 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 09/2009(I) மற்றும் 2017 ஏப்ரல் மாதம் 19 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 03/2017 | 2016 ஆம் ஆண்டில் காலி சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்தில் பொருத்தி இணைக்கப்பட்ட விரல் அடையாளப் பதிவு இயந்திரத்தில் விரல் அடையாளப் பதிவு சரியான முறையில் பதியப்படுவதற்கான சமிக்ஞை வெளியிடப்பட்டபோதும், இயந்திரத்தினால் வெளியிடப்படும் தரவுகள் பற்றிய அறிக்கைகளை கணினி ஊடாக பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. |
| ஈ. அரசாங்க பெறுகை வழிகாட்டு நெறிகள் 2006: | |
| (i) பிரிவு 5:2:1 (அ) | 12 உருக்கு அலுமாரிகளையும் 12 உருக்கு சிற்றலுமாரிகளையும் கொள்வனவுசெய்வதற்காக விலைக்கேள்வி ஆவணங்களைக் கையேற்கும் திகதிக்குப் பிந்திக் கிடைத்த கூறுவிலைகளையும் கையேற்று மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) பிரிவு 7.8.4 (ஈ) | சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் பயன்பாட்டுக்காக புத்தக இறாக்கைகளையும் (ஏந்தானம்) 12 உருக்கு அலுமாரிகளையும் கொள்வனவுசெய்வதற்கு கேள்விவிலை கோரிய விலைக்கேள்விகளில் கூறுவிலைதாரர்களினால் கையொப்பமிடப்படாத விலைக்கேள்விகள் பாரிய விலகுதலாகக் கருதி |

ஏற்றுக்கொள்ள முடியாதபோதும், சபையினால் கையொப்பமிடப்படாத விலைக்கேள்விகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

(iii) பிரிவு 8.12.3 (அ) — தலங்கம சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்திற்கு புத்தக இறாக்கைகள் கோரப்பட்டிருந்தபோதும், அவற்றின் ரகம், அளவு, உயரம், அகலம், அலகுகள் முதலியன பற்றி குறிப்பிடப்பட்ட விவரக்குறிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கமைய சபையின் தத்துவங்களுக்கும் கடமை பணிகளுக்கும் முன்பின் முரணான விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கமைய பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த சபையின் வளங்கள் சிக்கனமாகவும் விளைத்திறனுடனும் வினைத்திறனுடனும் காலப் பிரிவுகளினுள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைய பெறுகைசெய்து பயன்படுத்தப்பட்டிருக்காமை.

(அ) விவரக்குறிப்பீடுகள் உள்ளிட்ட விலைக்கேள்வி ஆவணங்களின் வரைவைத் தயாரிப்பதும் அவற்றை மீளாய்வுசெய்வதும் பெறுகை அலகொன்றின் (entity) பொறுப்பென்றபோதும், அவ்வாறு செயற்படாமல் பெறுகை முகாமையாளரினால் தேவையான விவரக்குறிப்பீடுகளைத் தீர்மானித்து வழங்குநர்களுக்கு 8 புத்தக இறாக்கைகளையும் 12 உருக்குச் சிற்றலுமாரிகளையும் கொள்வனவுசெய்வதற்கு விலைக்கேள்வி கோரப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஏப்ரல் மாதத்தில் ரூ.3,884,160 பெறுமதிக்கு கொள்வனவுசெய்யப்பட்ட வீடியோ பனல் தொழில்நுட்ப ஆலோசகர் எவருமின்றிய நிலையில் நிறுவப்பட்டிருந்தது. திறக்கப்பட்ட நாள் முதல் இந்த பனல் 3 வருட உத்தரவாத காலத்துள் 6 தடவைகள் பழுதடைந்தன் காரணமாக செயலிழந்திருந்தது. இதன் காரணமாக எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறாமல் பயனற்றுக் கிடந்தது.

(இ) கண்டி, நவதிகன்தய மற்றும் காலி சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் ரூ.612,000 செலவில் கொள்வனவுசெய்யப்பட்ட CCTV கமரா தொகுதிகள் இயங்காத நிலையில் காணப்படுவதுடன், நிலையங்களின் பாதுகாப்புக்கு இன்றியமையாத CCTV கமரா தொகுதிகளைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது புதிய உபகரணமொன்றைப் பொருத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டில் ரூ.3,254,469 தொகை செலவில் கண்டி மற்றும் நவதிகன்தய சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களுக்கு மின்னற்கடத்தி (Lighting Conductor) தொகுதியொன்று பொருத்தப்பட்டிருந்ததுடன், அது உரிய முறையில் இயங்காத நிலையில் காணப்பட்டது. இதன் காரணமாக, மின்னற்கடத்தி நிலையத்தின் உபகரணங்கள் செயலிழந்து காணப்பட்டதோடு, மின்னற்கடத்தித் தொகுதியைப் பொருத்தியதன் நோக்கம் நிறைவேறாமல் இருந்தது.

(உ) தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்கள் ஆய்வுகூடத்திற்கு Narcotic Trace Detector இயந்திரமொன்று ரூ.3,625,360 க்குக் கொள்வனவு

செய்யப்பட்டிருந்தபோதும், அதனைப் பயன்படுத்துவதற்கு அவசியமான அறை வெப்பநிலை, வளி ஈரப்பதன் மட்டம் (Humidity Level) என்பன தயார்செய்யப் பட்டிருக்காமை காரணமாக இயக்க முடியாதநிலையில் பயனற்றுக் கிடந்தது.

**ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்**

(அ) நவதிகன்தய சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்தின் தொழிற்பயிற்சிப் பிரிவுக் கட்டிடத்தின் கூரை திருத்த வேலை 4 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படவில்லை. சபையின் இத்திருத்த வேலைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பதன் காரணமாக அதிக விலையைச் செலுத்தி பெற்றுக்கொண்ட இயந்திரங்கள் தொடர்பிலும் அவை சம்பந்தமாக பயிற்சி பெறும் சேவை பெறுநர்களின் உயிர்கள் தொடர்பிலும் தீவிர ஆபத்தொன்றுள்ளது.

(ஆ) நீண்டகாலமாக போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் நபர்கள் மீண்டும் மீண்டும் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போக்கு குறித்த நிலையங்களின் கோப்புக்களைப் பரிசோதிக்கும்போது அவதானிக்கப்பட்டது. மேலும், நவதிகன்தய சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் 2 அல்லது 2 மாத சிகிச்சைக் காலம் முடிவடைந்த சேவைபெறுநர்கள் ஓராண்டு போன்றதொரு காலப்பகுதிக்குள் மீண்டும் நிலையத்திற்கு சிகிச்சைக்காக வருகைதருவது அவதானிக்கப்பட்டது. அவசியமான கண்காணிப்புச் செயன்முறை உரிய முறையில் அமுல்படுத்தப்படாமை இதற்குக் காரணமாக அமைந்திருந்ததென்பது கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(இ) காலாவதியான ரூ.210,883 பெறுமதியான 12 வகையான இரசாயனப் பதார்த்தங்களை இரண்டாண்டு காலமாக உரிய முறையில் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பலும் தற்காலப் போக்குகளும் பற்றிய ஆய்வு 2016/2017 ஆய்வறிக்கையின் மூலம் போதையூட்டும் ஔடதங்களைப் பயன்படுத்தும் வயதுப் பிரிவுகள், 14 வயதுக்குக் குறைந்தவர்கள் நூற்றுக்கு 13 சதவீதமும், 15-19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் நூற்றுக்கு 16 சதவீதமும், 20-24 வயதுக்கு இடைப்பட்டவர்கள் நூற்றுக்கு 19 சதவீதமும் என்பது தெளிவானது. பரீட்சார்த்த நோக்கம், வேட்கை, பிரச்சினைக்குரிய நிலைமைகள், நண்பர்களின் அழுத்தங்கள், மகிழ்ச்சி, பொழுதுபோக்கு என்ற காரணிகளின் அடிப்படையில் முதலில் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் நபரொருவரின் தொடக்கப் பாவனை வயது, வளரிளம் பராயம் அல்லது அதற்குப் பிந்திய காலமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் போதையூட்டும் ஔடத தடுப்பு, பயிற்சி மற்றும் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களில் குறிப்பிடத்தக்க சதவீதம் பாடசாலை மாணாக்கர்களை இலக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டுமென்றபோதும், இலங்கையின் 10,000க்கும் அதிகமான எண்ணிக்கை கொண்ட பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டு முதல் 2019 டிசம்பர் மாதம் வரையில் 3109 பாடசாலைகள் அன்றேல் நூற்றுக்கு சுமார் 30 சதவீத பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

(உ) போதையூட்டும் ஔடதங்களின் விற்பனை மற்றும் கள்ளக்கடத்தல்கள் சம்பந்தமாக கவனத்திலெடுக்கும்போது பெண்கள் அதில் ஈடுபாடுகொள்ளும் போக்கு உயர்மட்டத்தில் காணப்படுவதால், அவற்றின் விற்பனை தொடர்பில் பெண்களின் பங்களிப்பைக் குறைத்துக்கொள்வதற்கு பெண்களுக்காக வடிவமைக்கப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டுமென்றபோதும்,

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

பெண்களை இலக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் கடந்த 5 ஆண்டு காலத்துள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 08 உதவி உளவளத்துணை ஆலோசனை அலுவலர் பதவிகளுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படாமல் 98/2017 ஆம் இலக்க பணிப்பாளர் சபை அனுமதியின் பேரில் மாத்திரம் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருந்தன.

(எ) உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் 7 பிரதான பணிகளின் கீழ் திட்டமிடப்பட்டிருந்தபோதும், அவற்றில் 2 பணிகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தன. அதாவது, நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் செயலாற்றப்பட்டிருக்கவில்லை. இது தவிர, பணிப்பாளர் சபையினால் வெளிநிலைச் சேவைகள் பிரிவுகளின் கணக்காய்வு நடவடிக்கைகளையும் உட்படுத்துவதென்ற அடிப்படையில் குறித்த திட்டம் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும், அதனையும் நிறைவேற்றியதற்கான சாட்சிகள் இருக்கவில்லை. அதேபோல், 2019 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் உதவிப் பணியாட்டொகுதிக்கு ரூ.1,214,550 தொகை சம்பளங்களாகவும் கொடுப்பனவுகளாகவும் செலுத்தப்பட்டிருந்தபோதும், சபைக்கு உள்ளகக் கணக்காய்வின்போது பயனுறுதிவாய்ந்த பணிகள் நிறைவேறியிருக்கவில்லை.

**டப்ளியு.பீ.சி.விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## 13. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான தவிசாளரின் அவதானிப்புகள்


අන්තරායකර ඖෂධ පාලක ජාතික මණ්ඩලය
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை
National Dangerous Drugs Control Board

ආරක්ෂක අමාත්‍යාංශය
பாதுகாப்பு அமைச்சு
Ministry of Defence


**எனது இல:** NDDCB/IA/CH/AQ/NAO/05/2020 **உமது இல:** එල්ඕආර්/බී/එන්ඩීඩීසීබී/FS/19/04 **திகதி:** 2020.06.12

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்குப் பதிலளித்தல்**

---

பதில்களை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

- **එල්ඕආර්/බී/එන්ඩීඩීසීබී/FS/19/04**

**மருத்துவ நிபுணர் லக்னாத் வெலகெதர**
**தவிசாளர்**

பிரதிகள்: 1. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
2. செயலாளர், நிதி அமைச்சு


383, කෝට්ටේ පාර, රාජගිරිය.
383, கோட்டே வீதி, இராஜகிரிய.
383, Kotte Road, Rajagiriya, Sri Lanka

දුරකථන / தொலைபேசி / Telephone: 011 2868794, 011 2868795, 011 2868796
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: 011 2868791, 011 2868792, 011 2869805
ක්ෂණික ඇමතුම / உடனடி அழைப்பு / Hot Line: 1984
e-mail: mail@nddcb.gov.lk
web: www.nddcb.gov.lk

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். 2020 கணக்கு ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது குறித்த வெளிப்படுத்தலைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஆ) ஐந்தொகையில் கடன்படுநர் மீதியும் பட்டியல்களுக்கும் இடையில் 12,435/- வித்தியாசமொன்று காணப்பட்டதுடன், இது முன்பு பாரிய பெறுமானம் கொண்ட மீதி வித்தியாசமொன்றாகக் காணப்பட்டபோதும், பின்பு மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புகளின் மூலம் மேற்படி பெறுமானம் வரை குறைத்துக் கொள்ள முடிந்தது. எனினும், ஆவணங்களைக் கண்டுபிடிப்பதிலுள்ள சிரமம் காரணமாக இதனை மேலும் பரீட்சிப்புக்கு உட்படுத்த முடியாதுள்ளது என்பதுடன், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக திறைசேரியின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு 2018.12.27 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின்போதும் முடிவெடுக்கப்பட்டது. அதற்கமைய NDDCB/FIN/MIN/2019/11 ஆம் இலக்க, 2019.07.03 ஆந் திகதிய கடிதம் மூலம் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு இவ்வழுக்களை சீராக்கம் செய்வது தொடர்பில் ஆலோசனைகளைக் கோரி கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக இக்கடிதம் 2019.08.22 ஆந் திகதியிட்டு பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனினும், இதுவரை ஆலோசனைகள் கிடைக்கப் பெறவில்லையாதலால், மீண்டும் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ) சில சொத்துக்களை வகுதிகளாகப் பிரிக்கும்போது நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்து வகை அட்டவணைகளில் பதியப்பட்டுள்ள சொத்து வகையுடன் வித்தியாசப்படுவதன் காரணமாக குறித்த சொத்து வகுதிகளில் வித்தியாசங்கள் காணப்படுகின்றதென்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். உதாரணமாக: நிதிக்கூற்றுக்களில் மரத் தளபாடங்கள் என சொத்து வகைப்படுத்தப்பட்டுள்ள உருப்படியொன்று அட்டவணையில் அலுவலக உபகரணங்களாக பதியப்பட்டுள்ளமை. சில சொத்து வகைகளை அட்டவணைகளுடன் சீராக்கம்செய்து இரட்டைப் பதிவு மூலம் இவ்வாண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். எனினும், நிதிக்கூற்றுக்களிலும் சொத்து அட்டவணையிலும் மேலும் காணப்படும் வித்தியாசங்களை சீர்செய்வதற்கு அனைத்துச் சொத்துக்களையும் மீள்கணிப்பீடு செய்து குறித்த வித்தியாசங்களை சீர்செய்யும் நடவடிக்கைகள் தற்போது நிலவும் தொற்றுநோய் நிலைமை காரணமாக தாமதடைந்துள்ளது.

(ஈ) கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீதி, 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டுச் சீராக்கமொன்றின் மூலம் எழுந்த ஒரு மீதியாகும். இதனைத் தீர்ப்பதற்காக சம்பந்தப்பட்ட எல்லாக் கணக்குகளும் பரீட்சிக்கப்பட்டு வருவதுடன், இதுவரையில் கண்டிபிடிக்க முடியாதுள்ளது. அதன் அடிப்படையில், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக திறைசேரியின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு 2018.12.27 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தின்போதும் முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில், NDDCB/FIN/MIN/2019/11 ஆம் இலக்க, 2019.07.03 ஆந் திகதிய கடிதம் மூலம் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு இவ்வழுக்களைச் சீர்செய்வது தொடர்பில் ஆலோசனைகளைக் கோரி கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக இக்கடிதம் 2019.08.22 ஆந் திகதி பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும், இதுவரையில் ஆலோசனைகள் கிடைக்கப்பெறவில்லையாதலால், சபையினால் மீண்டும் கண்காணித்து விசாரணை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ) இந்த முற்பண மீதி தொடர்பில் NDDCB/FIN/MIN/2019/11 ஆம் இலக்க, 2019.07.03 ஆந் திகதிய கடிதம் மூலம் பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்து இவ்வழுக்களைச் சீர்செய்வது தொடர்பில் ஆலோசனை கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், இக்கடிதம் பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொண்டு

நடவடிக்கை எடுப்பதற்காக 2019.08.22 ஆந் திகதிய பொது தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. எனினும், இதுவரையில் ஆலோசனைகள் கிடைக்கப் பெறவில்லையாதலால், மீண்டும் தொடர் கண்காணிப்பை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஊ) ஆய்வுகூடத்தினுள் காணப்படும், ஐயவினாவில் குறிப்பிடப்படும் போதையூட்டும் ஔடதங்கள் பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த மாதிரிப்பொருள்களை வழங்கும்போது அவ்வாறு வழங்கும் தரப்புகளினால் எந்தவொரு பெறுமதியையும் குறித்து அப்போதையூட்டும் ஔடதங்கள் ஆய்வுகூடத்திற்கு வழங்கப்படுவதில்லை.

அதேபோல், போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமாக எந்தவொரு சட்டத்தினாலும் உள்ளடக்கப்படுவதில்லை என்பதுடன், நிறை அளவின் அடிப்படையில் தண்டனையொன்றுக்கும் தண்டமொன்றுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக: 1984 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நச்சுத்தன்மைவாய்ந்த அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்த) கட்டளைச் சட்டம்

மேலும், இப்போதையூட்டும் ஔடதங்களின் பெறுமதியானது அதனை உபயோகிப்போருக்கென்றே வியாபாரிகளினால் உருவாக்கப்பட்டுள்ள சட்டத்திற்குட்படாத விலைகளாக இருப்பதுடன், அவ்வாறு விலைகளை மதிப்பீடு செய்யும்போது விலைமதிப்பீட்டுப் பெறுமதியொன்றையும் குறிப்பிட முடியாத பதார்த்தங்களாகும்.

ஆதலால், குறித்த போதையூட்டும் ஔடத இருப்பின் பெறுமதியை விலைமதிப்பீடு செய்துகொள்ள முடியாதென்பதை தயவுடன் அறிவிக்க விரும்புகின்றேன்.

மேலும், குறித்த போதையூட்டும் ஔடதங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட முடியாதுள்ளமைக்குக் காரணம், இதன் சட்ட ரீதியான பணிச்சட்டமொன்று இல்லாதிருப்பதனாலாகும்.

(எ) ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகளின் சிபார்சுகள் அடங்கிய அறிக்கை - *பின்னிணைப்பு 01* உடன் சமர்ப்பிக்கின்றேன்.

## 2. சட்டங்கள், விதிகள்/ பணிப்புரைகளுடனான தொடர்பு – ஒத்திசையாமை

### (அ) 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்களின் (சிகிச்சையளிப்பும் புனர்வாழ்வளிப்பும்) பற்றிய சட்டம்

#### i. பிரிவு 7

2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்களின் (சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு) பற்றிய சட்டத்தின் பிரிவு 7(1) இன் கீழ் மதிப்பீட்டுக் குழாம்கள் (Assessment Panels) அமைச்சரினால் நியமிக்கப்படலாம். ஆதலால், அது தொடர்பில் நேரடியாக தலையீடு செய்வதற்கான வாய்ப்பு இக்குழாமிற்கு இல்லை என்பதை தயவுடன் சுட்டிக் காட்டுகின்றேன்.

இருப்பினும், சட்டத்தின் பிரிவு 7(2) இன் கீழ் நியமிக்கப்பட வேண்டிய மூன்று பேருக்கு மேற்படாதோரைக்கொண்டதாக இருக்க வேண்டிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் பெயரிடப்பட வேண்டிய மதிப்பீட்டுக் குழாமிற்கு குறித்த சட்டத்தினாலும் 1653/19 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானியின் மூலமும் சாட்டப்பட்டுள்ள பணிகளை இச் சபையின் 3 புலனாய்வு அலுவலர்கள் மூலம் கவனித்து பணிப்பாளர் (பணியமர்வுசெய்யப்பட் சிகிச்சையளிப்பு நிலையம்) மூலம் சபைக்கு அறிக்கையிடப்படும் என்பதையும், இச்சட்டத்தில் ஏலவே உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

**ii. பிரிவு 10**

இச்சபையினால் தொடக்கத்தில் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட்டது, இவ்வாறான நிலையங்களை நடாத்திச் செல்பவர்களுக்கான மாதிரிப் வடிவமொன்றாக/ முறைமையொன்றாக/ உதவியளிப்பதாகவே. இருப்பினும், தற்போது வேகமாகப் பரவிவரும் செயற்கையான போதையூட்டும் ஔடதங்கள் முதலியன காரணமாக சிகிச்சையளிப்பு நிலையங்களின் இயல்திறனை அதிகரித்து அது தொடர்பில் சபையும் செயற்படுவதற்குத் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, நவதிகன்த சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலைய வளவினுள் ஆயிரம் (1,000) சேவைபெறுநர்களுக்குச் சிகிச்சை அளிக்கக்கூடிய விதத்தில் புதியதொரு கட்டிடத்தையும் நிர்மாணித்து, சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையமொன்றாக முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. *(பின்னிணைப்பு 2)*

அதேபோல், இந்நிலையத்தை 99 ஆண்டு/ நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. *(பின்னிணைப்பு 3)*

மேலும், கந்தவத்த மற்றும் மீத்திரிகல ஆகிய இடங்களிலுள்ள, ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்களைப் பராமரித்து வருவதற்கும் புனர்வாழ்வளிப்பதற்குமான நிலையங்களை இச்சபைக்கு கையகப்படுத்தி நீதிமன்றத்தினால் ஆற்றுப்படுத்தப்படும் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்களுக்கென்றே ஒதுக்குவதற்கு முன்மொழிந்து அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் தயவுடன் அறியத் தருகின்றேன். *(பின்னிணைப்பு 4)*

**(ஆ)**

**i. நிதிப் பிரமாணம் 753(2)**

கண்டி நிலையத்திற்கு பொருள்கள் கிடைத்தவை சம்பந்தமான கோப்புகளை உரிய முறையில் பராமரித்து வருமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் முன்னேற்றம் குறித்தும் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**ii. நிதிப் பிரமாணம் 754**

ஏற்பட்டுள்ள வழுக்கள் சம்பந்தமாக எடுத்து விளக்கி மீண்டும் அவ்வாறான வழுக்கள் ஏற்படாதவாறு செயலாற்றப்பட்டுள்ளது.

**(இ)** விரல் அடையாளப் பதிவு இயந்திரத்தில் கோளாறுகள் காணப்படுகின்றதா என்பதை மீண்டும் பரிசோதித்துப் பார்ப்பதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கோளாறுகள் காணப்படுமாயின், அதனைத் திருத்தி துரிதமாக பாவனைக்கு எடுக்கக்கூடிய வகையில் தயார் செய்யப்படவுள்ளது.

**(ஈ) 2006 அரசாங்கப் பெறுகை வழிகாட்டுநெறிகள்**

**i. பிரிவு 5.2.1 (அ)**

சபைக்குக் கிடைக்கும் கூறுவிலைப் பத்திரங்கள் பொதுவான முறை ஊடாக கணக்குப் பிரிவுக்கு கிடைப்பதன் காரணமாகவே இத்தவறு ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் விலைக்கேள்விப் பத்திரங்கள் நேரடியாகவே தாமதமின்றி பெறுகைப் பிரிவுக்கு கிடைக்கக்கூடிய விதத்தில் ஒரு முறைமை தயாரிக்கப்படும் என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன். மேலும், தற்போது எந்தவொரு காரணத்தின் பேரிலும் பெறுகைப் பிரிவுக்கு தாமதித்துக் கிடைக்கும் விலைக்கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படுகின்ற என்பதையும் மேலும் அறிவிக்கின்றேன்.

**ii. பிரிவு 7.8.4 (ஈ)**

எதிர்காலத்தில் விலைக்கேள்விப் பத்திரங்களை மதிப்பிடும்போது, கையொப்பமிடப்படாத அனைத்து விலைக்கேள்விப் பத்திரங்களையும் பாரிய விலகல்களாகக் கருதி நிராகரிக்கப்பட்டவையாக புறமொதுக்கப்படும் என்பதை அறிவிக்கின்றேன்.

**iii. பிரிவு 8.12.3 (அ)**

நூலகத்திற்கு கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்ட புத்தக இறாக்கைகளுக்கு உரிய விவரக் குறிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. தலங்கம நிலையம் பொருத்தமான விவரக் குறிப்பீடுகளை அனுப்பிவைக்கவில்லையென தொலைபேசி வாயிலாக பெறுகைப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டதன் பின்பு, தலங்கல நிலையத்தின் தேவை குறித்து அறிவித்து அவ்வாறான பொருத்தமான விவரக் குறிப்பீடுகள் உள்ளனவா என்பது குறித்து விசாரித்து தொலைபேசி வாயிலாக நூலகத்திற்கு கொள்வனவு செய்வதற்குள்ள விவரக்குறிப்பீட்டை அறிவித்ததன் பின்பு அதற்காக இணக்கப்பாட்டை வெளியிட்டமையால், அவ்விவரக்குறிப்பீடுகளுக்கு இணங்க தலங்கம நிலையத்திற்கும் புத்தக இறாக்கைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஏ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த சபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயன்கூர் விதத்திலும், காலப்பகுதியினுள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமையவும் பெறுகை செய்து பயன்படுத்தப்பட்டிருக்காமை.**

**(அ)** பெறுகை வழிகாட்டுநெறிகளின் 5.2.1(அ) பெறுகை வழிகாட்டுநெறிக் கைந்நூலின் பிரிவு 5.6 இன் பிரகாரம் சபையினால் தேவையின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன், மேற்படி விடயத்தில் குறிப்பிடப்படும் பெறுகைகளுக்காக பெறுகை முகாமையாளரினால் ஏற்புடைய விவரக்குறிப்பீடுகள் தேவையுள்ள தரப்புக்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(ஆ)** LED வீடியோ பனல் சம்பந்தமாக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தகவல் முறைமை முகாமையாளர் அடங்கலான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றினால் (TEC) விவரக்குறிப்பீடுகள் (Specifications) தயாரிக்கப்பட்டு பெறுகைக் குழுவின் அனுமதியுடன் பெறுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அது நிறுவப்பட்டுள்ளதுடன், நிறுவப்பட்டதன் பின்பும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தகவல் முறைமை முகாமையாளரினால் வீடியோ பனலைப் பரீட்சித்து சிபார்சு செய்யப்பட்டுள்ளது *(பின்னிணைப்பு 5).* இதற்கு மூன்றாண்டுகள் உத்தரவாத காலம் காணப்பட்டதுடன், அக்காலப்பகுதில் கோளாறுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் குறித்த நிறுவனத்தினால் கட்டணம் அறவிடப்படாமல் அதன் பழுதுபார்ப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒப்பந்த காலம் பிந்தி பின்னர் ஏற்பட்ட கோளாறுகள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்காமையால் பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது குறித்த LED வீடியோ பனல் செயலிழந்து இருக்கின்றமையால், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்திலிருந்து தொழில்நுட்ப அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளதுடன் *(பின்னிணைப்பு 6)* அவ்வறிக்கை மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. *(பின்னிணைப்பு 7)* அதன் மூலப் பிரதியைக் கோரி நினைவூட்டல் கடிதமொன்று 2020.06.11 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. *(பின்னிணைப்பு 8)* தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவின் மூலம் இது சம்பந்தமாக தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு ஆவண செய்யப்பட்டுள்ளது.

**(இ)** இம்மாதம் முகாமையாளர்களின் கூட்டத்தின்போது CCTV கமரா தொகுதியின் தேவை குறித்து கலந்துரையாடி தேவையுள்ள நிலையங்களுக்கு CCTV கமரா தொகுதியைப் பொருத்துவது பற்றி தீர்மானிக்கப்படும். அதன்படி எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**(ஈ)** மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு ஒட்ட விவரக்குறிப்பேடொன்றையும் எரிபொருள் செலவுப் பதிவேடொன்றையும் தயாரித்து தற்போது அமுல்படுத்தப்படுகின்றதென்பதை அறிவிப்பதுடன், அதற்கு முன்னர் செலவான எரிபொருள் அளவை எரிபொருள் கட்டளை ஏட்டிலிருந்தும் மின்பிறப்பாக்கி இயங்கிய மணித்தியால அளவிலிருந்தும் அதன் நினைவகச் சில்லை (Memory

Chip) பரீட்சிப்பதன் மூலம் கணிப்பிட்டுக்கொள்ள முடியுமென்பதையும் குறிப்பிடுகின்றேன்.

**(உ)** இந்த மின்னற்கடத்தி (Lighting Conductor) தொகுதி 2017.01.03 ஆந் திகதி பொருத்தப்பட்டது. 2020.05.09 ஆந் திகதி கண்டி நிலையத்தின் முகாமையாளரினால் இடி மின்னலுடன்கூடிய மழைக் காலநிலை நிலவிய ஒரு நாளில் ஏற்பட்ட கோளாறு பற்றி வாய்மொழி மூலம் அறிக்கையிடப்பட்டது. அதற்கமைய முகவராண்மைக்கு தொலைபேசி வாயிலாக அறிவித்து எழுத்து மூலம் 2020.05.13 ஆந் திகதி *(பின்னிணைப்பு 09)* இது பற்றி அறிவிக்கப்பட்டது. நிலையத்தின் முகாமையாளரினால் 2020.05.14 ஆந் திகதி இது பற்றி எழுத்து மூலமும் அறிக்கையிடப்பட்டது. *(பின்னிணைப்பு 10)* நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் மற்றும் ஊடரங்குச்சட்ட நிலைமை காரணமாக கண்டி நிலையத்திற்கு முகவராண்மையால் செல்ல முடியாமலிருந்தது. 2020.05.21 ஆந் திகதி முகவராண்மையினால் கண்டி நிலையத்தின் மின்னற்கடத்தி தொகுதியைப் பரீட்சித்து 2020.05.22 ஆந் திகதி அறிக்கையொன்று தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது *(பின்னிணைப்பு 11).* அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரெலிகொம் தொலைபேசி இணைப்புடன் பொருத்தப்பட்டிருந்த மின்னற்கடத்திக் கருவி தொலைபேசிக் கோளாறொன்றைச் சீர்செய்யும்போது ரெலிகொம் நிறுவனத்தினால் நீக்கப்பட்டிருந்தமையால், மின்னல் தாக்கம் ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சு தேவையாக இருந்ததன்போதும், அதன் தொழில்நுட்ப அங்கத்தவரான வளிமண்டலவியல் திணைக்களத்தின் பொறியியல் அலுவலரை 2020.06.11 ஆந் திகதியே தொடர்புபடுத்திக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அந்நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனை வழமைநிலைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அறியத் தருகின்றேன்.

நவதிகன்த நிலையத்தின் மின்னற் கடத்தி செயலிழந்ததை அடுத்து அதனைப் பரீட்சிப்பதற்கு முகவராண்மையிலிருந்தும் தொழில்நுட்ப அங்கத்தவரான வளிமண்டலவியல் திணைக்களத்தின் பொறியியல் அலுவலர் பரீட்சிப்பதற்குச் சென்றார். அதிவலு இலத்திரனியல் கடத்திக் கோபுரம் இருப்பதன் காரணமாக, மின்னலைத் தாங்கும் ஆற்றல் அதிகமாக உள்ளதென்ற விடயம் அச்சந்தர்ப்பத்தில் அவதானிக்கப்பட்டது. அதற்காக மின்னற்கடத்தி இயந்திரத்தின் இயலாற்றலை அதிகரிப்பதற்கு புதிதாக இணைக்கப்பட வேண்டிய உதிரிப்பாகங்கள் சேர்க்கப்பட வேண்டுமென முகவராண்மையினால் விலை மதிப்பீடொன்றின் மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. குறித்த மதிப்பீடு மேற்கொண்டு நடவடிக்கைக்காக பெறுகை நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**(ஊ)** தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்கள் ஆய்வுகூடத்திற்கு இந்த இயந்திரத்தைப் பொருத்தும்போது குறித்த இயந்திரம் இயங்குவதற்குத் தேவைப்படும் அறை வெப்பநிலை காணப்பட்டதுடன், அங்கு காணப்படும் காற்றுச்சீராக்கி இயந்திரம் செயலிழந்திருப்பதன் காரணமாகவே தற்போது இந்த இயந்திரம் இயங்காமல் உள்ளது.

அதற்கமைய, குறித்த காற்றுச்சீராக்கி இயந்திரத்தைப் பராமரிக்கும் நிறுவனத்தைக் கொண்டு பரீட்சித்த பின் அந்த இயந்திரத்தை திருத்த முடியாதென்றும், அதற்கு புதிய இயந்திரமொன்றை பொருத்த வேண்டும் என்றும் அவர்கள் தெரித்ததனர். ஆதலால், அவ்வாறு மீண்டும் புதியதொரு காற்றுச்சீராக்கி இயந்திரத்தைப் பொருத்த வேண்டுமா என்பது பற்றிய தொழில்நுட்ப மதிப்பீட்டை மேற்கொண்டு குறித்த பெறுகைக்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

**(அ)** இத்திருத்த வேலை சம்பந்தமான பெறுகைச் செயன்முறையை முடிவுறுத்தி விலைக்கேள்வி வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 90% வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

**(ஆ)** சிகிச்சைக் காலத்தை வெகு சிறப்பாகப் பூர்த்திசெய்த போதிலும் அவர்களின் வாழ்வுச் சூழல்களுடன் தொடர்புற்று இருக்கும்போது போதையூட்டும் ஔடதங்களைப் பயன்படுத்தும் நண்பர்களும், போதையூட்டும் ஔடதங்களை விற்பவர்களும் பல்வேறு உபாயங்களைக் கையாண்டு அவர்களை மீண்டும் சிக்க வைப்பதே இதற்குரிய காரணமாகும். கடத்தல்காரர்

ஒருவருக்கு ஆளொருவரை புதிதாக போதையூட்டும் ஔடதங்களுக்கு பழக்குவதை விட பாவனையை நிறுத்திய ஒருவருக்கு பழக்குவது எளிதானதாகும்.

இந்நிலைமையில் எமது பிற்பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றபோதும், சூழற் காரணிகள் அதற்குத் தடையாக அமைந்து பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதைக் குறிப்பிடலாம்.

மேலும், நிலையத்தில் சிகிச்சை பெறும்போது சேவைபெறுநர்களுக்கு பிற்பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்தும் அவர்கள் மீண்டும் நிலையத்திலிருந்து வெளியேறும்போது, சேவைபெறுநர்களின் பாதுகாவலர்களுக்கும் இப்பிற்பாதுகாப்புச் செயன்முறை பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விளக்கமளிப்பதுடன், இப்பிற்பாதுகாப்புச் செயன்முறை வெற்றியடைவதற்கெனில், சம்பந்தப்பட்ட சேவைபெறுநர்களின் பாதுகாவலர்களும் அதற்கு முனைப்பான பங்களிப்பொன்றை வழங்க வேண்டும்.

போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்கள் மீண்டும் அவற்றை உபயோகித்து, மீண்டும் மீண்டும் சிகிச்சைகளுக்கு வருவது இலங்கையிலும் உலகிலும் உள்ள நிலையங்களில் காணக்கூடிய ஒரு நிலைமையாகும். அவ்வாறு மீண்டும் அடிமைப்பட்டு வதிவிட சிகிச்சையை எதிர்பார்த்து நிறுவனத்திற்கு வரும் சேவைபெறுநர்களைப் பொறுப்பேற்பது சபையின் சிகிச்சை நிலையங்களின் பொறுப்பாகும்.

**(இ)** நவதிகன்த நிலையத்தின் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு காலத்தைப் பூர்த்திசெய்யும் அனைத்து சேவைபெறுநர்களுக்கும் பிற்பாதுகாப்புப் பத்திரத்தை வழங்கி அவர்களுக்கு அதற்காக பங்கேற்பதற்கு ஆலோசனை வழங்கப்படுவதுடன், அதற்கு சேவைபெறுநர்களின் பங்கேற்பு சாதகமான மட்டத்தில் இல்லை. குறிப்பாக, இந்நிகழ்ச்சித்திட்டம் பலவந்தமாக செய்ய முடியாதது என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன்.

**(ஈ)** ஆய்வுகூடத்தினுள் காணப்படும், ஐயவினாவில் குறிப்பிடப்படும் போதையூட்டும் ஔடதங்கள் பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த மாதிரிப்பொருள்களை வழங்கும்போது அவ்வாறு வழங்கும் தரப்புகளினால் எந்தவொரு பெறுமதியையும் குறித்து அப்போதையூட்டும் ஔடதங்கள் ஆய்வுகூடத்திற்கு வழங்கப்படுவதில்லை.

அதேபோல், போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமாக எந்தவொரு சட்டத்தினாலும் உள்ளடக்கப்படுவதில்லை என்பதுடன், நிறை அளவின் அடிப்படையில் தண்டனையொன்றுக்கும் தண்டமொன்றுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக: 1984 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நச்சுத்தன்மைவாய்ந்த அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்த) கட்டளைச் சட்டம்

மேலும், இப்போதையூட்டும் ஔடதங்களின் பெறுமதியானது அதனை உபயோகிப்போருக்கென்றே வியாபாரிகளினால் உருவாக்கப்பட்டுள்ள சட்டத்திற்குட்படாத விலைகளாக இருப்பதுடன், அவ்வாறு விலைகளை மதிப்பீடு செய்யும்போது விலைமதிப்பீட்டுப் பெறுமதியொன்றையும் குறிப்பிட முடியாத பதார்த்தங்களாகும்.

ஆதலால், குறித்த போதையூட்டும் ஔடத இருப்பின் பெறுமதியை விலைமதிப்பீடு செய்துகொள்ள முடியாதென்பதை தயவுடன் அறிவிக்க விரும்புகின்றேன்.

மேலும், குறித்த போதையூட்டும் ஔடதங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட முடியாதுள்ளமைக்குக் காரணம், இதன் சட்ட ரீதியான பணிச்சட்டமொன்று இல்லாதிருப்பதனாலாகும்.

**(உ)** இக்காலாவதியான இரசாயனப் பதார்த்தங்களை அகற்றுவதற்கு ஏலவே விலைக்கேள்வி கோரப்பட்டுள்ளது. கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அந்நடவடிக்கைகள் தாமதமடைந்திருப்பதுடன், துரிதமாக அவ்வாறு அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட உள்ளது.

**(ஊ)** கோப்புகளில் வாராந்த சிகிச்சைக் குறிப்புகள் பற்றிய சிகிச்சையளிப்புக் கூட்டங்களின்போதும், கோப்புகளைப் பரீட்சிக்கும்போதும், பணியாட்குழுக் கூட்டங்களின்போதும் தொடராக விழிப்பூட்டலை மேற்கொள்வதுடன், தற்போது அந்நிலைமை சிறப்பான முறையில் வளர்ச்சியடைந்துள்ளது.

**(எ)** தொடர் கண்காணிப்புச் செயன்முறையை உரிய முறையில் அமுல்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றபோதும், தொடர் கண்காணிப்புச் செயன்முறைக்காக பங்கேற்பதற்கு அந்தந்த சேவைபெறுநர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுடன், போதையூட்டும் ஔடதங்களை உபயோகிக்கும் ஆளொருர் சுயவிருப்பத்தின் அடிப்படையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதும் பிற்காப்பு நடவடிக்கைக்காக பங்கேற்பதும் அவரது விருப்பத்தின் அடிப்படையில் இடம்பெறும். சிகிச்சை பெற்றுவரும் காலத்தில் சேவைபெறுநருக்கு பிற்காப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவம் எடுத்து விளக்கப்படுவதுடன், அதன்படி பிற்காப்பு நடவடிக்கைகளுக்கு வருகைதருவது அவரது பொறுப்பாக இருக்கும்.

அதேபோல், 20 ஆண்டுகளுக்கும் கூடுதலாக போதையூட்டும் ஔடதங்களை உபயோகித்து, அதிலிருந்து விடுபட்டிருக்கும் சேவைபெறுநர்களும் நிலையத்தின் பிற்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் சந்திக்கின்றனர் என்பதையும் அறியத் தருவதுடன், உபயோகிப்பதிலிருந்து விடுவிட்டிருப்பது ஆளுக்காள் மாற்றமானது என்பதையும் அறிவிக்கின்றேன்.

**மேற்கோள் காட்டல்:**

''தொழில்சார் போதையூட்டும் ஔடத ஆலோசகர்களுக்கான உடலியல் மற்றும் மருந்தியல்'' பாடவிதானம் 01 நூலில் அடிமைப்படுதல் என்பது நீண்டநாள் நீடிக்கக்கூடிய, மீண்டும் மீண்டும் ஏற்படக்கூடிய, கட்டுப்படுத்துவது சிரமமானதாக இருக்கும், ஊறுவிளைவிக்கும் தன்மையை அறிந்துகொண்டே அடிக்கடி தூண்டப்படக்கூடியதும் தடுப்பது சிரமமானதுமான மூளை சார்ந்த ஓர் உபாதையாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

**(ஏ)** தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் பாடசாலை மாணாக்கர்களை ஆபத்தான நடத்தைகளின்பால் தூண்டக்கூடிய உளவியல் காரணிகளை விளித்து போதையூட்டும் ஔடத பாவனையைக் குறைப்பதற்காக சாட்சிகளின் மீதமைந்த விஞ்ஞான ரீதியான, பண்புத்தரமான நிகழ்ச்சித்திட்டங்கள் முடுக்கி விடப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டில் பிரிவு வசம் மனித மற்றும் பௌதிக வளப் பற்றாக்குறை காணப்பட்டபோதும், 137 நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக சுமார் 21,605 மாணாக்கர்களுக்கு விழிப்புணர்வூட்ட முடிந்தது. அதனைத் தொடர்ந்து 2014 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து குறிப்பிடத்தக்கதொரு மனித வளம் இப்பிரிவிற்குக் கிடைத்ததுடன், நிகழ்ச்சித்திட்டங்களின் படிமுறையான வளர்ச்சியொன்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் வருடாந்தம் மேற்கொள்ளப்படவிருந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 500 என்ற இலக்கைத் தாண்டி 630 பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது.

எனினும், 2019 ஆம் ஆண்டின் இலக்கிட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை நோக்கி நகர முடியாமல் இருந்தது. உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க ஒரு காலம் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமையும், பாதுகாப்புக் காரணங்களின் பேரில் வெளிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் பாடசாலைக்குள் செல்வதற்கு இடமளிக்கப்படாமையும் காரணமாக நிகழ்ச்சித் திட்டங்களின் அளவு குறைவடைந்தது. அதேபோல், பாடசாலை பாடவிதானத்தைப் பூர்த்தி செய்வதற்கு பாடசாலைக் காலம் தேவைப்பட்டமையால், நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பாடசாலையினால் வழங்கப்பட்ட வாய்ப்புகளும் குறைவடைந்தது.

எனினும், 2015–2018 வரையான காலப்பகுதியினுள் வருடாந்த இலக்குகளைத் தாண்டிச்செல்ல தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது.

(அதற்குரிய புள்ளிவிவரத் தரவுகள் கீழ்த் தரப்பட்டுள்ளன.)

2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் நடாத்தப்பட்ட பாடசாலை போதையூட்டும் தடுப்புக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையும் பங்குபற்றியவர்களின் எண்ணிக்கையும் (சபையின் ஆண்டறிக்கைத் தரவுகளுக்கமைய)

| | **ஆண்டு** | **நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்குபற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01 | 2013 | 137 | 21,605 |
| 02 | 2014 | 315 | 70,300 |
| 03 | 2015 | 564 | 99,950 |
| 04 | 2016 | 607 | 120,876 |
| 05 | 2017 | 614 | 126,456 |
| 06 | 2018 | 670 | 121,536 |
| 07 | 2019 | 390 | 79,863 |

எனினும், நாடு தழுவியதாகக் காணப்படும் 10,000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையான பாடசாலைகளை உள்ளடக்குவதற்கு அவசியமான மனித வளம் எமது பிரிவில் காணப்படவில்லையாதலால், அந்த இலக்கை அடைந்துகொள்ள முடியாதுள்ளது. எனினும், பாடசாலை ஆசிரியர்களையும் நேர்வரிசை நிறுவனங்களினதும் அலுவலர்களைப் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக அந்நிலைக்கு ஓரளவு சித்திகரமாக பதிலளிக்க முடிந்துள்ளது. மனித வளம் நாடளாவிய ரீதியில் காணப்படும் 16 பிரிவுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருப்பதன் காரணமாக, நடைமுறையில் மேற்படி இலக்கை அடைந்துகொள்வது சிரமமானதாக இருந்தது என்பதையும் குறிப்பிடுகின்றோம்.

**(ஓ)** இலங்கையின் நியதிச்சட்டம் மற்றும் சர்வதேச சமவாயங்களுக்கு அமைவாக போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தின் பரம்பலைக் குறைப்பதற்காகவும், போதையூட்டும் ஔடதங்கள் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைப்பதற்காகவும் நிறுவனத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு, பின்வரும் 16 துறைகளின் கீழ் நாடளாவிய ரீதியில் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கின்றது:

1. பாடசாலைப் பிள்ளைகளுக்கான தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
2. சர்வதேச பாடசாலைப் பிள்ளைகளுக்கான தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
3. தொழிற்பயிற்சி மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணாக்கர்களுக்கான தடுப்புக் கல்வி மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்
4. முன்சிறுவர் பராய அபிவிருத்தி மற்றும் போதையூட்டும் ஔடத தடுப்புக்காக பெற்றோரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் - பாடசாலை மாணாக்கர்களுக்கான தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
5. பல்கலைக்கழக மாணாக்கர்களின் போதையூட்டும் ஔடத கல்வி மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்
6. அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்குமான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
7. அரச அலுவலர்களுக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
8. சுகாதாரத் துறை அலுவலர்களுக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
9. தோட்டத்துறை சார்ந்த மக்களுக்கான போதைத் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
10. சட்ட வினைப்படுத்துகை அலுவலர்களை இலக்காகக்கொண்டு அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்
11. சமுதாயத்தவரை இலக்காகக்கொண்டு அமுல்படுத்தப்பட்ட தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
12. பொது மக்களுக்கான கண்காட்சிகள்
13. இளம் தலைவர்களை பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் (TOT) நிகழ்ச்சித்திட்டங்கள்
14. ஆசிரியர்களை போதையூட்டும் ஔடத தடுப்பிற்கான பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

15. பாரிய வேலைத்தலங்களின் ஊழியர்களுக்கான போதையூட்டும் ஔடத தடுப்புக் கல்வி
16. தனி மனிதர்களுக்கும் குழுக்களுக்குமான உளவளத் துணை

மேற்குறிப்பிட்ட 16 துறைகளில் மகளிர் பங்கேற்பு அதிகமுள்ள துறைகளாக பெற்றோர்களுக்கு முன் சிறுவர் பராய அபிவிருத்தி பற்றிய தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், சமுதாயத்தவருக்கான நிகழ்ச்சித்திட்டங்கள், பெருந்தோட்டத் துறையில் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பாரிய வேலைத்தலங்களுக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை அறிமுகப்படுத்தலாம். அவற்றின் மூலம் போதையூட்டும் ஔடத பாவனை, விற்பனை மற்றும் கடத்தல் விடயத்தில் மகளிரின் பங்களிப்பைக் குறைத்தல் என்ற விடயம் உள்ளடங்கக்கூடிய விதத்தில் விடயங்கள் குறித்து அலசப்படுகின்றது. இது தவிர ஏனைய துறைகள் ஊடாகவும் தொடர்புபடும் மகளிர் சமூகத்தை நோக்காகக்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் முடுக்கிவிடப்படுகின்றன.

## (ஔ) போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகளின் பரம்பலும், வருடாந்த கைதுகளின் வளர்ச்சியும்

**1.** இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய புள்ளிவிவரங்களைப் பகுப்பாய்வு செய்யும்போது காலவோட்டத்தில் ஒவ்வொரு போதையூட்டும் ஔடத வகை சம்பந்தமான கைதுகளின்போதும் புள்ளிவிவரப் பெறுமதியில் துரித வளர்ச்சியொன்றை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. **போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் வருடாந்தம் அதிகரிப்பதை மாத்திரம் அடிப்படையாகக்கொண்டு போதையூட்டும் ஔடதங்களை உபயோகிக்கும் ஆட்கள் படிமுறையாக அதிகரித்துள்ளனர் என்ற முடிவுக்கு வர முடியாது.** அதற்குரிய காரணங்கள் கீழ் தரப்பட்டுள்ளன:

**2.** ஆண்டுதோறும் கைதுசெய்யப்படுதல் அதிகரிப்பதன் மீது சட்டவினைப்படுத்துகைப் பிரிவுகளினால் போதையூட்டும் ஔடத கடத்தலுக்கு எதிரான சட்டவினைப்படுத்துகையின் வினைத்திறனும் பாதிப்புச் செலுத்தும். உதாரணமாக 2017 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2018 ஆம் ஆண்டில் கைதுகள் அதிகரித்துள்ளபோதும், 2019 ஆம் ஆண்டின் குறித்த பெறுமானம் 2018 ஆம் ஆண்டை விடக் குறைந்த பெறுமானத்தைக் கொண்டுள்ளது. குறித்த ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்ட போதையூட்டும் ஔடத சட்ட வினைப்படுத்தல் பற்றிய சிறப்பான நிகழ்ச்சித்திட்டங்கள் இதன் மீது பாதிப்புச் செலுத்தியுள்ளது.

அட்டவணை இல. 01 - 2015-2019 ஆண்டு வரை சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களினால் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த தவறுகள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை

| ஆண்டு | கைதானோர் எண்ணிக்கை |
|---|---|
| 2015 | 82,482 |
| 2016 | 79,378 |
| 2017 | 81,156 |
| 2018 | 98,752 |
| 2019 | 89,321 |

*மூலம்: பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் பணியகத்தின் வருடாந்தத் தரவுகள்*

**3.** போதையூட்டும் ஔடதங்களை உபயோகிக்கும் நபர்கள் மீண்டும் மீண்டும் கைதாகும் போக்கு காணப்படுவதால், கைதுசெய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை அடிப்படையில் போதையூட்டும் ஔடதங்களை உபயோகிக்கும் சனத்தொகை பற்றி முடிவுக்கு வர முடியாது. தொடர்ந்துவரும் இரண்டு ஆண்டுகளின் கைதுகள் பற்றிய தரவுகளைப் பகுப்பாய்வுசெய்யும்போது குறித்த சதவீதமான ஆட்கள் இரண்டாண்டுகளிலும் கைதாகும் சந்தர்ப்பங்களைக் காண முடிகிறது.

**4.** போதையூட்டும் ஔடதங்களை உபயோகிக்கும் ஆட்களை மதிப்பீடுசெய்யும்போது கைது செய்யப்படும் எண்ணிக்கையை மாத்திரம் உபயோகிக்க முடியாது. அதற்கு போதையூட்டும் ஔடதங்களை உபயோகிக்கும் ஆட்கள் தொடர்பில் செய்யப்பட்ட மாதிரி அளவைகள், தற்போது காணப்படும் தரவுத் தளங்கள் மற்றும் சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படுதல் போன்ற அளவுகோல்களுக்குரிய தரவுகள் போன்ற பலவின மூலங்களை உபயோகித்தல் வேண்டும்.

**5.** ஆண்டுதோறும் கைதுசெய்யப்படும் ஆட்களிடையே போதையூட்டும் ஔடதங்களை உபயோகிக்கும் ஆட்கள் மாத்திரமன்றி, போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த வேறு பல குற்றங்களுக்காக (கடத்தல், பணமீடுபடுத்தல், விநியோகித்தல்) கைதுசெய்யப்படும் ஆட்களும் அடங்குவர். அவர்கள் மத்தியில் போதையூட்டும் ஔடதங்களை உபயோகித்த ஆட்களும் உபயோகிக்காத ஆட்களும் இருக்கின்றனர்.

**6.** அதன் காரணமாக, கைதுகள் சார்ந்த தரவுகள் ஆண்டுதோறும் அதிகரிப்பதன் அடிப்படையில் போதையூட்டும் ஔடதங்களை உபயோகிக்கும் ஆட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதென்ற முடிவுக்கு வர முடியாது.

**(க)** தற்போது ஹோமாகம பிட்டிபன காணியில் "National Education and Training Centre on Substance Abuse Management" என்ற நிலையத்தை நிறுவுவதற்கு அவசியமான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான பின்வரும் கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. *(பின்னிணைப்பு 12)*

**(ங)** இப்பண்டங்களை தற்போது தேவையுள்ள தரப்புகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(ச)** காலி நிலையத்திற்கு இணைக்கப்பட்டு தாதி அலுவலரொருவர் சேவையாற்றியதுடன், அங்கு குறித்த தாதி அலுவலரினால் சேவைபெறுநர்களின் தேகாரோக்கிய நிலையைப் பரிசோதித்து சிகிச்சையளிக்கும் பணியாட்குழுவுக்கு சிபார்சுசெய்த பின் சேவை பெறுநர்களுக்கு தேகாரோக்கிய உபகரணங்களை உபயோகிப்பதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது தாது அலுவலரொருவர் இல்லாமை, பணியாட்குழு பற்றாக்குறை என்பவற்றின் பேரில் தற்காலிக தேகாரோக்கிய உபகரணங்களை உபயோகிப்பது நின்று போயுள்ளது. எதிர்காலத்தில் தாதி அலுவலர் பதவி நிரப்பப்படவுள்ளது என்பதுடன், இதுவரை காணப்படும் நிலைமையும் தேர்தல் காலப்பகுதியும் காரணமாக அந்நடவடிக்கைகள் தாமதடைந்தது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

**(ஞ)** மீளாய்வு ஆண்டின் வரி மதிப்பீடு நிதிப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என்பதுடன், தண்டப்பணமும் உள்ளிட்ட அம்மதிப்பீடு ஜூலை மாதம் நிதிப் பிரிவுக்கு நேரடியாக சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்காக உரிய மாதத்துள் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆண்டுகளுக்காக (உதாரணம்: 2017/2018) கழிவு வழங்கப்பட்டுள்ளதென்பதை அறிவிக்க விரும்புகின்றேன். *(பின்னிணைப்பு 13)*

**(ட)** 98/2017 சபைப் பத்திரம் மூலம் *(பின்னிணைப்பு 14)* 14 பேர் உதவி உளவளத்துணையாளர் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், இப்பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு முன்னர் பணிப்பாளர் சபை அனுமதிக்கு 03/2017 சபைப் பத்திரம் மூலம் *(பின்னிணைப்பு 15)* அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள உதவி உளவளத்துணையாளர் பதவிகளின் எண்ணிக்கை 05 ஆகும்.

தொடர்பிலக்கம்: DMS/1683/Temp ஆம் இலக்க, 2016.02.23 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் மூலம் உதவி உளவளத்துணையாளர் பதவி வெற்றிடங்கள் காணப்படும் ஒரு பதவியை நிரப்புவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. *(பின்னிணைப்பு 16)*

